# ஞானச்சுடர்

சித்திரை 2017

232 ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

**பொருள்:** இரப்பவர்க்கு இல்லையென்று சொல்லாமற் கொடுக்கும் மேலான குணம் உயர்குடிப் பிறந்தவரிடத்தேயுண்டு.

(223)

இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணு மளவு.

**பொருள்:** இரப்பவர் முகமலர்ச்சியைக் காணும் வரை கொடுப்பவர் மனக்கவலை அடைவர்.

(224)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### பராபரக் கண்ணிகள் - 2



ஒருபொல்லாப்பு மில்லையென்று மொருமொழியால்
–உள்ளம்
உருகாதோ வென்றன் உயிரே பராபரமே 01

எப்பவோ முடிந்ததென எந்தை குருநாதன்
செப்புந் திருவாக்கின் சீர்தருவாய் பராபரமே 02

நாமறியோ மென்றுமுன்னாள் நல்லூரில் சொன்னமொழி
நாமறிந் துய்யவரம் நல்காய் பராபரமே 03

ஆரறிவா ரென்றுமுன்னாள் ஆசா னுரைத்தசொல்லின்
சீரறியச் செய்வாய் சிவமே பராபரமே 04

அப்படியே யுள்ளதென அன்றாசான் சொன்னமொழி
இப்படியில் யானறிய இரங்காய் பராபரமே 05

என்றுநீ யன்றுநாம் என்னுந் திருவாக்கைக்
கண்டுதொண்டு செய்யக் கருணைசெய்வாய் பராபரமே
06

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 232

2017 **பொருளடக்கம்** சித்திரை


| | | |
|---|---|---|
| கல்லையும் கனியாக்கும்... | கே.எஸ். சிவஞானராஜா | 01 -02 |
| மனிதா எங்கே போகிறாய்? | திருமதி ச. வதனி | 03 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -08 |
| மனித விழுமியச் சிந்தனை | கு. சோமசுந்தரம் | 09 -11 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 12 -15 |
| ஆலயங்களும்... | இ. சரவணபவன் | 16 -18 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 19 -21 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 22 -23 |
| சைவ சமயத்தில்... | செல்வன் க. மதுஷன் | 24 -25 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 26 -29 |
| அருணந்தி சிவாசாரியார் | க. சிவசங்கரநாதன் | -30 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 31 -32 |
| இறைவனை நம்புங்கள்... | பொன். பூலோகசிங்கம் | 33 -34 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 35 -37 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தின்... | சிவ. உமாகரன் | -38 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 39 -43 |
| பவித்திரம் பெண்களுக்கு... | திருமதி கு. மனோன்மணி | 44 -45 |
| மேன்மை கொள் சைவநீதி... | திருமதி தி. இந்திரா | 46 -52 |
| அகிலம் போற்றும் ஆச்சிரமம் | கோபிதாஸ் | 53 -54 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 55 -59 |
| பாதாரவிந்தம்... | - | -60 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# பங்குனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

231ஆவது மாத இதழாக தொடர்ந்து வரும் ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபர் திரு வ. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையின்மூலம் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளின் தன்மைபற்றியும் அதன்மூலம் சமுதாய மக்கள் அடையும் நன்மை பற்றியும் எடுத்துரைத்ததோடு இவ்வகையான ஒரு சமயம் சார்ந்த ஆன்மீக மலரானது ஒரு வித விளம்பரம் அற்ற நிலையில் தொடராக 230 மாத காலமாக வெளிவருவதென் றால் அது ஒரு சாதனை என்று கூறி இவ்வகை நிகழ்வுகளின் அடிப்படையில் சந்நிதி வேலவனையும், சந்நிதியான் ஆச்சிரமத்திற்கும் வந்து செல்லக்கூடியதாக இவ்வெளியீடு அமைகின்றது என்றதோடு தொடர்ந்து இம்மலர் வெளிவர வேண்டும். அதற்குச் சந்நிதி வேலவன் பூரண அருளாசி வழங்க வேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

கடந்த இருபது வருடகாலமாக தொடர்ந்து மாதாந்தம் வெளிவந்து கொண்டிருக்கும் பங்குனிமாத ஞானச்சுடருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும், அன்னைதாசன் என்று அனைவராலும் அழைக்கப்படும் கவிமணி க. ஆனந்தராசா அவர்கள் ஆற்றினார்கள்.

பங்குனி மாத மலர் (231) ஞானச்சுடர் மலர் பற்றிய வாசகர் கருத்தை அறியும் வகையில் அவர்களுடைய உள்ளக்கிடக்கையைத் தாங்கிய நூலாக வெளிவந்திருந்தது. அதனைக் கருத்தில் எடுத்தே திரு அன்னைதாசன் தனது மதிப்பீட்டுரையை ஆற்றினார். ஒரு மலரின் தகைமை பற்றி நாம் ஆராய வேண்டு மானால் அம் மலரை வாசிக்கும் வாசகன்மூலம்தான் அறிய முடியும். இத்தகைய செயற்பாட்டின்மூலம் மலருக்குரிய வளர்ச்சியினை முன்னெடுக்கும் ஆச்சிரமமும், பேரவையையும் வாசகர்கள் போற்றவேண்டுமென்று கூறியதோடு பங்குனி மாத மலர் பல வாசகர்களின் கருத்துக்களோடு வெளிவருவதால் அவர்களது கருத்துக் களுக்கு மதிப்பளித்து எனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்கிறேன் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையைநிறைவு செய்தார்.

உ

ஞானச்சுடர் 2017 சித்திரைமலர்

# சுடர் தரும் தகவல்

சமூகத்திற்குப் பல வகையிலும் தொண்டாற்றும் தகைமை சார்ந்த பெரியோர்களைக் கௌரவித்து மேலும் மேலும் அவர்தம் தொண்டுகளிலும் - பணிகளிலும் ஊக்கப்படுத்தும் செயற்பாட்டினை 1993முதல் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றி வந்தமை அனைவரும் அறிந்ததொன்று. ஆச்சிரமத்தில் நடைபெறும் வைகாசிப் பெருவிழாவுடன் இணைத்தபடி நடைபெறும் இந்த கௌரவிப்பானது பல்வேறு அசாதாரண சூழ்நிலை காரணமாக 2006க்குப் பின்னர் தொடர முடியாத நிலை ஏற்பட்டது.



ஆச்சிரம சுவாமிகளின் கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடுகளுக்காக அமைக்கப்பட்ட சபையினரின் ஏகோபித்த வேண்டுகோளை ஏற்று மீண்டும் இந்தக் கௌரவிப்பு நிகழ்வினைத் தொடர சந்நிதியான் ஆச்சிரமமும் - சைவ கலை பண்பாட்டுப் பேரவையும் தீர்மானித்துள்ளது.

இந்த அடிப்படையில், சைவத்திற்கும் - சமூகத்திற்கும் பெருந் தொண்டாற்றிவரும் காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் அறங்காவலர் திரு க. சோமசேகரம் (மகாராணி) அவர்கள் 21.05.2017 ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ள வைகாசிப் பெருவிழாவில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளார்.

காலையில் செல்வச்சந்நிதி ஆலய விசேட பூசை வழிபாடுகள் நிறைவெய்திய பின், திரு க. சோமசேகரம் அவர்கள் மங்கல இசை - மாலை - மரியாதைகளுடன் ஆச்சிரம மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவார்கள். மண்டபத்தில் விசேட சொற்பொழிவுகளும், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாட்டிய நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து கௌரவிப்பு நடைபெறும்.

அனைவரும் வருக!

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 01. சீர்பாத வகுப்பு

உததியிடை கடவுமர கதவருண குலதுரக
வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவி னிருளகல வொருசோதி வீசுவதும்
உடலுமுட லுயிருநிலை பெறுதல்பொரு ளெனவுலக
மொருவிவரு மநுபவன சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
யுணர்வுவிழி கொடு நியதி தமதூடு நாடுவதும்
உருவெனவு மருவெனவு முளதெனவு மிலதெனவு
முழலுவன பரசமய கலையார வாரமற
உரையவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ
வளபடியை யுணருமவ ரநுபூதி யானதுவும்
உறவுமுறை மனவிமக வெனுமலையி லெனதிதய
வுருவுடைய மலினபவ ஜலராசி யேறவிடும்
உறுபுணையு மறிமுகமு முயரமரர் மணிமுடியி
லுறைவதுவு முலைவிலது மடியேன் மனோரதமும்.

இதழிவெகு முககமன நதியறுகு தறுகணர
இமகிரண தருணவுடு பதிசேர்ஜ டாமவுலி
இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலென
இமையமயில் தழுவுமொரு திருமார்பி லாடுவதும்
இமையவர்கள் நகரிலிறை குடிபுகுத நிருதர்வயி
றெரிபுகுத வுரகர்பதி யபிஷேக மாயிரமும்
எழுபிலமு நெறுநெறென முறியவட குவடிடிய
இளையதளர் நடைபழகி விளையாடல் கூருவதும்
இனியகனி கடலைபய றொடியல்பொரி யமுதுசெயு
மிலகுவெகு கடவிகட தடபார மேருவுடன்
இகலிமுது திகிரிகிரி நெரியவளை கடல்கதற
எழுபுவியை யொருநொடியில் வலமாக வோடுவதும்
எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை
யிரலைமரை யிரவுபக லிரைதேர்க டடவியில்
எயினரிடு மிதணதனி லிளகுதினை கிளிகடிய
வினிதுபயில் சிறுமிவளர் புனமீது லாவுவதும்.

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திருமதி S. சிவக்கொழுந்து**
(சிரேஷ்ட முகாமையாளர், நிதிப்பிரிவு ம.வ தலைமை அலுவலகம், கொழும்பு)
**திருமதி எழில்மதி ஜெயநாதன்**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி தெமட்டகொட, கொழும்பு)
**திருமதி G. பாலமதி**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, செட்டித்தெரு, கொழும்பு)
**திருமதி S. லோஜினி**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)
**திருமதி S. சாஜிசுதா**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி வெள்ளவத்தை)
**அப்பர்சாமி கோபாலகிருஷ்ணன்**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
**திருமதி அ. மீரா**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**திருமதி யு. சுபாசினி**
(மக்கள் வங்கி பருத்தித்துறை)
**தி. சசீவன்**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)
**செல்வி க. ஜனனி**
(மக்கள் வங்கி, கிளிநொச்சி)
**நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)
**நா. குகன்**
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)
**பொ. பாலசிங்கம்**
(பத்தமேனி, அச்சுவேலி)
**இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**திருமதி ஸ்ரீனிவாசன்**
(பழம்றோட், கந்தர்மடம்)
**Dr R. பாக்கியநாதன்**
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)
**திருமதி சிவராஜா**
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)
**செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்**
(யாழ்ப்பாணம்)

**வீ. கிருஷ்ணராஜா**
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)
**சி. கனகசபாபதி**
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)
**மா. குலநாதன்**
(நாதன் கராஜ், அச்சுவேலி)
**ச. மனோகரி**
(சுண்ணாகம்)
**ஐயாத்துரை முருகதாசன்**
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)
**செ. மகேஸ்வரன்**
(கோப்பாய் வடக்கு)
**செ. சிவராசா**
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)
**S. தர்மபாலகிருஷ்ணன்**
(தும்பளை பருத்தித்துறை)
**த. நடேசன்**
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
**க. கிரிதரன்**
(திரு இல்லம், கரவெட்டி)
**வீரையா சிவஞானம்**
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
**க.கு. கிருபாகரராசா**
(பிரதானவீதி, ஆவரங்கால்)
**இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)
**சி. நந்தகுமார்**
(வங்கி ஊழியர், உரும்பராய்)
**ச. கனகராசா**
(யாழ்ப்பாணம்)
**சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்**
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
**வ.க. சாம்பசிவம்**
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)
**சி. அமிர்தசாகரன்**
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)
**தி. பாலசிங்கம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**சி. சுகிர்தலிங்கம்**
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)
**T. இரவீந்திரதாஸ்**
(சாமியன் அரசடி, கரவெட்டி)
**சி. குமாரவேல்**
(தலைவர், சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)
**உரிமையாளர்**
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)
**க. ஞானச்சந்திரன்**
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
**ஐ. நற்குணநாதன்**
(உடுவில், சுண்ணாகம்)
**இ. ஸ்ரீஸ்கந்தராம்**
(உப தபாலதிபர், உரும்பராய்)
**வே. சந்திரசேகரம்பிள்ளை**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**K. இராமச்சந்திரன்**
(சங்கானை)
**த. இராஜசிங்கம்**
(நீர்வேலி)
**ம. புலேந்திரன்**
(கரணவாய், கரவெட்டி)
**கி. தவராசா**
(காந்தியூர், புலோலி)
**ஐ. சத்தியபாலன்**
(பலாலி வீதி, உரும்பராய்)
**க. இராஜேஸ்வரி**
(சுண்ணாகம்)
**செ. ஸ்ரீனிவாசன்**
(அல்வாய்)
**செல்வி சந்திரலிங்கம் மாதுமை**
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
**சுப்பிரமணியம் சுரேஸ்குமார்**
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
**க. கணேசதேவா**
(மாதகல்)
**அதிபர்**
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)

**வி. செல்வரெத்தினம் J.P**
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)
**ஐ. குகேந்திரராணி**
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
**N. பாலசுப்பிரமணியம்**
(நீர்வேலி வடக்கு)
**ம. கந்தையா**
(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)
**க. மகேந்திரன்**
(சங்கத்தானை, சாவகச்சேரி)
**தங்கராசா கலாஜோதி**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
**செல்வி பாலாம்பிகை கந்தசாமி**
(கட்டைவேலி, கரவெட்டி)
**S. தங்கேஸ்வரா**
(காட்டுப்புலம்)
**ம. சிவானந்தம்**
(நாவலர் றோட், யாழ்ப்பாணம்)
**எஸ்.ரி. குமரன்**
(மல்லாகம்)
**பொ. காசிலிங்கம்**
(கொக்குவில்)
**கா. செல்லத்துரை**
(உடுவில், சுண்ணாகம்)
**வீ. புஸ்பநாதன்**
(உரும்பராய் வடக்கு)
**சந்திரசேகரம் மகிந்தன்**
(சிறுப்பிட்டி மேற்கு)
**தர்சினி பகீரதன்**
(உப தபாலதிபர், நீர்வேலி)
**கு. குணரூபன்**
(மீசாலை கிழக்கு)
**வ. ஆறுமுகம்**
(இளை. அதிபர், ஆவரங்கால்)
**கி. வரதராசன்**
(அச்சுவேலி தெற்கு)
**அ. சந்திரகுமாரன்**
(சந்திரகோட்டம், சுழிபுரம்)
**வி. நாகம்மா**
(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)

உ

# ஞானச்சுடர் 2017 சித்திரைமலர்

# கல்லையும் கனியாக்கும் நல்லை ஆதீனம் இனிதாகுமே

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

"என்றும் வேண்டும் இன்ப அன்பு" என்ற அருள்வாக்கிற்கமைய, எமக்குப் பருவம் வந்த காலம் தொடக்கம் நல்லை ஆதீனம் சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றி வருகிறது.

மணிஐயர் காலத்திலிருந்து, உபந்நியாசம், கதாகாலேட்சபம், பிரசங்கம், பண்ணிசை, சங்கீதம், சமய வகுப்பு, சிவதீட்சை, புராணபடனம், இசைவிழா, நூல்வெளியீடு, அரங்கேற்றம், சைவசமய கலாச்சாரப் போட்டிகள், பண்பாட்டு விழுமியம் பேணும் விழாக்கள் எனக் காலம் கருதிய அனைத்தையும் ஆதீனம் திருப்தியோடு ஆற்றி வருகிறது.

## ஆதீனம்

இந்தியாவில் பொதுவாக ஆதீனங்கள் அந்த நாட்டின் "சமதர்ம சகவாழ்வு சாம்ராஜ்ஜியத்திற்காகவும்", சமய தாற்பரியங்களுக்காகவும், சமய கலை, கலாச்சார, பண்பாட்டு வளர்ச்சிக்காகவும், புராதன தமிழ்ப் பாரம்பரிய, சைவ, சித்தாந்த, உபந்நியாச, திருமுறை, வேத, மந்திர, சிவாகம அனுட்டானங்களுக்காகவும் மிகுந்த தொண்டாற்றி வருகிறது. மேலும் வாழையடி வாழையாக ஆதீனங்கள் சீடர்களை வளர்த்தும் வருகிறார்கள். அது ஆதீனங்களின் தேவையுமாகும். ஒவ்வொரு ஆதீனத்திற்கும் ஒவ்வொரு சம்பிரதாயங்கள் உண்டு. உடை நடை பாவனை உண்டு. ஒழுக்க விழுமியங்கள் உண்டு. உயர்ந்த இலக்கு உண்டு. வழி காட்டவல்ல பக்கபலம் உண்டு. வகுப்புக்கள் உண்டு. நூல் நிலையங்கள் உண்டு. ஆலய வழிபாடுடைய வசதிகள் உண்டு. நிர்வாகக் கட்டமைப்பு உண்டு. நாளாந்த குறிப்பேடு உண்டு. கணக்கு வழக்குண்டு. எல்லாவற்றிற்குமேலாக ஆதீனங்கள் யாவும் அறிவுப் பொக்கிஷம். யாரையும் தீண்டாத பக்குவமுடையது. அதேபோல ஏனையவர்களும் சீண்டாத புனிதம் உடையது. காலத்திற்குக் காலம் அடுத்த வாரிசுகளைச் சிபார்சு செய்யும் சீரான யாப்புடையது. தெய்வம் வருகை தந்து கூடிக்குலாவும் பாங்குடையது. கௌரவத்தையும், பட்டங்களையும் நடுநிலையோடு முதிர்ந்த பேறுஉடையவர்க்கு வழங்க வல்லது. பணத்திற்கும், பந்தங்களுக்கும் அரசியல் குறுக்கீடுகளுக்கும் இடந்தராதது. ஆதலால் ஆதீனங்கள் பிசகுவது இல்லை. வெற்றி பெறுகின்றன.

## நல்லை ஆதீனம்

இலங்கையில் சைவத்தையும், தமிழையும், பண்பாட்டையும், கலாச்சார விழுமியங்களையும், ஒழுக்கத்தையும் பேணிப் பாதுகாக்கும்- அதேவேளை அவற்றை வளர்ப்பதிலும் முன் நின்று பணியாற்றுவதில் நல்லை ஆதீனம் அளப்பரிய சேவையாற்றி வருகிறது. இது நாடறிந்த விடயமாகும். மணி பாகவதர், மணிஐயர், குருமகா சந்நிதானம், ஆதீனம்,

முதல்வர், பஜனாதிபதி, உபந்நியாசாதிபதி, பிரசங்கவாரிதி, சைவசமய பீடாதிபதி, ஆதீன கலாநிதி என முன்னைய முதல்வர் அலங்கரிக்கப்பட்டதுபோல, தற்போதைய, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்-இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்களும், அதனது கௌரவம் பேறாகும் படியாக, குறைவின்றி ஆற்றிவருவது இலங்கை செய்த பாக்கியமாகும்.

**சிறப்பு**



தற்போதைய ஆதீன முதல்வர் அவர்களது தோற்றப்பாடு, செந்தழிப்பு, அருட்பார்வை, தமிழ்வளம், தமிழ் உச்சரிப்பு, சைவ சமயப் பொலிவு, திருவருட்கடாட்சம், பேதமில்லாத வாழ்வு, திருமுறைச் செறிவு, புராண இதிகாச வரலாற்றுச் சொற்பெருக்கு, சிவசிந்தனை, புன்னகை பூத்த வதனம் யாவுமே யாழ்ப்பாணம் மட்டுமல்ல உலக சைவ சமய வியாபகத்தின் அடையாளங்களாகும். இத்தகு நிலை நல்லை ஆதீனத்தின் முத்திரைகளாகும். ஏனைய மதங்களில் மதகுருமார்களை எவ்வாறு போற்றிக் கௌரவமளிக்கிறார்களோ அதேபோல நல்லை ஆதீன முதல்வருக்கும் உலகம் தலை வணங்குகின்றது. இந் நிலையில் இந்த மண்ணும் அவருக்கு ஏற்ற கௌரவத்தை அளித்து மாண்புறுகிறது. அவரை நானும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

மேலும், ஆதீன முதல்வர் என்னதான் சோதனை வந்தபோதும் எல்லாவற்றிலும் எல்லாம்வல்ல பரம்பொருளையே துணையாகவும் கொண்டு சைவசமயத்தினைத் தனது குருமுதல்வரின் ஆணைப்படி காப்பாற்றி யும், வெல்லவும் வைத்துள்ளார். அவரது உடல், பொருள், ஆவி, மொழி, நடை, உடை, பாவனை, சிவசின்னம் அனைத்துமே **கல்லையும் கனியாக்க** வல்லதாகும்.

அவரது சுயமான கருத்துக்கள் எதுவாயினும், அவர் பரந்த நோக்குடன் செயற்படுபவர் என்பதனால், யாவும் இனிதாகவே இந்த மண்ணில் அமையும் என்பது எனது பார்வையாகும். என்றும் வேண்டும் இன்ப அன்பு!

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மே | 30 | வைகாசி 16 | செவ்வாய் | நமிநந்தியடிகள். |
| | | | | சேக்கிழார் |
| யூன் | 10 | வைகாசி 27 | சனி | திருஞானசம்பந்தர். |
| | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| யூன் | 28 | ஆனி 14 | புதன் | மாணிக்கவாசகர் |

*நம்மை உயர்த்துவது செயலன்று ஆர்வமே.*

# மனிதா எங்கே போகிறாய்?

– திருமதி ச. வதனி அவர்கள் –

இன்று மனித இனம் அழிவுப் பாதை நோக்கி வேகமாக முன்னேறி வருகிறது. மனிதன் மனித உருவில் வாழும் பயங்கரப் பிராணியாக வாழ்ந்து அழிந்து கொண்டிருக் கின்றான். உலக நாடுகளும் மக்களும் இன்று பிறர் அழிவில், பிறர் துன்பத்தில் இன் பம் காணும் அளவிற்கு முன்னேறியுள்ளனர் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

உலகில் மக்களின் சுவாசத்தின் மூலம் வெளிப்படும் விஷவாயுக்கள், தீய எண்ண அலைகள், அசுர எண்ண பிரபாவங் கள் ஆகாய மண்டலத்தில் அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றன. அதையே மீண்டும் சுவாசிக்கும் மனிதன், ஏனைய ஜீவராசிகள் உட்பட விஷத்தன்மை உடையனவாக மாறு கின்றன. இதன் விளைவாக இயற்கை மாறி இயற்கையின் சீற்றங்களாக பூகம்பம், வெள் ளம் என்பனவும் யுத்தம் போர்வெறி, மத வெறி, அரசியல் வேறுபாடுகள் என்பனவும் ஏற்பட்டு உலகம் பேராபத்தையும் பேரழிவை யும் உண்டாக்கி அழியும் நிலைக்கு வந்து கொண்டிருப்பதை அனைவரும் அறிவீர்கள். இந்நிலை மாறி உலகம் அமைதி, ஆனந்தம் உடையதாகச் செயற்பட்டு தருமம் நிலைத்து மக்களிடையே அன்பு, பாசம், பரிவு போன்ற தெய்வ குணங்கள் ஏற்பட்டு எதற்காகப் பிறந் தோமோ அதன்படியே வாழ்வமைத்து வள்ளு வப் பெருமான் கூறியவாறு "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய் வத்துள் வைக்கப்படும்" என்றவாறு வாழ வேண்டும். தெய்வத்தோடு தெய்வமாக இரண் டறக் கலந்து வாழ வேண்டிய மனிதன் மிருகங்கள் ஜந்துக்கள் பறவைகளிலும் பார்க்க மோசமாக வாழ்கின்றான்.

மனிதனைவிட மிருகங்கள், பறவை கள், தாவரங்கள் தம்முள் தெய்வத்தன் மையை ஈர்த்து சக்தி பெற்று ஞானத்துடன் வாழ்ந்து வருகின்றன.

கொடிய பயங்கர பிராணியான புலி யின் அடையாளம் தலைவலி, உடல் வலித் தைலமாக பயன்படுத்தப்படுகின்றது. பாம்பின் விஷத்தை சப்பாத்து பொலிஷிற்கு பயன் படுத்துகின்றான். அவ்வாறே யானை அடை யாள குளிர்பானங்கள், சிங்க அடையாளத் தில் பியர், பூனை அடையாளத்தில் பற்றரி என்பன உண்டு. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் அடையாளத்தில் தலையையும் எலும்பையும் காட்டி அபாயம், விஷம் என அடையாளப்படுத்திக் காட்டுகின்றான் மனிதன்.

புலியின் தோல், கொழுப்பு, நகம், பல் என்பன பூஜைக்கு ஏதோவொரு வகை யில் பயன்படுகிறது. மானிலிருந்து கஸ்தூரி எடுக்கப்படுகிறது. பசுவில் இருந்து கோரோ சனை எடுக்கப்படுகிறது. பாம்பின் விஷத்தை புற்றுநோய்க்கு மருந்து செய்ய எடுக்கிறார் கள். இவை விலை மதிப்பற்ற பொருளாகக் கருதப்படுகின்றது. யானை இருந்தாலும் சரி இறந்தாலும் சரி ஆயிரம் பொன் என்று சொல் வார்கள்.

மனிதரில் இருந்து பெறப்படும் எந்தப் பொருளும் மனிதனுக்கும் மற்ற ஜீவராசி களுக்கும் கூடப் பயன்படுவதில்லை. மனிதன் பார்த்தால் திருஷ்டி என்பார்கள். (கண்ணூறு) பேசினால் நாவூறு என்பார்கள். மனிதன் பார்வையில் விஷம், நாக்கில் விஷம், எண் ணத்தில் விஷம் கொண்டவனாக இருக்கின் றான். மனிதனின் தலைமுடி, நகம், மண்டை யோடு, காலடி மண் என்பன மனித அழிவிற்கே

பயன்படுகிறது. கொடிய மிருகங்கள், பறவைகள்கூட இறைவனிடத்தில் ஓரிடத்தைப் பெற்றுள்ளன. பசு, குதிரை, பாம்பு, கருடன் என்பவற்றை மனிதன் தெய்வமாக வணங்குகிறான். மிருகங்களின் நற்குணங்களையும் தெய்வீக சக்தியையும் ஈர்த்து சித்தர்கள் ஆனவர்கள் பலர்.

சிவனுக்கு ஆபரணமாக பாம்பு, வாகனமாக எருது, விஷ்ணுவிற்கு கருடன், முருகனுக்கு மயில், துர்க்கைக்கு சிங்கம், விநாயகருக்கு எலி, சனீஸ்வரனுக்குக் காகம், வைரவருக்கு நாய் என மிருகங்கள் தெய்வத்துக்கு நெருக்கமான வாகனங்களாக உள்ளன. ஆனால் மனிதன் சிவனுக்குத் தக்கனாக, முருகனுக்கு சூரபத்மனாக, காளிக்கு சண்டமுண்டகராக, நாராயணனுக்கு இரணியனாக இறைவனுக்கு எதிரியாகத்தான் உள்ளான்.

உலகத்தையும் மனிதனையும் படைத்த இறைவன் எப்படி வாழவேண்டும் என்று வேதங்கள் மூலம் உணர்த்தினார். இதையும் உணராமல் மனிதன் துன்புறுகிறான் என்று பல அவதாரங்கள் எடுத்து வாழ்ந்துகாட்டி பல உபதேசங்களையும் புரிந்து உள்ளார். இவற்றை அலட்சியப்படுத்தி மனிதன் வாழ்வதால் துன்பத்திற்குள்ளாகி வேதனைப்படுகின்றான்.

ஆண்டவன் விஷ ஜந்துக்கள், கொடிய மிருகங்கள், விஷத் தாவரங்கள் இவற்றை எல்லாம் ஏன் படைத்தான் என வினவுகிறார்கள். படைத்ததெல்லாம் படைத்தான் மனுவிற்காக என்று முதுமொழி உண்டு. அதாவது இவற்றை படைத்ததற்கான காரணம் மனிதனின் விஷத் தன்மை பொருந்திய பார்வை சுவாசம் எண்ணம் என்பவற்றின் மூலம் வெளியாகும் விஷ ஜீவ அணுக்களை இவை தம்முள் இழுத்து வைத்துக்கொள்ளும். அப்படி வைத்துக்கொள்ளாவிட்டால் அவை ஆகாய மண்டலத்தில் பரவி நல்ல மனிதர்களுடைய சுவாசவழி சென்று அவர்களையும் தீயவராக விஷத்தன்மை பொருந்தியவராக மரணிக்கச் செய்யலாம்.

கலியுகத்தில் நடக்கும் செயல்களால் பெரும் மகான்கள் தம்மை யாரென்று காட்டிக்கொள்ளாது தம் சக்தியை மறைத்துக் கொண்டு வாழ்வார்கள். தர்ம தேவதை துன்புறும்போது உலகை மறைமுகமாக ஆளும் சப்தரிஷிகள் தம்மை அடுத்து நிற்கும் சீடர்கள்மூலம் காயத்திரி மந்திரம், தியானம், யாகம் என்பவற்றை பரவச் செய்து நிலைநாட்டுவார்கள்.

மேலும் கலியுகத்தில் நடக்கப் போவது பற்றி தம்முடைய ஞானத்தினால் அறிந்து மகரிஷிகள் எழுதி வைத்துள்ளனர். அதன்படியே தற்காலத்தில் நிகழ்ந்து வருகிறது. பின்பு தர்ம தேவதைகளின் வழிகாட்டலினால் மும்மாரி பொழியும். மன்னர்களும் மக்களும் தான தரும உபசாரம் செய்து சத்திய நடத்தை உடையவர்களாகி விடுவர். ஆயுள் விருத்தியாகும். ஜெபம், யாகம், தேவதா பூஜை கிரமமாக நடைபெறும். இறைவழி நிற்பவர்களுக்கு சகல நோய்கள், சத்துரு பீடை என்பன அகன்று பெருவாழ்வு வாழ்வார்கள் என மார்க்கண்டேய மகரிஷி கூறியுள்ளார்.

**"வசதியுள்ளவர்களால்த்தான் பண உதவி செய்து புண்ணியம் செய்ய முடியும். நாம் என்ன செய்யலாம்?" என்று மற்றவர்கள் எண்ணக்கூடாது. சரீரத்தால் மற்றவர்களுக்குக் கைங்கரியம் செய்வது பெரிய புண்ணியம். ஒவ்வொருத்தரும் பிறருக்குக்கூடத் தெரியவேண்டாம் ஏதோ ஓர் ஒற்றையடிப் பாதைக்குப் போய் அங்கே உள்ள முள்ளை, கண்ணாடியை அப்புறப்படுத்தி வந்தால் போதும், அது சித்தசுத்திக்குப் பெரிய உதவி.**

*பிறரது குற்றங்களைப்பற்றி ஒருபோதும் பேசாதே.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

34. தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழுக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே.

**ப-ரை:**

தேவர் கோ அறியாத தேவ தேவன்- தேவர்கட்கு அரசனாகிய இந்திரனும் அறியமாட்டாத மகாதேவனும், செழு பொழில்கள் பயந்து காத்து அழிக்கும்- செழுமை பொருந்திய உலகங்கள் அனைத்தையும் படைத்தும் காத்தும் அழித்தும் முத்தொழில் செய்கின்ற மற்றை மூவர் கோனாய் நின்ற முதல்வன்- தன்னின் வேறாகிய பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மூவர்க்கும் தலைவனாய் நிலைபெற்ற முதல்வனும், மூர்த்தி- அட்ட மூர்த்தியாயுள்ளவனும், மூதாதை- பிரமன் திருமால் உருத்திரன் சதாசிவன் ஈசுவரன் என்பவர்களுக்குத் தந்தையாகிய சதாசிவமூர்த்திக்கும் தந்தையாயுள்ளவனும், மாது ஆளும் பாகத்து எந்தை- உமையம்மையார் தமதாக்கிக் கொண்ட இடப்பாகத்தையுடைய எங்கள் தந்தையும். யாவர் கோன்- எல்லார்க்கும் தலைவனுமாகிய சிவபெருமான், வந்து என்னையும் ஆண்டு கொண்டான்- வலிய வந்து ஒன்றும் போதா நாயேனையும் ஆளாகக் கொண்டருளினான்; நாம் ஆர்க்கும் குடி அல்லோம்- ஆதலால் இனி நாம் பிறரெவர்க்கும் அடிமை அல்லோம்; யாதும் அஞ்சோம்- எதற்கும் சிறிதும் அஞ்சுவோ மல்லோம். அவன் அடியார் அடியாரோடு மேவினோம்- அவ்விறைவனுடைய அடியார்க்கும் அடியாரோடும் சேர்ந்துள்ளோம்; மேன்மேலும் குடைந்து ஆடி ஆடுவோம்- மேலும் மேலும் அவனது பேரின்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து ஆனந்தக் கூத்து ஆடுவோம்.

தேவர்கட்கு அரசனாகிய இந்திரனும் அறியாத மகாதேவனும் உலகங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து அழிக்கின்ற மற்றைய பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மூவர்க்கும் தலைவனாய் நின்ற முதல்வனும் அட்டமூர்த்தியாயுள்ளவனும், மூதாதையாயுள்ளவனும் உமையம்மையார் ஆளும் இடப்பாகத்தையுடைய எங்கள் தந்தையும்,

யாவர்க்கும் தலைவனுமாகிய சிவபெருமான் வலிய வந்து என்னையும் ஆளாகக் கொண்டருளி னான். ஆதலால் இனி நாம் பிறர் எவர்க்கும் அடிமையல்லோம்; யாதும் அஞ்சோம்; அவ்விறைவனுடைய அடியார்க்கும் அடியாரோடும் சேர்ந்துள்ளோம், மேலும் மேலும் அவனது பேரின்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து ஆனந்தக் கூத்தாடுவோம் என்பதாம்.

இறைவனது இறைமைக்குணத்தினைக் கூறத்தொடங்கிய அடிகள் முதலில் "தேவர்கோ வறியாத தேவதேவன்" என்றும், பின்னர் அவனில் மேம்பட்ட பிரம்மன் முதலிய மூவர்க்கும் தலைவனாய் உள்ளவன் என்றும் அட்ட மூர்த்தங்களையுடையவன் என்றும் கீழுள்ள பிரமன் முதலியோர்க்குத் தாதையாகிய சதாசிவமூர்த்திக்கும் தாதையுள்ளவன் என்றும் உமையம்மையாளும் பாகத்தையுடையவன் என்றும் எங்கள் தந்தை என்றும் கூறியருளி இவையெல்லாவற்றையும் சேர்த்து முடித்தற் பொருட்டு "யாவர்கோன்" என்றும் அருளிச் செய்தார்.

தேவர்கோ- தேவர்கட்கு அரசனாகிய இந்திரன். அவன் பசுபோத முனைப்பினால் இறைவனைக் காணமுடியாமையின் "தேவர்கோ அறியாத தேவ தேவன்" என்றார். தேவதேவன்- தேவர்க்குத் தேவன். மகாதேவன் என்றவாறு "ஆதிமூர்த்திக் கருள்புரிந்தருளிய தேவதேவன்" (கீர்த்தி 122) தேவதேவன் மெய்ச் சேவகன்" (சென்னிப்1) என அடிகள் பிறாண்டு அருளியமை யுங் காண்க. "மிகுதேவர்க்குந் தேவன்" திருமந்திரம் 2636. தேவன் என ஒருமையாற் கூறி னார் தேவர்க்கும் மேலாகிய தேவன் ஈசன் ஒருவனேயாதலின்.

பொழிகள் என்றது உலகங்களை, பயந்து- பெற்று. "நீண்ட தோளினாய் நிற்பயந் தெடுத்த யான்" (கம்ப. மந்திரப் 63) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈண்டு படைத்து என்னும் பொருட்டாய் நின்றது. "பயந்து காத்து அழிக்கும்" என்புழி வினையெச்சங்கள் எச்சப்பொருள் தாராமல் செவ்வெண் மாத்திரையே குறித்து நின்றன. "சக்கரமும் கந்தித்துச் சுழலுமாப் போன்" (சிவஞானசித் சூத் 10 செய்யுள் 6) என்புழிப்போல மற்றைய என்பது தன்னின் வேறாகிய பிறிதுபொருளில் வந்தது. பிரமன் முதலியோரைக் கொண்டு படைத்தல் முதலிய தொழில்களைச் செய்விக்கும் பெருந்தலைவன் இறைவனாதலின் "மூவர்கோன்" என்றார். "மூவண்ணல் தன்சந்நிதி முத்தொழில் செய்ய வாளா மேவண்ணல்" எனப் பரஞ் சோதி திருவிளையாடற் புராணத்து (கடவுள் வாழ்த்து 1) வருதலும் காண்க.

மூர்த்தி- அட்ட மூர்த்தி. "அட்டமூர்த்தி யழகன்" (சென்னிப் 2) எனவும், "அட்டமூர்த் தியை மட்டவிழ்சோலை யாரூரானை" (தே.சுந். 59:2) எனவும் வருவன காண்க. அட்டமூர்த்தம் நிலம் நீர் தீ வளி வான் உயிர் ஞாயிறு திங்கள் என்னும் எட்டுமாம். அவற்றைத் தனது மூர்த்த மாகக் கொண்டு தான் மூர்த்திமானாய்ப் பவர் முதலிய எட்டுத் திருநாமங்களோடு விளங்குபவன்.

"நில நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்"
(தோணோ 5)

என அடிகளும்,

"அட்ட மூர்த்தியதாகிய வப்பரோ" தே. 124:3

என அப்பரடிகளும் அருளியமையுங் காண்க.

மூதாதை- முது+தாதை. தந்தைக்குத் தந்தை. பிரமன் முதலியோருக்குத் தந்தையாகிய சதாசிவனுக்குத் தந்தையாகலின் இறைவனை மூதாதை என்றார். "மாதாளும்

பாகந் தெந்தை" என்றதனால் உமையம்மையார் அக்கினியும் சூடும்போலக் குணமாகாது இறைவனோடு ஒருங்கு நிற்பவர் என்பது கூறியவாறு.

மால் பிரமன் மற்றொழிந்த தேவர்கள் முதலிய எல்லாருக்கும் தலைவன் இறைவனாதலின் "யாவர் கோன்" என்றார். யாவர்கோன் என்பதில் யாவர்க்கும் கோன் என்னும் நான்கனுருபும் முற்றும்மையும் தொக்கு நின்றன. என்னையும் என்பதில் உம்மை இழிவு சிறப்பு. வந்து ஆட்கொண்டான் என்றது அம் முழுமுதல் இறைவன் கைம்மாறு கருதாத பெருங்கருணையினால் தானே வலிய என்னை ஆட்கொண்டான் என்றவாறு. "தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும் வான்வார் கழல்" (திருவெம். 6) என அடிகள் அருளியவாறுங் காண்க.

அவ்வாறு இறைவன் ஆட்கொண்டமையால் யாம் இனிப் பிறர் எவர்க்கும் அடிமையல்லோம்; எதற்கும் சிறிதும் அஞ்சோம் என்பார். "நாமார்க்கும் குடியல்லோம் யாது மஞ்சோம்" என்றார். "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்.... கோமாற்கே நாமென்றும் மீளா வாளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே" (நாவு 312.1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

"அங்கவர்தந் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப் பாடி
எங்குமியாம் ஒருவர்க்கும் எளியோ மல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்றிறுமாப் பெய்தித்
திங்கள் முடி யாரடியார் அடியோ மென்று
திரிந்திடுவர்" சூத். 12.

எனச் சிவஞானசித்தியாரில் வருதலும் ஈண்டறியற்பாலது. குடியென்றது ஈண்டு அடிமை என்னும் பொருட்டு. "தாமார்க்குங் குடியல்லாச் சங்கரன்" (நாவு 312:1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

யாதும் அஞ்சோம் என்பதில் யாதுக்கும் என்னும் நான்கனுருபு தொக்கது. இனி அதுவே இரட்டுற மொழியால் சிறிதும் என்ற பொருளையும் தந்தது. யாதும் என்னும் உபலட்சணத்தால் யாவர்க்கும் அஞ்சோம் என்பதும் கொள்க. யாதும் என அஃறிணையாற் கூறியது உயிர்களுக்குப் பேரச்சத்தைத் தருகின்ற யமனுக்குக் "கூற்று" என்னும் அஃறிணைப் பெயரும் உளதாதல் பற்றியாகும், "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என அப்பரடிகள் அருளியமையுங் காண்க.

அடியார் அடியார்- இறைவன் அடியார்க்கு அடியார். "உன்னடியாரடி யாரடியோம்" "அடியா ரடியோம்" (திருப்படை 2,8) என வருவனவுங் காண்க. அடியாரொடும் மேவினோம் எனக் கூட்டி இறைவன் ஆண்டு என்னை அடியாரிற் கூட்டினமையின் அடியாரொடு மேவினோம் எனவுரைக்க. "அப்பனாண்டு தன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே" (அதிசய 1) "அடியா ரடிக்கூட்டிய அற்புதமறியேனே" (அற்8) என அடிகள் அருளியமையுங் காண்க. பேரின்பம், வெள்ளம் போல இடையீடின்றிப் பெருகுதலினாலும், அதனை நுகரும் தோறும் தெவிட்டப் பெறாமையானும் "மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே" என்றார். "இன்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர்" (திருப்பாண்டிப் 3) எனவும் "ஆனந்த

வெள்ளம் வற்றாது முற்றாது" (கோவை 307) எனவும் அடிகள் அருளியமையுங் கொள்க. ஆடுவோம்- பேரின்பத்தில் மூழ்கிய ஆனந்தத்தாற் கூத்தாடுவோம்.

இதன்கண்; தேவதேவன், மூவர்கோன், மூர்த்தி. மூதாதை மாதாளும் பாகத்தெந்தை, யாவர் கோன் எனக் கூறப்பட்ட இறையியல்புகள் சுட்டியறியப்படுவனவன்மையின் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. (தொடரும்...

## எமை விட்டுச் செல்ல விதி வந்தாச்சோ?



இன்னிசையாலே எங்கள்
இதயங்கள் கொள்ளை கொண்ட,
பொன் மனச் சாந்தனே! நற்
புகழ் பூத்த கலைஞனே! உம்
இன்னுயிர் பிரிந்ததால் எம்
இதயங்கள் கலங்கிற்றிங்கே!
புன்னகை பூத்த உங்கள்
பூமுகம் காணல் எங்கே?
மண்ணையே நேசித்திங்கு
மகிழ்ந்து நீ பாடிவைத்த
எண்ணற்ற பாடல்தம்மை
எளிதினில் மறப்பாரில்லை!
பண்ணோடு இறைவன்மீது
பாடிய பாக்களெல்லாம்
திண்ணமாய் எங்கள் மண்ணில்
தினந் தினம் ஒலிக்கும்! உண்மை!
பிட்டுக்கு மண் சுமந்த
பெருமானைப் பாடி வைத்தீர்!
இட்டமோ டெங்கும் சென்று
இசை மழை பொழிந்தும் நின்றீர்!
எட்டுத் திசையும் உன்னை
ஏத்தியே புகழ, எம்மை
விட்டு நீ செல்வதற்கு
விதியது வந்தாய்ச்சோ?
சந்நிதி ஆச்சிரமத்தின்
சபைகளில் வந்து நீயும்
இன்னிசையாலே எங்கள்
இறைவனைப் பாடிச் சென்ற
நின் நாமம் எங்கள் மண்ணில்
நிலைத்துமே நிற்கும்! அன்பா!
நின் ஆத்ம சாந்திக்காக,
நிமலனை இறைஞ்சுகின்றோம்!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

-கி. குலசேகரன்-

*அனைத்திலும் நல்ல மருந்து நம்பிக்கையாகும்.*

# மனித விழுமியச் சிந்தனை

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

இற்றைக்குப் பல்லாண்டுகளுக்கு முன்னர், ஒரு முதியவர், கையில் அகல்விளக்கு ஒன்றினை ஏந்திக்கொண்டு, சனசஞ்சடி உள்ள தெருவோரத்தில் நின்று, அத்தெருவால் போவோர் வருவோர்களை அணுகி, அவர்களை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை, முழுமையாக ஒருமுறை பார்த்துவிட்டு, முகத்தில் வேதனைக் கீறல்கள் படர, தலையை அசைத்துக்கொண்டு ஓரமாக ஒதுங்கி நிற்கும் காட்சி பலரின் கவனத்தை ஈர்த்தது. இது, ஒருநாள் இருநாள் அல்ல; பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. பட்டப்பகலில் கையில் விளக்கோடு நிற்கும் அந்த முதியவரின் செயல்களை உற்றுநோக்கிய பலர், அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என எண்ணினர். சிலர் பரிகாசம் பண்ணினர். ஆனால் முதியவருக்குத் தெரியும், யார் யாருக்குப் பைத்தியம் என்று.

ஒருநாள், ஒருவர் அம்முதியவரை அணுகி, "நீங்கள் தினமும் இந்தமாதிரி, இந்த வீதியால் செல்பவர்களைப் பார்க்கிறீர்கள். பார்த்த பின்னர் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுகிறீர்கள் அப்படி, யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த முதியவர், "நான் ஒரு மனிதனைத் தேடுகிறேன்" என்றார்.

"யார் அந்த மனிதன்? உங்கள் உற்றாரா? உறவினரா? அம் மனிதனின் விபரங்களைச் சொன்னால், நாங்களும் தேடிப்பார்க்கலாமே" என்றார் அவர்.

அதனைக் கேட்டுவிட்டு உரக்கச் சிரித்தார் முதியவர். பின்னர், "நான் தேடுகின்ற மனிதனை உங்களால் தேடிக் கண்டு பிடிக்க முடியாது" என்று கூறினார். அதற்குள் ஒரு சிறு கூட்டமே அங்கு கூடிவிட்டது. வேடிக்கை, விநோதம் என்றால் கூட்டம் கூடுவது இயல்புதானே.

"இது சந்தை கூடும் இடம். இந்தப் பிரதேசத்தில் உள்ளவர்களும், வெளியூர்களிலிருந்தும் கூட மக்கள் இங்கு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்துமா, நீங்கள் தவறவிட்ட மனிதனைக் கண்டுபிடிக்க முடியாமல் தடுமாற்றம் அடைகிறீர்கள்" என்றார் அக்கூட்டத்தில் ஒருவர்.

அதற்கு அம் முதியவர், "நான் தவறவிட்ட மனிதனைத் தேடவில்லை. அப்பேர்ப்பட்டவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்களே, நான் தேடுவது தவறுகள் விடாத ஒரு மனிதனை" என்றார்.

"தவறு விடுவது மனித இயல்பு. அவ்வாறிருக்கத் தவறுகளே விடாத மனிதன் எப்படிக் கிடைப்பான்?" என்றொரு கேள்வி, அக்கூட்டத்தில் எழுந்தது.

"தவறுகளே செய்யாத மனிதனைத் தேடுவது பைத்தியக்காரத்தனம்" என்றார் மற்றொருவர்.

அவற்றையெல்லாம் செவிமடுத்த அந்த முதியவர், "அப்படியாயின் பைத்தியங் கொள்ளலும் மனித இயல்புதான் போலும்" என்றார். பின்னர் தொடர்ந்தார்.

"தவறுகள் விடுவதோ, பைத்தியம் கொள்வதோ, மனித இயல்புகள் அல்ல. தவறுகளை விடாமல் விடுவது, மனிதனுக்கே இயலக்கூடியது. அதனால் தவறுகள், பிழைகள் என்பவற்றைச் செய்யாமல் விடுதலும்; குற்றங்கள், அநீதிகள் என்பவற்றைப் பிறருக்கு

இழையாது விலகுதலும்தான் மனித இயல்பு ஆகும். அவற்றைப் புரிவது மனித இயல்புக்கு மாறான செயல் ஆகும்'' என்றார்.

"பிழை விடுவது மனித இயல்பு என்று கூறப்பட்டு வருவதன் அர்த்தம் என்ன? என்று ஒருவர் கேள்வியை எழுப்பினார்.

"பிழை விடுவது மனித இயல்பு என்று கூறுதல், பிழைகளைச் செய்துவிட்டு அதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் ஒரு தந்திரம் அல்லது உபாயமே அன்றி, வேறொன்றில்லை என்று கூறிவிட்டு, அங்குள்ளோரின் முகங்களை அமைதியாக உற்று நோக்கினார் அந்த முதியவர். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' அவ்வாறே அகத்தின் அழகின்மையும் முகத்தில் தெளிவாகத் தெரியும். எத்துணை பொருள் பொதிந்த கூற்றுக்கள். எதனையும் மூடிமறைக்க மனிதனுக்கு இயலாது. ஏனென்றால், பொய், புரட்டு; சூது, வாது; வஞ்சகம், பொறாமை; கோபம், பகைமை என்பவை மனிதனுக்கு இயல்பானவை அல்ல. உண்மை ஒரு நாளைக்கு வெளிவந்தே தீரும். அப்பொழுது வெட்கப்பட வேண்டி நேரிடும் என்று தொடர்ந்து அம் முதியவர் தன் கருத்துக்களை வெளியிட்டார்.

முதலில் முதியவரிடம் வினா எழுப்பியவர் மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்டார். "பெரியவரே நீங்கள் ஒரு மனிதனைத் தேடிக் கொண்டு இருக்கிறீர்கள். அந்த மனிதன் யார்? அம்மனிதனின் இலட்சணங்கள் யாவை? அம்மனிதன் எப்பேர்ப்பட்டவன்? அவனை ஒத்தவர்கள் இங்கு எவரும் இல்லையா?'' இவ்வாறு பல கேள்விகளைக் கேட்டார். முதியவரும் பின்வருமாறு தன் விளக்கத்தைக் கூறினார்.

"மனம் உள்ளவன் மனிதன். அதனால் சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன். சிந்தனையினால் மனிதன் நல்லது, கெட்டது; சரி, பிழை என்பவற்றை பிரித்தறியும் திறன் உள்ளவனாக விளங்குகிறான். மனிதன் மனிதனாக, மனிதத் தன்மைகளுடன், மனித இயல்புகளுடன் வாழும் பேற்றினைப் பெற்றவன். அத்தகைய மனிதன் ஒருவனையாதல், இந்தச் சந்தைக் கூட்டத்தில் காணமுடியாதா, என்ற அங்கலாய்ப்புடன் இதுவரை காலமும் தேடிக்கொண்டிருக்கிறேன்'' என்றவர், "பைத்தியக்காரனாக இல்லாத ஒருவனைப் பார்த்துப் பைத்தியக்காரன் என்று கூறும் பைத்தியங்கள் நிறைந்த பைத்திய உலகம் இது'' என்று பெருமூச்சு விட்டார்.

மேலுந் தொடர்ந்தார்: "மனுதர்மம், மனிதாபிமானம், மனித விழுமியங்கள், மனித நலம் ஓம்புதல் என்பன மனித உரிமைகள். அவற்றைத் தவறவிட்ட மனிதர்கள்தான் தவறுகள் புரியும் மனிதர்களாக உள்ளனர். அதனால்த்தான் தவறவிட்ட மனிதனை நான் தேடி அலையவில்லை'' என்றார்.

பெரியவரைப்பற்றி இப்பொழுதுதான் அங்குள்ளவர்களுக்குப் புரியத் தொடங்கியது. இதுவரை காலமும் அவருக்குப் பைத்தியம் என்று நினைத்தவர்களும், தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டனர்.

"மனிதத் தன்மையைத் தவற விட்டவன் மனிதநிலையிலிருந்து தாழ்ந்து விடுகிறான். தவறுகளைச் செய்கின்றான். தவறுகள், பிழைகள் என்பன யாவும் சரியே, என்னும் ஒரு பொய்த் தோற்றத்தையும் உருவாக்க முயற்சிக்கிறான். அந்த முயற்சியில் நியாயங்களைத் தேடி அலைகின்றான். அவ்வாறு அலைகின்றமையே மனித வாழ்க்கையாகிவிட்டது. பொய்யும் வழுவும் நிறைந்தது எவ்வாறு மனித வாழ்வு ஆகும்?'' என்ற வினாவை எழுப்பிவிட்டு, ஆங்கு உள்ளவர்களிடமிருந்து விடையை எதிர்பார்ப்பவர்போல ஆவலோடு அவர்களை அந்த முதியவர் பார்த்தார். அங்கு நின்றவர்கள் அமைதி பேணினர். எதுவுமே பேசவில்லை. முதியவர் தொடர்ந்தார்.

*தூய்மையானவனே கடவுளை மிகவும் நெருங்குகிறான்.*

"பொய்யும் வழுவும் உள்ள வாழ்வு, மனித வாழ்வு அன்று. அது அசுர வாழ்வு. மிக அரிதாகப் பெற்றுள்ள இந்த மனிதப் பிறவியில் மனித வாழ்வினையே வாழவேண்டும் அதனையே வாழ்வின் இலட்சியமாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு கொள்ளாது மனித வாழ்வினை அலட்சியப் படுத்துவது மதியீனம் ஆகும்". இவ்வாறு கூறிவிட்டுத் தான் தேடுகின்ற மனிதனைப் பற்றி அந்த முதியவர் சொல்லத் தொடங்கினார்.

"நான் தேடிப் பார்க்கின்ற மனிதர், எத்தன்மையர் என்பதை நீங்கள் அறிய வேண்டும். சொல்கிறேன். அந்த மனிதர் தூய நல்ல உள்ளமும்; உள்ள அழகும் நிரம்பியவர். அந்த அக அழகு, எழிலாக அவரது முகத்தில் பளிச்சிடும். நற்குணமும், நற்செய்கையும் வாய்க்கப் பெற்றவர். காட்சிக்கு இனியவர், எளியவர்; கடுஞ்சொல் அற்றவர், அடக்கம் உடையவர், ஆற்றல் மிகுந்தவர். அன்பும் அறிவும் பணிவும் கொண்டவர். பண்பும் பாசமும் படைத்தவர். பக்தியும் பரிவும் நிறைந்தவர். பிறர் நலம் ஓம்புபவர், தன்னலம் மறுப்பவர்; சேவைப் பிரியர், கல்வியிற் சிறந்தவர், பொன்மனச் செம்மல், எவர்மீதும் வெறுப்போ, விரோதமோ; பகைமையோ, பழிவாங்கலோ பாராட்டாதவர். நகை, ஈகை, இன்சொல், இகழாமை, தியாகம், அர்ப்பணம், தொண்டு முதலிய அருங்குணங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற உத்தமசீலர். உண்மையே பேசுகின்ற உயர்ந்தவர், சத்தியசீலர், தரும வழியில் நடக்கின்ற தருமசீலர். செருக்கு, கர்வம், அகந்தை, மமதை, ஆடம்பரம், தற்பெருமை என்பன கிஞ்சித்தும் இல்லாத குணசீலர், அகந்தை, மமதை இன்மை அவரின் பெருமை, கவலை இன்மை அவரின் சிறப்பு. சான்றாண்மை உடைமை அவரின் பேராண்மை. மனிதத் தன்மையுடைமையால் அவர் ஒரு மனிதர்- ஆமாம், அந்த மனிதரைத்தான் அல்லும் பகலும் அனவரதமும், கையில் விளக்குடன் தேடிக் கொண்டிருக்கிறேன். எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அந்த மனிதரைத் தேடிக்கொண்டே இருப்பேன்; தளர்ச்சி அடைய மாட்டேன். அந்த மனிதரைக் கண்டு கொள்வேன் என்ற நம்பிக்கை பரிபூரணமாக என்னிடம் உண்டு. முயன்றால் அடைய முடியாதது இந்த உலகில் ஒன்றுமில்லை. இது உறுதி. என் உறுதியான கொள்கையில் நான் கட்டுண்டேன். அதனால் பொறுத்திருப்பேன். நிச்சயம் காலம் மாறும். நான் அந்த மனிதனைக் காண்பேன்" என்று கூறிவிட்டு அங்கும் இங்கும் பார்த்தார். கூட்டத்தில் ஆட்களும் அதிகரித்துவிட்டனர்.

வேடிக்கையும், விநோதமும் பார்க்கத் தான் கூட்டம் கூடியது. ஆனால் தற்பொழுது, அநேகமானவர் அம் முதியவரின் ஆட்கொள்ளலுக்கு உட்பட்டவர்போலக் காட்சியளித்தனர். அப்பெரியவரும் பேச்சினைத் தொடர்ந்தார்.

"நான் தேடிக்கொண்டிருக்கின்ற அந்த மனிதனை, அத்தகைய மனிதர்களை, சான்றோர்களை, இங்கேயே இந்த இடத்திலேயே, உங்கள் மத்தியிலே ஏன் காண முடியாது என்று உங்களைப் பார்த்துக் கேட்கிறேன்? அப்பொழுது "முடியும் முடியும்" என்று கூட்டத்தினர் குரல் எழுப்பினர். "நன்று! நான் வெற்றி கொள்வேன். விரைவில் நான் மனிதனைக் கண்டு கொள்வேன்" என்று கூறிய அப்பெரியவரின் மகிழ்ச்சி பெரிதாக இருந்தது. உலகத்தவர் அனைவரும் சான்றோர்கள் ஆகும் நாளே புண்ணிய நாள். புனிதநாள், பொன்னான நாள் ஆகும். மற்றெல்லா நாட்களும் பிறந்தும் பிறவா நாட்களே.

வாழ்க! வையகம்; வாழ்க! வளமுடன்.

*மனிதர்களில் அறிவுக்கண் உள்ளவனே சிறந்தவன்.*

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 56. இடையே நிற்கும் திருவருள்

கண் தொல்லை காணும் நெறி கண் உயிர் நாப்பண் நிலை
உண்டு இல்லை அல்லது ஒளி.

**பொருள்:**

கண் தொன்று தொட்டுப் பொருளைக் கண்டு வரும் முறைமை, கண்ணிற்கும் உயிருக்கும் இடையே ஒளி நிற்பதனால் உண்டாகின்றது. அவ்வாறு ஒளி நில்லாவிடின் கண் பொருளைக் காணுதல் என்பது நிகழாது.

**சொற்பொருள்:**

கண்- கண், தொல்லை- தொன்றுதொட்டு, காணும் நெறி- பொருள்களைக் கண்டு வரும் முறைமை, கண் உயிர் நாப்பண்- கண்ணுக்கும் உயிருக்கும் இடையே, ஒளிநிலை- ஒளி நிற்றலால், உண்டு- உளதாகிறது, அல்லது- ஒளி அவ்வாறு நிற்கவில்லையாயின், இல்லை- கண் காணுதல் இல்லை.

**விளக்கம்:**

**கண் காணும் நெறி:**

கண் ஒரு பொருளைக் காணுமிடத்து அது தானே தனித்து நின்று காண்பதில்லை. உயிர் உடனாக இருந்து செலுத்தவே அது காணவல்லதாகும். இனி, கண் செயற்படுவதற்கு உயிர் உடனிருந்து செலுத்துதலாகிய அந்த உதவி மட்டுமே போதுமோ எனில், போதாது. போதும் எனில் இருளில் நிற்கும் பொழுதும் கண் பொருளைக் காணுதல் வேண்டும். அப்பொழுதும் உயிர் உடனிருந்து செலுத்தவே செய்கிறது. ஆயினும் கண் காணமுடிய வில்லையே. இதனால் உயிர் உடனிருந்து செலுத்துவதாகிய உதவி மட்டும் கண்ணுக்குப் போதாது என்பது புலனாகும்.

வேறொரு பொருளின் உதவி கண்ணுக்குத் தேவைப்படுகிறது. அ..தாவது பகலில் சூரியவொளியும் இரவில் விளக்கொளியும் வேண்டியிருக்கிறது. சூரியவொளியோ, விளக் கொளியோ கண்ணொளியோடு கலந்து காட்டும் பொழுதே கண் பொருளைக் காண வல்ல

*உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம்.*

தாகின்றது. இவ்வாறு, கண்ணிற்கும் உயிருக்கும் இடையே ஒளி நின்று உதவுகிறது. கண் காணும் நெறி இதுவாகும்.

இப்பொருளுக்கு ஏற்ப, செய்யுளின் இறுதியில் உள்ள ஒளி என்ற சொல்லை எடுத்து முதலடியின் இறுதியில் உள்ள நிலை என்பதற்கு முன்னே கூட்டி, "கண் காணும் நெறி கண் உயிர் நாப்பண் ஒளி நிலையால் உண்டு; அல்லது இல்லை" என அமைத்துக் கொள்ளவேண்டும்.

இச் செய்யுளில் கூறப்பட்டுள்ளது உவமை மட்டுமே. இதனைக் கொண்டு ஆசிரியர் உணர்த்த விரும்பும் கருத்தை இனிக் காண்போம்.

**உயிர் அறியும் நெறி:**

கண்போல இருப்பது உயிர். கண் தானே காண மாட்டாததுபோல உயிரும் தானே அறிய மாட்டாது. உயிருக்கு அறிவு விளங்குதற் பொருட்டுக் கருவி கரணங்களைக் கூட்டு வித்தது திருவருள். கருவி கரணங்களை உயிருக்குச் சேர்த்ததோடு திருவருளின் செயல் முடிந்து விட்டது என்றோ, கருவிகளைப் பெற்ற உயிர் அவற்றைத் தன் விருப்பப்படியே இயக்கி விரும்பியவாறு அறியும் என்றோ கருதிவிடலாகாது.

கருவிகள் நம் விருப்பப்படி இயங்குவதில்லை என்பதையும் அவை நம் கட்டுப்பாட்டில் இல்லை என்பதையும் அன்றாட அனுபவத்திற் காணலாம்.

சிலர் குணத்தில் நிறைமதியாய் இருப்பார்கள். அவர் மனத்தில் எப்பொழுதும் சாந்தமே குடிகொண்டிருக்கும். அமைதியும் அடக்கமுமே அவரிடம் நிலைகொண்டிருக்கும். அப்படிப்பட்டவரும் கூட ஓரொரு சமயத்தில் தமது பொறுமையையும் அமைதியையும் இழந்து கோபத்தின் வசப்பட்டு விடுவார்கள். "இவருக்கா இவ்வளவு சினம்!" என்று பிறர் வியந்து போகும் படியாகச் சினத்தின் உச்சிக்கே சென்று விடுவார்கள். இஃது எதைக் காட்டுகிறது? மனமாகிய கருவி அவர்கள் வசத்தில் இல்லை என்பதைத்தானே காட்டுகிறது.

சொல்வன்மை படைத்தவர் பலர் இருக்கிறார்கள். எந்த இடத்தில், எந்தச் சமயத்தில், எந்தச் சொல்லை ஆளவேண்டும் என்பதெல்லாம் அவர்களுக்குக் கைவந்த கலை. அவர்களை "வசன நிர்வாகர்" என்று குறிப்பிடுவார் தாயுமானவர். அப்படிப்பட்டவரும்கூட ஓரொரு சமயத்தில் சொல்லக்கூடாத சொல்லை வாய் தவறிச் சொல்லி இடர்பாட்டிற்கு உள்ளாகிறார்கள். இஃது எதைக் காட்டுகிறது? வாக்கு ஆகிய கருவி அவர் வசத்தில் இல்லை என்பதைத் தானே காட்டுகிறது.

ஒருவர் சென்னையிலிருந்து புறப்பட்டார். அவர் செல்ல வேண்டிய ஊர் மதுரையைக் கடந்து உள்ளது. மதுரையை நெருங்கும் பொழுது ஆலயத்தின் நெடிதுயர்ந்த கோபுரங்கள் கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்தளிக்கும். அக் கோபுரங்களைக் கண்ணாரத் தரிசிக்க வேண்டும் என்று அவர் எண்ணிக் கொண்டே வந்தார். வண்டி மதுரையை நெருங்கியபோது அவர் தம்மையறியாமல் உறங்கிவிட்டார். உடற்சோர்வும், மெல்லென வீசிய இளம் காற்றும் அவரை மெய் மறந்து தூங்க வைத்து விட்டன. திடீரென அவருக்கு விழிப்பு உண்டாயிற்று. வெளியே எட்டிப் பார்த்தார். வண்டி மதுரையைத் தாண்டி விட்டது என்பதை உணர்ந்தார். பாழாய்ப்போன தூக்கம் வந்து கெடுத்துவிட்டது என்று நொந்து கொண்டார். இந்நிகழ்ச்சி எதைக் காட்டுகிறது? உடம்பு ஆகிய கருவி அவர் வசத்தில் இல்லை என்பதைத்தானே காட்டுகிறது.

இதனால், கருவிகள் இயங்குவது உயிரின் விருப்பப்படி அன்று என்பது தெளிவாகும். திருவருளே கருவிகளைக் கூட்டுவிப்பதோடு அவ்வவ்வுயிரின் வினைக்கேற்ப அக்கருவிகளைச் செலுத்தியும் வருகிறது. எப்படி கண்ணிற்கும் உயிருக்கும் இடையே ஒளி நிற்கிறதோ அப் படியே கருவிகளுக்கும் உயிருக்கும் இடையே திருவருள் ஒளி நின்று செலுத்துகிறது. திருவருள் அவ்வாறு நில்லாவிடில் உயிர் அறிதல் இல்லையாம்.

இங்கு பெத்த நிலை மட்டுமே கூறப்பட்டுள்ளது. பெத்த நிலையில் மட்டும்தான் இப்படி என்று எண்ணிவிட வேண்டா. முத்தி நிலையிலும் திருவருளின் துணையின்றி உயிர் அமையாது என உணர்தல் வேண்டும்.

## 57. நின் செயல் மன் செயல்

புன் செயலின் ஓடும் புலன் செயல்போல் நின்செயலை
மன் செயல தாக மதி.

**பொருள்:**

சிற்றின்பப் பொருள்களின் மேல் விரைந்து செல்லுகின்ற ஐம்பொறிகளின் செயல், உண்மையில், அப்பொறிகளைச் செலுத்துகின்ற உயிரின் செயலேயாகும்.

அதுபோல, மாணவனே, நீ செய்யும் செயல்கள் யாவும் உனக்கு முதலாகிய திரு வருளின் செயல் என்றே அறிவாயாக.

**சொற்பொருள்:**

புன் செயலின்- புல்லிய இன்பத்தையே தரும் உலகப் பொருள்களின் மேல், ஓடும்- விரைந்து செல்லுகின்ற, புலன் செயல் போல்- ஐம்பொறிகளின் செயல் அவற்றைச் செலுத்துகின்ற உயிரின் செயலாய் இருத்தல்போல, நின் செயலை- (மாணவனே) உனது செயல்களையெல்லாம், மன் செயலதாக- உனக்கு முதலாகிய திருவருளின் செயல் என்றே, மதி- அறிவாயாக.

**விளக்கம்:**

உலகத்திலுள்ள சிற்றின்பப் பொருள்களைப் பற்றுவதற்காக ஐம்பொறிகளும் வெளியே ஓடுகின்றன.

ஓர் இளைஞன் தனிமையான ஓரிடத்தில் கண்மூடித் தியானத்தில் அமர்ந்தான். சற்று நேரத்தில் அந்த வழியாகச் சில பெண்கள் வந்தார்கள். அவன் கண் திறந்து அக் காட்சியைக் காணும்படி நேர்ந்தது. அதனால் அவனது தியானம் கலைந்தது. அடுத்தநாள் முதல் யார் வந்தாலும் கண்களைத் திறக்கக்கூடாது என்று முடிவு செய்தான்.

மறுநாள் கண்களைத் துணியினால் கட்டிக்கொண்டு தியானத்தில் ஈடுபட்டான். அன்றைக்கும் அதே பெண்கள் வந்தார்கள். அவர்களது பேச்சொலியும், வளையல் ஒலியும் அவனது காதுகளைக் கவர்ந்தன. அப்பொழுதும் அவனது தியானம் கலைந்து விட்டது. இனிக் கண்களை அடைத்ததுபோலக் காதுகளையும் அடைக்கவேண்டும் என்று முடிவு செய்தான்.

*எந்தச் சந்தர்ப்பத்திலும் உத்தமனாகவே இரு.*

மறுநாள் தன் இரு செவிகளையும் பஞ்சினால் மூடிவிட்டுத் தியானத்தில் அமர்ந் தான். வழக்கம்போல அதே நேரத்தில் அந் தப் பெண்களும் வந்தார்கள். கண்கள் காணா விடினும், காதுகள் கேளாவிடினும், அவனது நாசியாகிய பொறியை அவர்கள் சூடியிருந்த மல்லிகையின் நறுமணம் ஈர்த்தது. அதனால் அவனது தியானம் தடைப்பட்டது. இனி மூக் கினையும் மூடுவது என்று முடிவு செய்தான்.

அடுத்த நாளில் கண், காது, மூக்கு ஆகிய பொறிகளை அடக்கிக் கொண்டு தியானத்தில் அமர்ந்தான். சற்று நேரமாயிற்று. அவனது மனமானது எண்ணிக் கொண்டது. "இது அந்தப் பெண்கள் வருகிற நேரம் ஆயிற்றே. அவர்கள் வந்திருப்பார்களா இல் லையா?" என்று எண்ணி மனம் அலை பாய்ந் தது. இந்த எண்ணம் வந்த பிறகு தியானம் செய்வது எங்கே!

இவ்வாறு கண், காது முதலிய பொறிகள் உருவம் ஓசை முதலியவற்றைப் பற்றுகிற செயல் அவற்றின் செயலா என் பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். அவை யெல்லாம் கருவிகளாகிய சடப்பொருள்களே. அவற்றிற்கென்று என்ன செயல் இருக்கிறது? ஆன்மா செலுத்தவே அவை செயற்படு கின்றன. எனவே அவற்றின் செயலெல்லாம் ஆன்மாவின் செயலேயாதல் விளங்கும்.

இந்த ஐம்பொறிகளின் நிலையில் ஆன்மாவை வைத்துக் காணுதல் வேண்டும். ஐம்பொறிகளுக்கென்று தனித்த செயல் இல் லாமைபோல, ஆன்மாவிற்கும் சுதந்திரமான செயல் ஒன்றும் இல்லை. ஆன்மா செலுத் தவே ஐம்பொறிகள் செயற்படுகின்றன. அது போலத் திருவருள் செலுத்தவே ஆன்மாவும் செயற்படுகின்றது. எனவே, ஐம்பொறிகளின் செயல் ஆன்மாவின் செயலாதல் போல, ஆன்மாவின் செயலும் திருவருளின் செயலே யாகிறது என்பது தெளிவாகும்.

இந்த உண்மையை நூல்கள் வாயி லாக உணர்தல் கூடும். ஆனால், அந்த நூலுணர்வினால் உண்மை ஞானம் பிறவாது.

அருளாசிரியர் இந்த உண்மையை அறிவுறுத்த, அவரது உரையே மாணாக் கனுக்கு அனுபவ ஞானத்தைத் தந்துவிடும். "நீ செய்வனவெல்லாம் திருவருள் செய்விக் கச் செய்யும் செயல்களாம்" என்று அவர் உணர்த்த, மாணாக்கன் அவர் உணர்த்திய வாறே உணர்ந்து திருவருளைப் பற்றிக் கொள்வான்.

(தொடரும்...

**அன்னதானமும் அறிவுத் தானமும்**

**பல் சுவையில் சமைத்து**

சொல்லடுக்கிக் கருத்தமைத்து கவியுமாக்கி
கனியப் பதமுமாக்கிச் சுவையுமூட்டி
மெல்லனவே ஊட்டிவிட அமுதுபோலக்
கவளம் கவளமுமாக்கிச் சிறப்புடனே
பல் சுவையில் தனித்துவங்களும் தொடர்
உருவில் காவியங்களுமாய்ச் சமைத்து
செல்வச் சந்நிதியான் அருள் கொடையே
அன்னதானம்போல் அறிவுத் தானமுமாய்!

-இராம ஜெயபாலன்-

# ஆலயங்களும் மகோற்சவங்களும்

– திரு இ. சரவணபவன் அவர்கள் –

கோயில்களே பக்தி நெறியை வளர்க்கும் வாயில்களாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தெய்வீகத்தை உயிராகக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள் தமிழர்கள். இவர்களுடைய நாகரீகம் சமய அடிப்படையிலேயே வளர்ச்சியுற்றது. மனையிலும், காட்டிலும், வயலிலும், கடற்கரையிலும் இறைவழிபாடு நடத்திய மக்கள் காலகதியில் நிலையான ஆலயங்களை அமைக்கத் தொடங்கினார்கள். அவற்றைச் சார்ந்து, வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனான இறைவனை வழிபடுவதே மனிதப் பிறவியின் குறிக்கோள் எனக் கொண்டார்கள். இதன் பயனாகவே ஆலயங்கள் சிறப்படைந்தன.

உள்ளத்தின் வளர்ச்சிக்கும், உயிரின் வளர்ச்சிக்கும் வழிபாடு முக்கியமாகும். இறைவன் எங்கும் இருக்கின்றான் என்றாலும், கோயிலில்த்தான் அவனை உணரமுடிகிறது. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தனாகிய அவன், கோயில்களில் இருக்கிறான் என்பதை நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்கின்றோம். ஏனைய இடங்களில் இறைவனைத் தரிசிப்பதற்கும் கோயிலில் எழுந்தருளி இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. இறைவனை எங்கும் காணவேண்டுமானால், அவர்களுக்கு உயர்ந்த ஞானபக்குவம் வேண்டும். காணுகின்ற பொருள்கள் அனைத்திலும் கடவுளைக் காணுகின்ற ஞானிகளுக்கே அந்த நிலை ஏற்றது. ஆனால், அத்தகையோர் ஒரு சிலரே. ஏனையோர் கோயிலிலே அமைக்கப் பட்டிருக்கும் விக்கிரகங்களையும், வடிவங்களையும் காண்பதன் மூலமே இறைவனை உணரு கிறார்கள்.

"திருக்கோயில் உள்ளிருக்கும்
திருமேனி தன்னை
சிவ னெனவே கண்டவர்க்குச்
சிவன் உறைவான் ஆங்கே"

என்ற வாக்கின்படி விக்கிரகத்தின் உள்ளே ஊடுருவி நின்று நாம் காணவேண்டிய உண்மைப் பொருளே இறைவனாகும்.

சிறப்பாக இறைவனைக் கற்கோயில்களிலும், அடியவர் உள்ளத்திலும் காணமுடியும். நினைப்பவர் மனம் கோயிலாகக் கொள்பவன் இறைவன். அந்த நிலையில் சிந்தித்த மனிதன் உடம்பின் அமைப்பையே கோயில் அமைப்பாகக் கொண்டு கட்டிடங்கள் மூலம் ஆலயங்களை அமைத்தான். பண்டைக் காலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் கோயில் களே முதன்மையான இடம்பெற்றிருந்தன. கோயிலுக்குரிய செலவுகள் போக எஞ்சிய பகுதி கலை வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது. ஏழைகளுக்கு விடுதிகளும், மருத்துவ விடுதிகளும், இசைக் கல்லூரிகளும், ஆலய நிர்வாகத்திலேயே இயங்கின. தஞ்சை இராசராசசோழன் காலத்தில் இத்தகைய திருப்பணிகள் நடைபெற்றதாகச் சரித்திரச் சான்றுகள் உள்ளன. மக்கள் பணியே மகேசன் பணியாகப் பேணப்பட்டது. இதனால் ஆலயங்களும், மக்கள் வாழ்க்கையும் நெருங்கிய தொடர்புடையனவாக விளங்கின.

*சிறந்த தர்மம் சுயநலமற்ற சேவை.*

நல்லமுறையில் அழகான கட்டிடங்களும், விக்கிரகங்களும் அமைத்தால் மட்டும் போதாது. விழாக்களும், நித்திய நைமித்திய பூசைகளும், சிறப்புற நடைபெறுவது ஆலய வளர்ச்சிக்கு இன்றியமையாதன. காலத்துக்குக் காலம் குடமுழுக்காட்டி (கும்பாபிஷேகம்) சிறப்பு விழாக்கள் செய்து வருவது, திருவருட்சக்தி பெறுவதற்கு இடமளிப்பதாகும். மந்திரம் மூலமாகவும், அபிஷேகம் மூலமாகவும், விக்கிரகத்திற்குத் தெய்வீக சக்தி கொடுக்கப் படவேண்டும். மின்சார இணைப்பும் மின் விசிறியும் சேர்ந்து காற்று வீசுவதற்கு உதவுவது போல மந்திரம் முதலிய கிரிகைகளும், விக்கிரகத்திலிருந்து தெய்வீக சக்தி வீசுவதற்கு உதவுகின்றன. மின்சார இணைப்பு இல்லாவிட்டால், மின்விசிறியால் பயனில்லை. அதேபோல் கிரிகைகளோடு கூடிய பூசைகள் இல்லாவிட்டால், விக்கிரகத்திலிருந்து திருவருட் சக்தியை எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே ஆலயங்களில் விழாக்கள் சிறப்பாக அமைய வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

திருவிழாக்கள் எல்லாம் ஊருக்குச் செய்யும் சாந்திபோல் அமைவன. அன்றாடம் நிகழும் நித்திய பூசையிற் சில குறைகள், குற்றங்கள் நிகழ்வதும் இயற்கையே. அக்குறை களினால் ஏற்படும் குற்றங்களை நைமித்திய பூசைகளே நீக்குகின்றன என்பார்கள்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

(திருக்குறள்)

"நித்தியத்தில் நைமித்திய மாதலின்
அதனை முற்கூறினார் என்பர்"

இங்கே சிறப்பு என்பது நைமித்தியமாகும். இறைவனைப் பற்றிச் சிறப்பாகத் தியானிக்க வாய்ப்பளிக்கும் நாட்கள் திருவிழா (மகோற்சவம்) நாட்களாகும். மனிதனுடைய பந்தபாசத்துக்கு இது ஒரு விடுமுறை என்று கூறினால் மிகையொன்றும் இல்லை. விரதம் என்பது, உள்ளத்திற் குத் தெளிவு தருவதாகும். மக்களுக்காக ஒரு ஆன்மீகச் சூழ்நிலையை ஏற்படுத்தித் தரு வதற்கே மகோற்சவம் என்று கூறப்படும் திருவிழாக்கள் ஏற்பட்டன. மகோற்சவ நாட்கள்தான் ஒருவனுடைய உண்மை வாழ்க்கைக்கு உரிய நாட்கள். அவை இறைவனோடு தொடர்பு கொள்ள வாய்ப்பளிக்கும் நாட்களாகும். எனவே இந்த நாட்களில் மக்கள் சிவாலய தரி சனம் செய்து சிறந்த தீட்சாபயனைப் பெற்றுக்கொள்ள முடியும். இப்படியான விழாக்கள் பல காலமாக நம் நாட்டில் நடைபெற்று வந்தமை தெரியவருகின்றது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

"ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்
கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாது போதியோ
பூம்பாவாய்"

எனத் திருமயிலாப்பூர் பதிகத்திலே பாடியுள்ளார்.

இன்னும் "பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" என்றும் பாடியுள்ளார். திருக்குறள் முதலிய நூல்களிலும் திருவிழாக்கள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. திருவாரூர் திருவாதிரை விழாவை அப்பர் சுவாமிகள் சிறப்பித்துப் பாடியமையும் நாம் அறிந்ததே. மகோற்சவங்கள் என்பதன் பொருள் "மேலான யாகம்" என்பதாகும். உற்சவம்

*மனிதத் தன்மையைத் தருவது நல்லொழுக்கமே.*

என்றால் சுகத்தைக் கொடுப்பது. இதில் ஈடுபடுவோர் அனைவருக்கும் மேலான இன்பத்தையும், உள்ளத்துக்கு அமைதியையும், உயிருக்கு ஊதியத்தையும் நல்கும். எனவே,

“தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது”

என்ற திருவள்ளுவர் கூற்றைச் சிந்தையிற் கொண்டு சிவாலய தரிசனம் செய்து, மகோற்சவ தரிசனம் பெற்று வாழ்வாங்கு வாழ்தல் மக்கட் பிறவியின் மகத்தான கடனாகும்.

“மண்ணினிற் பிறந்தார் பெறும்
பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தம்மை
அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப்
பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன்
வருகென உரைத்தார்”

அடியாரைப் போற்றலும், அமுது செய்வித்தலும் ஆண்டவன் பணிகளில் ஈடுபட்டு நல்ல விழாவைக் கண்டு மனம் மகிழ்ந்து நல்லருள் பெறுவதுமே இந்த வையகத்தில் நாம் பிறந்ததன் பயன் என்கிறார் சம்பந்தப்பெருமான்.

**வாசகர் உள்ளத்திலிருந்து...**

ஐயா! எம்பெருமான் முருகன் திருவருள் வழிநடத்தி பணிவன்புடன் எழுதுவது யாதெனில், ஆன்மீக மலராக மிகவும் அழகாகப் பரிணமித்து அலர்ந்து வளரும், ஞான மலர்ச்சுடர் இதழ்களில் அடியேனும் எழுதும் ஓர் வாய்ப்புப் பெற்றேன். கல்விப் பெருமக்களும் ஆன்றோரும் சான்றோரும் ஆக்கங்களை அளித்து வருகையில், சாதாரணமான தொண்டர்களும் இறைவனை நண்ணிட ஓர் களம் அமைத்துக்கொடுத்தும், ஊக்கம் கொடுத்தும் தாங்கள் ஆற்றும்பணி அளவிடமுடியாதது. அறம் வளர்க்கும் பணி ஒரு சிலர்கே அமைவுறும் என்பதற்கு தாங்கள் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளீர்கள். ஆன்மீகத் தாகம் தீர்க்கும் ஒரு பணியாகவே அன்னதானப் பணியுடன், இதனையும் முன்னெடுப்பது ஆறுமுக நாவலர் பெருமான்போல், சைவத்தை மேம்படுத்தும் ஒரு கருவியாகவே முருகன் உங்களை வழி நடாத்துகின்றான். பூந்தோட்டத்தில் பலவித மலர்கள் பூத்தாலும், அதனை வண்ண மலராக்கி இறைவனுக்கு ஆரம் சூடும்போது அதன் அழகைப் பலரும் பார்த்து கண்குளிர்கின்றார்கள். இறைவன் மார்பில் சூடுவதால் மலர்களும் ஆனந்தம் அடைகின்றது. உய்வு கிடைக்கின்றது. அதுபோலவே, எல்லோரினது இறையன்பையும் நீங்கள் ஞானமலர் ஊடாக வகைப்படுத்தி அழகு செய்கின்றீர்கள். அதுபோலவே அடியேனின் ஆக்கங்களையும் ஒரு சில இதழ்களில் பிரசுரித்து, இன்று அதற்கு ஒரு பாராட்டும் ஈந்துள்ளீர்கள். மிகமிக நன்றி ஐயா! நேரிலே சமூகம் அளித்து அதனைப் பெறுவதற்கு என்னுடைய ஆரோக்கிய நிலை ஒத்துழைக்கவில்லை என்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்து மன்னிப்பும் கேட்டுக் கொள்கின்றேன்.

ஆனைக்கோட்டை. தி. பரமேஸ்வரி

*சத்தியத்தை வளைக்கலாம் முறிக்க முடியாது.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –
தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 05
## இறப்பவர்களும் நிரந்தரமானவர்களும்

### 10. அடிவானத்து ஒளியின் உதயம்

பகவத்கீதையின் முதலாவது அத்தியாயத்தின் ஒட்டுமொத்தமான சாரம் என்ன எனில், ஆரம்பத்தில் தேடும் நிலையில் உள்ள செயல்களின் எல்லாவித முயற்சிகளையும் கைவிடுவதே ஆகும். பல ஆண்டுகளின் ஆன்மீக சாதனைக்குப்பின், பல வருடங்களுக்குமுன் ஒருவர் தான் எப்படி இருந்தாரோ அதே ஆளாக இருப்பதனோடு அவர் திருப்தி அடையலாம். அத்துடன், முழு மயக்கத்தின் காரணமாகவோ இயலாமையின் காரணமாகவோ வீதியிலே உள்ள ஒரு சாதாரண மனிதனின் அற்ப வாழ்க்கையைக் கூட மேற்கொள்ளலாம். இதே வகையான பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிய பலவகையான ஆன்மீக சாதகர்கள் இருக்கின்றனர் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் தமது உணர்வுத் தெளிவோடும், குறிக்கோளின் உறுதியோடும் ஆன்மீக வாழ்க்கையை ஆரம்பித்த அளவுக்கு அவர்களை வெவ்வேறு பாதைகளின் வழியில் யார் அழைத்துச் செல்வார்கள். விடயங்களைப் பூரணமாகப் புரிந்துகொள்ளாமை என்ற உண்மை இருந்தாலும், எமது தேடல் உறுதியானதாகவும், நூறுவீதம் உண்மையானது ஆகவும் இருப்பின் அடிவானத்தில் ஒளி உதயம் ஆவதைக் காண்போம். அத்துடன் கிருஷ்ண பரமாத்மா போன்ற ஒரு குரு நம்முன்னால் அங்கு தோன்றுவார். பிரபஞ்ச இயற்கையினாலும், படைப்பு விதியினாலும், கடவுளின் நீதியினாலும் அவ்வாறு ஒரு குரு உள்ள சூழ்நிலையில் நாம் அமர்த்தப்படுவோம். ஆரம்பக் கட்டங்களில் அந்தக் குருவினது ஆலோசனைகளைச் சாதாரணமாகப் பெறுவதற்குக் கூட ஒருவர் தயங்கக் கூடும். ஒரு தகுதியான குருவை ஒருவர் நேருக்குநேர் சந்தித்தாலும்கூட அவரது போதனைகளைப் பூரணமாக ஏற்றுச் செயற்படத் தன்னைத் தயாராக்கிக்கொள்ளாமலும் இருக்கலாம்.

### 11. மன மொட்டு மலர வேண்டும்.

பகவத்கீதையின் இரண்டாவது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் விபரிக்கப்பட்டுள்ள சூழ்நிலையினால் அர்ச்சுனனுக்கும் இது நிகழ்ந்துள்ளமையை அறிகிறோம். அந்த மாபெரும் குரு "இந்த நெருக்கடியான சமயத்தில் இந்தப் பொருத்தமற்ற மனப்பான்மை எப்படி உன்னிடத்தில் வந்தது?" என்று அவனுக்குக் கூறினார். அதற்கு அர்ச்சுனன் பின்வருமாறு

*ஆசை அறுபட்டால் இப்பிறப்பிலேயே முத்தி கிடைக்கும்.*

மறுமொழி பகர்ந்தான். "எவ்வாறெனினும், என்னை மன்னிக்க வேண்டும். நான் ஆயுதங்களை எடுக்கப் போவதில்லை என்று தீர்மானித்து விட்டேன். எல்லாம் அழிக்கப்படப் போகின்ற இக்கொடிய யுத்தத்தில் என்ன நன்மை உள்ளது? விதியின் திறந்த வாயினால் எல்லாம் விழுங்கப்படப் போகின்றன" அதன்பின் சீடனைத் தகுந்த வழியில் அழைத்துச் செல்வதற்கும், கட்டம் கட்டமாக அவனை முன்னோக்கி நடாத்திச் செல்வதற்கும் ஒரு குருவின் அத்தியாவசிய தேவை எழுகின்றது. ஒரு தகுதியான குரு சீடனுடைய மனதின் மட்டத்தை நன்கு புரிந்து கொள்ளுகின்றார். அத்துடன், அவனது அந்த மட்டத்தில் இருந்தே அவனை முன் எடுத்துச் செல்லுகின்றார். இதனைப் பொதுவாகச் சோக்கிரதருடைய போதனை முறை என்று அழைக்கப் படுகிறது. சீடனின் மனமொட்டு மலர வேண்டியது அவசியமாகையால், குரு தனது கருத்தைச் சீடனின்மீது திணிப்பதில்லை. அந்த மனமொட்டை வலோத்காரமாக மலரச்செய்ய முடியாது. அப்படி அதனை வலோத்காரமாக மலரச் செய்யப் புகுந்தால் அது பூரண மலராக மலராது. "சரி, நீ என்ன சொல்கிறாய் என்பதை நான் புரிந்து கொள்கின்றேன். நீ வெற்றி அடையாது போகலாம் என்ற ஒரு பயம் உன்னிடத்திலே உள்ளது. அந்தத் தோல்வியைத் தொடர்ந்து சமூக அழிவு போன்ற பல பிரச்சினைகள் உனக்கு இருக்கலாம்".

**12. தெளிவான வாதங்கள்.**

"உரையாடல் பிரபஞ்சம்" என அழைக்கப்படும் சிந்தனைக்குள் எந்த வாதமாக இருந்தாலும், எந்தத் தருக்க அணுகுமுறையாக இருந்தாலும் அது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். குறித்த நேரத்திலே செயற்படுகின்ற காரிய காரணத்தை ஒருவர் அறிந்து கொள்ள வேண்டும். காரண காரியம் செயற்படுகின்ற தளத்தில் இருந்து முற்றாக வேறுபட்ட எந்தத் தளத்திற்கும் ஒருவர் பாயக்கூடாது. உலகில் உள்ள ஒரு மனிதன் என்ற வகையிலேயே நாம் வாதிக்க வேண்டும். மனித சமூகத்தின் ஓர் அங்கத்தவன் என்ற முறையிலேயே நாம் வாதிக்க வேண்டும். அப்படி வாதிக்காவிட்டால் நாம் ஒரு பௌதிக அதீத அலகு என்று நம்மை வைத்துக்கொண்டே வாதிட நேரிடும். முழுவதும் சமூகப் பிரச்சினைகளையும், தனி ஆள் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு நாம் பௌதிக அதீத வாதத்தை உபயோகிக்கக் கூடாது. அதேபோல முழுவதும் சமூகப் பொருளாதார வாதங் களால் பௌதிக அதீத உண்மைகளைப் புரிந்துகொள்ளுவதற்கும், விபரிப்பதற்கும் உப யோகிக்க முடியாது. எல்லாம் அது அது இருக்கின்ற மட்டத்திலேயே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் அர்ச்சுனன் தனது வாதங்களை ஒன்றோடு ஒன்று கலந்து குழப்பும் தவறையே விட்டுள்ளான். அவன் ஒரு புறம் யுத்தத்தில் மரணம், அழிவு என்பவற்றின் சாத்தியத்தோடு பயத்தினால் பீடிக்கப்பட்டவனாகவும் இருந்தான். அதனால் அவன் சாகவும் எல்லாவற்றையும் இழக்கவும் நேரலாம். அந்தப் பயங்கர நிகழ்ச்சி நிகழ்ந்தால் யுத்தத்தின் வெற்றி பற்றிய வினா எழாது. மறுபுறம், சமூக ஒற்றுமைக்குப் பொருத்தமான விழுமியங்களை அழித்துப் பாவம் செய்யும் பயத்தையும் உடையவனாக அவன் இருந்தான். அத்துடன் யுத்தம் என்ற பெயரில் தான் செய்யப்போகின்ற இத்தவறுகளின் விளைவாகத் தனக்கு என்ன நேரும் என்பதையும் அவன் புரிந்துகொள்ளவில்லை.

*பண்பாடு உருவாவதற்குக் காரணம் மனமே ஆகும்.*

**13. உள்ளது உண்மையானது.**

மனித இயல்பின் பௌதிக அதீத பகுதி அனுபவ அம்சங்களோடு விசேடமான முறையில் தொடர்புபட்டுள்ளது. இரண்டாவது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் கிருஷ்ண பரமாத்மா ஆத்மாவின் அழியாத தன்மை பற்றிய தத்துவத்தை எடுத்து உரைக்கின்றார். உண்மையில் நாம் இறக்கின்றோமா? ஆத்ம தத்துவத்தைத் தொடர்ந்து மரணத் தோற்றப்பாடு அந்த இரண்டாவது அத்தியாயத்தில் ஆராயப்படுகிறது. யார் இறப்பது? மரணத்தின் அர்த்தம் தான் என்ன? மரணம் பொதுவாக அழிவு என்றே கருதப்படுகின்றது. எதனையும் முற்றாக அழிக்கமுடியும் என்று கூறலாமா? உண்மையில் எல்லாவற்றுக்கும் ஓர் அழிவு உண்டா? அழிவு என்பது உள்ளதை முற்றாக நிராகரிப்பதாகும். அத்துடன், உள்ளது உண்மையானது என்று கூறப்படுகின்றது. உண்மையில் ஏதாவது ஒன்று இருக்கும்போது அதனை ஒரு தோற்றப்பாடு என்றோ கடந்துபோகும் ஒரு கட்டம் என்றோ கூறமுடியாது. உண்மையான ஒரு வஸ்து மறைய முடியாது. மறைந்துபோகும் ஒரு வஸ்துவை உண்மை என்று கூற முடியாது. உண்மையானது என்றும் இருக்கவேண்டும். ஆதலால் அது உண்மையானதே என்று கூறப்படுகிறது. உண்மையற்றது இருக்க முடியாது. எனவே, உண்மையைப் பொறுத்தவரையில் எவ்விதமான பயமோ சந்தேகமோ இருக்கவேண்டிய அவசியம் இல்லை. எது மரணிக்கின்றதோ அது ஒன்றில் உண்மையானதாக அல்லது பொய்யானதாக இருக்க வேண்டும். அதுபற்றி நாம் கற்பனை செய்யக்கூடிய மூன்றாவது வழி ஒன்று இருக்கமுடியாது. ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் இறக்கின்றார். அது அல்லது அவர் உண்மையா பொய்யா? இந்த வாதமுறையைச் சிந்திக்கும்போது நாம் எமது மனங்களைத் தெளிவாக வைத்துக்கொள்ள வேண்டும். இறந்தது உண்மையானது என்று கூறுவோமாயின் நாம் எமது வாதத்தில் முரண்பாடு உடையவர்களாக ஆவோம். ஏனெனில், அது உண்மையாக இருந்து வந்திருக்குமாயின் அதனை அழிக்க முடியாது. அதற்கு மரணம் இருக்க முடியாது. அது உண்மையானது என்றும், உண்மை இல்லாமல் இருக்கமுடியாது என்றும், உண்மை யற்றது இருக்க முடியாது என்றும் முன்னரே கூறப்பட்டு உள்ளது. எனவே, எது உள்ளதோ அது உண்மையானது. அது அழிக்கப்படக் கூடியது எனக் கருதவும் முடியாது. இறந்த ஒன்று உண்மை இல்லை என்று நாம் கூறுவோமாயின் அது உண்மையற்றது ஆகும். அதன்பின் அதனுடைய மரணம் பற்றிய வினா எழாது. முன்கூட்டியே அதற்கு உண்மையற்றது எனப் பெயர்சூட்டி ஆயிற்று. இல்லாத ஒன்றின் அழிவைச் சிந்திக்க முடியாது. ஆகையினால் எது உள்ளதோ அதனை அழிக்க முடியாது. அத்துடன் அழிக்கப்படக்கூடியது உள்ளதாகக் கருதப்படவும் முடியாது.

(தொடரும்...

---

**ஆன்மிகச் சிந்தனை**

காமம், கோபம், பொறாமை, ஆணவம் ஆகிய இழிந்த இயல்புகளிலிருந்து நாம் மீட்சி பெற்றால்த்தான் பூரண ஞானம் அல்லது பூரண விடுதலை நமக்குக் கிடைக்கும். இறைவன்மீது நாம் கொள்ளும் பக்தி, இறைவன்மீது நாம் கொள்ளும் பற்று நம்மிடமிருந்து உலகப்பற்றை நீக்கும். வினையால் உயிர், இன்ப துன்பங்களில் சிக்கித் தவிக்கிறது. இவற்றிலிருந்து விடுவிக்கும் ஆற்றல் இறைவனுக்கு மட்டுமே உண்டு. பிறவிக் கடலைக் கடப்பது என்பது இறைவனைத் தவிர்த்து விட்டு, மனிதனால் செய்யமுடியாது. அதற்கு ஒரு வழி உண்டு. அதுதான் "இறைவனடி சேர்தல்" என்கிறார் திருவள்ளுவர்.

*கடவுளுக்காகத் தொண்டு செய்தால் சுகம் கிடைக்கும்.*

# கண்டோம் கதிர்காமம்

[தொடர்ச்சி...

– திரு அன்னைதாசன் அவர்கள் –

அதற்குரிய ஒழுங்குகளையும் மிக அழகாகச் செய்திருந்ததுடன் அவர்கள் எமக்காக ஒரு வீட்டையும் ஒழுங்குபண்ணி இருந்தனர். ஆனால் சுவாமிகள் உட்பட எம் மைப்போன்ற (நைன்ரிகள்) பத்துப்பேர் மட்டும் அவ்வீட்டில் தங்கினோம். மீதி இளைஞர்கள் எல்லோரும் கல்யாண மண்டபத்திலேயே தங்கினர். நாங்கள் தங்கிய வீடு சகல வசதி களையுங் கொண்டதான ஓர் ஆடம்பர இல்ல மாக இருந்தது. அதன் சிறப்பம்சத்தையும் சொல்லியே ஆகவேண்டும். மேற்குப் பக்க மாக சுவாமி அறையும் குசினி அறையும் அருகருகே அமைந்திருந்தது. எம்மைப்போன்ற வாஸ்துப் பிரியர்களை வியக்க வைத்தது மட்டுமல்ல, அவர்கள் நீண்டகாலமாக இவ் வீட்டில் சகல சம்பத்துடனும் சந்தானத்துட னும் மிக சௌகரியமாக வாழ்கிறார்கள் என்பதையும் அறிய முடிந்தது. மேலும் வியப்பைத் தந்த செய்தியாகவும் அமைந்து உள்ளது. அவ்வீட்டில் வசிப்பவர்களது பக்திக்கு எடுத்துக்காட்டாக சுவாமி அறை ஒழுங்கமைப்பு மிகவும் நேர்த்தியாகவும் தூய்மையாகவும் பேணி வருகின்றமையை எம்போன்றவர்களால் உணர முடிந்தது. ஆஞ்சநேயர் தொட்டு சாயிபாபா வரையான படங்களுடன் வழமையான எமது விநாயகர், மகாலக்சுமி, கல்யாண முருகன் (வள்ளி தெய்வானை) சமேதரராக காட்சி தந்தனர். தூப தீபங்களுடன் மஞ்சளொடு குங்குமமும் காணப்பட்டது. ஆக எங்கு சைவன் வாழ் கிறானோ அங்கு அவன் தன்னைத் தனித் துவனாக இல்லத்திலும் ஓம்பி வருகிறான் என்பதை இத்தரிசிப்பினூடாக ஞானச்சுடர் வாசகர்களிற்கு அறியத்தருகிறேன். நாம் ஒரு போதும் கெடமாட்டோம். ஏனெனில் எமது பின்னணி ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டது என்பது அடியேனின் பார்த்தறிவும் பட்டறிவும் என்பதை வருங்கால இளைஞர் யுவதிகளுக்காகப் பதிகின்றேன்.

அதுமட்டுமல்ல, இவர்களின் இவ் இடக்குமுடக்கான ஏற்ற இறக்கமுள்ள காணி அமைப்பினுள்ளும் அந்த மாபெரும் நவீன வீட்டிற்குரிய வேலையாட்கள் தங்கும் அறை களும், வாகனத் தரிப்பிடமும் அமைத்திருக் கின்ற பாங்கு இருக்கிறதே. அதை நீங்கள் நேரில் பார்த்தாலேயே அவர்களின் கட்டிடக் கலையின் நவீனத்துவத்தையும் அதனுள் ளும் சைவ இல்லப் பேணுகையையும் உணரமுடியும். இப்படியாக இவ்வீட்டின் ஒழுங் கமைப்பைப் பற்றி எம்முள் நாம் வியந்த வண்ணமிருந்தவேளை இரவுச் சாப்பாட்டிற் குரிய அழைப்பு வந்தது. இடியப்பம் சாம் பாருடன் சம்பலும் செய்திருந்தனர். இடியப்ப மும் அவர்களின் சாதம் போன்று வெள்ளை வெளேரென்று அழகாக இருந்ததுடன் மிகச் சுவையாகவும் பதமாகவும் இருந்தது. எல் லோரும் வயிறார உண்டபின் படுக்கைக்குத் தயாரானோம். வீட்டுக்காரர் தங்கள் பிள்ளை களுடன் கொழும்பில் வார இறுதி நாட்களில் செல்வது வழமையாம். அதனால் எந்தவித தயக்கமுமின்றி முழு வீட்டையும் எமக்குத் தந்ததுடன் படுக்கை விரிப்புகள் முதல் கட் டில்கள் தலையணை அனைத்தையும் தந்து எம்மை அரவணைத்த நிகழ்வு அவர்களின்

*தர்மம், நீதி இரண்டும் சேர்ந்துதான் பண்பு உண்டாகிறது.*

விருந்தோம்பல் பண்பிற்கு ஓர் அரிய எடுத்துக்காட்டாக இருந்தது. இந்நாட்களில் நாம் ஒன்றுக்கு இரண்டு பூட்டுப்போட்டு பூட்டி எவ்வளவு அச்சத்தின் மத்தியில் இரவை எம் யாழ் மண்ணில் கழித்துக்கொண்டிருப்பதையும் சமகால எங்கள் பாதுகாப்பற்ற தன்மையையும் பதிந்து கொள்கிறேன்.

விடிந்தது. இளைஞர்கள் அம்மண்டபத்தில் குளித்து காலைக் கடன்களை நிறைவேற்றி ஆயத்தமாகினர். நாம் இங்கு மிகவும் வசதியான குளியலறையில் நம்மைத் தயாராக்கி இன்றைய காலை நிகழ்வுக்காகக் காத்திருக்கிறோம். இவ்வேளை காலைச் சாப்பாடு அருமையான மலைநாட்டுத் தூய வாசனைத் தேனீர் இவற்றை முடித்தபின் வந்தவர்கள் எல்லோரும் மூன்று குழுக்கள் ஆகினோம். ஆம் இக்குழுக்கள் ஆவன,

1) பண்டாரவளை தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் புதிய ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பினைப் பார்வையிடல்.
2) யோக பயிற்சி வழங்கல். தியானம் உட்பட
3) அப்பகுதியிலுள்ள க.பொ. த. (சா.தர) மாணவர்களுக்கான கணித துரித மீட்டல் வகுப்புக்களை நடாத்துதல்.

இதில் முதலாவது குழுவிற்கு எமது மூச்சுப்பயிற்சி, தியானப் பயிற்சிகளின் ஆசானாகிய திரு கலியுகவரதன் சுவாமிகளுடன் ஒரு குழுவினர் அருகிலுள்ள ஆலய மண்டபத்திற்குச் சென்றனர். இவரது வகுப்பிற்கான சகல ஆயத்தங்களையும் மிக அற்புதமாகச் செய்திருந்தனர். தியானப் பயிற்சி வெகு சிறப்பாக நடைபெற்றது. இதன் முடிவுத் தறுவாயில் எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையால் முன்நிகழ்வுகளை மொழிய முடியவில்லை. ஆனால் இறுதி நிறைவை வைத்தே பயிற்சியின் தரத்தையும் பெறுமதியையும் உணரமுடிந்தது. அங்கு பிள்ளைகளுடன் பெற்றோரும் சிலர் கலந்து கொண்டதுடன் சகல தரத்திலான பிள்ளைகளும், ஆண் பெண், மொழி மத வேறுபாடுகளின்றி கலந்துகொண்டு தம் கருத்துக்களை ஆவணமாக்கித் தந்தது சிறப்பாக இருந்தது. அதிலும் ஓர் கிறிஸ்தவப் பிள்ளையின் கவி மிக மிக உச்சமாக இருந்தது. இது சந்நிதியான் ஆச்சிரமத்து முயற்சியின் வெற்றிக்கு ஓர் முத்தாய்ப்பு நிகழ்வாக இருந்தது. படங்கள் எமது மீரியப்பெத்தை மண் சரிவின் ஆவண நூலில் அழகாக உள்ளது. அடுத்த குழுவாக க.பொ.த.சா. வகுப்பு பரீட்சைக்குத் தேற்றியுள்ள பிள்ளைகளுக்கான துரித மீட்டல் பயிற்சி வகுப்பிற்கு... (காட்சி தொடரும்...

**சரணடைந்தேன் முருகா**

உள்ளத்தில் நீ இல்லை முருகா - நெடு
பள்ளத்தில் வீழ்ந்துறைந்தேன் முருகா
கள்ளத் தனங்க ளெல்லாம் கற்றறிந்தேன் முருகா - சிறு
கணமேனும் உனை நினைக்கவில்லை முருகா
வெள்ளத்தில் நாவற்றி நின்றிருந்தேன் முருகா- தானே
விழலுக் கிறைத்த நீராகியது என் வாழ்க்கை முருகா
சுள்ளெனவே உறைத்தது உன் சோதிவடிவம் முருகா- உனை
எள்ளிநகை யாடியவன் நின் காலடியில் சரணமடைந்தேன் முருகா.

-பொ. பாலேஸ்வரன்-

*பண்பில்லாத நூலறிவால் பயன் ஒன்றுமில்லை.*

# சைவ சமயத்தில் கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயங்களும் அவற்றின் விஞ்ஞான விளக்கங்களும்

– செல்வன் க. மதுஷன் –
(தரம் – 11, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

உலகில் அறிவியலும் விஞ்ஞானமும் அபரிமிதமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவை இன்று மிகவும் சிரமப்பட்டு கண்டறிந்து நமக்கு கூறுகின்ற பல விடயங்களை இற்றைக்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த எமது மூதாதையர் கண்டறிந்துள்ளனர். அவற்றை நாம் நோக்குவோம்.

பொதுவாக நாம் எல்லோரும் "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என கூறக் கேள்விப்பட்டிருக்கின்றோம். இதன் விளக்கம் யாதெனின் கோவிலில் இருக்கும் கோபுரங்கள்தான் அவற்றின் கலசத்தில் இடப்படும் வரகு தானியங்கள் 12 வருடங்கள் ஆனாலும் பழுதடையாது மின்னல் தாக்கத்தின்போது மின்னைக் கவர்ந்து மின்னல் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கின்றது.

அடுத்து நம் சித்தர்களை நோக்குவோமேயானால் அவர்கள் உடலைத் தெய்வமாகப் போற்றி அருட்சக்தியை வளர்த்து ஆன்மீக வளர்ச்சியில் உயர்ந்தவர்களாகும். அட்டமாசித்துக்கள் வாய்க்கப்பெற்ற அவர்கள் சித்துக்களை எவ்வாறு செய்தனர் என்பது பற்றி இன்றைய விஞ்ஞானத்தாலும் கண்டுபிடிக்கவில்லை. அடுத்து அவர்கள் கண்டு பிடித்த நவபாஷான உலோகத்தை இன்று எந்த விஞ்ஞானிகளாலும் கண்டு பிடிக்க முடியவில்லை.

அடுத்து எம்முன்னோரின் அன்றாட வாழ்க்கையை நோக்கினால், அதிகாலையில் நித்திரையிலிருந்து எழும்பும் அவர்கள் அன்று முழுவதும் உற்சாகமாக இருக்க வழிவகுத்தது. ஆல், வேம்பு போன்ற குச்சிகளினால் பல் துலக்கினர். இதன்மூலம் வாயிலுள்ள கிருமிகள் அழியும். தினமும் தலைக்கு நீர் ஊற்றினர். இது உடலின் சூட்டைத் தடுக்கும். பின் ஆலயத்திற்கு வெறுங் காலுடன் நடந்து செல்வர் இதை இன்றைய விஞ்ஞானம் "அ.்.கு பஞ்சர்" என அழைக்கிறது. காலில் கற்கள் குத்துவதனால் உள்ளங்காலிலுள்ள நரம்புகள் சிறப்பாக செயற்பட்டு பல்வேறு உடல் உபாதைகள் அகலுகின்றன.

அடுத்ததாக இன்று பல்வேறு ஆராய்ச்சிகளின் பின் எமது பால்வீதியில் 9 கோள்கள் உண்டென்று சொன்னதை நம் மூதாதையர் நவக்கிரக வழிபாட்டில் கண்டனர். நாம் சாதாரணமாக கோவிலில் போடும் தோப்புக்கரணம் அதை வெளிநாடுகளில் மூளைத்திறனை விருத்தி செய்யும் பயிற்சியாக கொடுத்து வருகின்றனர்.

நமது சமயத்தின் முக்கிய பகுதிகளில் ஒன்று விரதம் ஆகும். அதற்கான விஞ்ஞான விளக்கம் யாதெனின் நாம் எப்போதும் உணவை உண்பதால் எமது இரைப்பை ஓய்வில்லாமல் இயங்குகிறது. இதற்கு ஓய்வு கொடுப்பதே விரதம் ஆகும். அடுத்து யாகங்களில் ஹோம குண்டத்தில் இருந்து வெளிப்படும் புகை எமது சுவாசம் மற்றும் அசுத்த வளியை தூய்மையாக்குகின்றது.

இன்றைய அறிவியல் பல உபகரணங்களை வைத்துக் கொண்டும் சூரிய,

*உன் கண்கள்தான் உன் உடலுக்கு விளக்கு.*

சந்திர கிரகணங்கள் என்பவற்றைக் கண்டு பிடிக்க சிரமப்படுகின்றனர். ஆனால் எம் முன்னோர் பல ஆண்டுகளுக்கு பின்வரும் பௌர்ணமி, அமாவாசை என்பவற்றை கணக்கிட்டு பஞ்சாங்கமாக எழுதினார்கள்.

அண்மையில் கண்டறியப்பட்ட ஆய்வின்படி இந்தியாவில் சோழர்கள் கட்டிய 7 சிவன் ஆலயங்களும் ஒரே நேர்கோட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இதை இன்றைய பொறியியலாளர்களால் கூட நிர்மாணிக்க முடியாது. எமது சமயத்தின் பெருமை அறிந்து சுவிஸ் நாட்டில் ஜெனிவா அணு ஆராய்ச்சி கூடத்திற்கு முன்னால் நடராஜப் பெருமானை வைத்துள்ளனர். எமது சித்தர்கள் கண்டு பிடித்த பல்வேறு மூலிகைகளையும், உடற்பயிற்சிகளையும் கொண்டு இன்று தீர்க்கமுடியாத நோய்களை தீர்க்க அறிவியல் முயல்கின்றது. பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் பின்பற்றி வருகின்ற யோகாசனம், ஓங்காரப் பயிற்சிகளை எல்லா நாட்டவரும் பின்பற்றி வருகின்றனர்.

இத்தகைய பெருமை கொண்ட நமது சமயம் பல்வேறு காரணிகளால் அழிவுறும் நிலையில் உள்ளது. நாம் அதைக் காத்து நிலைநாட்டி சைவசமயிகளாக வாழ்வோம்.

## சிந்தனைக் கதை

பொய் சொல்லி பணம் சம்பாதிக்கும் போலிச்சாமியார் ஒருவருக்குப் பக்கத்துத் தெருவில் வசிக்கும் துறவியைப் பிடிக்காது. காரணம் இவரது பூசைக்கு வரும் பக்தர்களைவிட அந்தத் துறவியின் உபதேசங்களைக் கேட்க ஏராளமான பக்தர்கள் திரண்டிருப்பதுதான். அதனால் தனக்கு வரவேண்டிய வருமானம் குறைகிறதே என்று நினைத்த அந்தச் சாமியாருக்கு துறவியின்மேல் பொறாமை. ஒருநாள் துறவியின் ஆச்சிரமத்துக்குக் கோபத்துடன் வந்த போலிச்சாமியார் மக்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருந்த துறவியைப் பார்த்து "நான் உம்மை மதிக்கத் தயாராக இல்லை. உம்முடைய ஒரு சொல்லுக்கு என்னைக் கட்டுப்பட வைத்தீரென்றால், நீர் உண்மையான துறவிதான் என்று உம்மைக் குருவாக நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றார். "என்ன சொல்கிறீர்கள் ஐயா? காதுல விழலை கொஞ்சம் பக்கத்தில் வந்து சொல்லுங்கள்" என்றார் துறவி. போலிச்சாமியாரும் நெருங்கிச் சென்று சொன்னார். "என்னவோ தெரியல்லை, காதில விழலை என் வலப்பக்கம் வந்து நின்று சொல்லுங்களேன்" என்று பணிவுடன் கூறினார் துறவி. போலிச்சாமியாரும் அவரது வலப்புறம் சென்று பேசினார். "எனக்கு இடம் வலம்கூட சரியாகத் தெரியல்லை. இடது காதுதான் நல்லா கேட்கும் போலிருக்கு. கோவிக்காம இடப்பக்கமாக வந்து சொல்ல முடியுமா ஐயா" என்றார் துறவி. "என்னடா பெரிய ரோதனையாப் போச்சு" என்று கூறியபடியே துறவியின் இடப்புறம் சென்று தனது சவாலை உரக்கக் கூறினார் சாமியார். புன்முறுவலுடன் அந்தச் சாமியாரைப் பார்த்த துறவி "அதான் நான் சொன்னபடியெல்லாம் செஞ்சுட்டியே சிஷ்யா! உட்காரு! உபதேசத்தைக் கேளு! நீ ஆத்திரத்தோடும் பொறாமையோடும் வந்ததால் உன் அறிவு மழுங்கிப் போச்சு. அதனால் நான் ஜெயிச்சுட்டன். இதுவே நீ அன்போட வந்திருந்தேன்னா நான் தோத்திருப்பேன்" என்றார்.

ஆத்திரம் கண்களை மறைக்கும். நிதானம் நினைப்பதையெல்லாம் சாதித்துக் கொடுக்கும். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம். உலகத்தில் சூழ்ந்திருக்கும் இருள் முழுவதும் ஒன்று சேர்ந்தாலும் ஒரு சிறிய கைவிளக்கின் ஒளியைத் தடுத்துவிட முடியாது.

*அறிவிற்கு அடையாளம் அடங்குதலே ஆகும்.*

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

விதுரர், "மன்னா! பற்றுதல் இல்லாதவனும், நல்லவர்களால் ஆதரிக்கப்பட்டவனுமான எந்த மனிதன் தன் சக்தியைக் கெடுத்துக் கொள்ளாமல் கடமையை நன்றாகச் செய்கிறானோ அந்த நல்லவனைப் புகழானது வேகமாக வந்து சேருகிறது. நல்லவர்கள் மகிழ்ந்து அருள் புரிவதால் அவன் எப்பொழுதும் சுக வாழ்வு வாழ்கிறான்".

அநியாயமான வழிகளில் தேடிய பெருஞ் செல்வத்தை எந்த மனிதன் புறக்கணிக்க ஆரம்பிக்கிறானோ அந்த மனிதன், பாம்பு தன்மேல் உள்ள செட்டையை களைவதுபோலத் துயரத்திலிருந்து விடுபட்டுச் சுகமாகத் தூங்குவான்.

பொய் சொல்லி உயர்வை அடைவது, அரசன் (ஆட்சியாளர்) விடயத்தில் கோள் சொல்வது, குருவிடம் கபடமாக நடந்து கொள்வது முதலியன பிரும்பஹத்திக்கு சமமானவை.

பொறாமையானது, எல்லா விதத்திலும் மரணத்துக்கு சமம். அதிக பேச்சு செல்வத்தை அழிக்கும். குருவுக்குப் பணிவிடை செய்யாமை வேகம் (அவசரம்) அடுத்தவர்களின் புகழ்ச்சி என்னும் மூன்றும் திறமைக்குப் பகையாகும்.

## மாணவர்களுக்கு

சோம்பல், மதம் மோகம், சஞ்சல சுபாவம், வீண்பொழுது போக்கும் கூட்டம், கர்வம், விறைப்பு, பேராசை- என்னும் இந்த ஏழு தோஷங்களும் எப்பொழுதும் மாணவர்களுக்கு குற்றங்களாகக் கருதப்படுகின்றன.

சுகத்தை விரும்புபவனுக்குப் படிப்புக் கிடையாது. படிப்பை விரும்புபவனுக்குச் சுகம் கிடையாது. சுகத்தை விரும்புபவனாக இருந்தால் படிப்பை விட்டு விடல் வேண்டும். படிப்பை விரும்புபவனாய் இருந்தால் சுகத்தை விட்டு விடவேண்டும்.

எவ்வளவு விறகுக் கட்டைகளைப் போட்டாலும் நெருப்பானது திருப்திப்படுவதில்லை. எவ்வளவு நதிகள் தன்னுடன் சங்கமமானாலும் கடலானது திருப்திப்படுவதில்லை. எல்லா உயிரையும் கவர்ந்தாலும் யமன் திருப்திப்படுவதில்லை. பல ஆண்களோடு சேர்ந்தாலும் விபச்சாரிகளுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. திருப்தி ஏற்படாதவரை எதிலும் மகிழ்வு காண முடியாது.

ஆசை, தைரியத்தை அழிக்கிறது. யமன், மனைவி மக்கள் முதலிய செழிப்பை அழிக் கிறான். கோபம், செல்வத்தை அழிக்கிறது. கருமித்தனம், புகழை அழிக்கிறது. பேணிப் பாதுகாக்காமலிருப்பது பசுக்களை அழிக்கிறது. சோம்பல் எல்லாவற்றையும் அழிக்கிறது.

பிராமணன் கோபம் இராஜ்ஜியங்களை அழித்துவிடும். கோபம் உன்னையே அழித்து விடும்.

ஆடுகள், வெண்கலப் பாத்திரம், வெள்ளி, தேர், விடத்தை இழுக்கும் சகோதரப் பறவை, வேகத்தில் வல்லவனான அந்தணன், வயதான இரத்த உருத்துடையவன்- பங்காளி,

கஷ்ட நிலையில் உள்ளவர்கள் நோயாளி கள் முதலானவர்கள் எப்போதும் நம்மால் பேணி வைக்கப்பட வேண்டியவர்களாகும்.

சகோதரப் பறவை என்பது விடம் இருப்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் உடையது. அந்தக் காலங்களில் அரசர்கள் உண்ணும் உணவைச் சோதனை செய்வதற் காக இப்பறவை பயன்படுத்தப்பட்டுள்ளது. உணவை சகோதரப் பறவைக்கு காட்டும் பொழுது அதன் முகத்தில் தோன்றும் வேறு பாடுகளின் அடிப்படையில் உணவில் விடம் இருப்பதை அறிந்தார்கள். இன்றும் மோப்ப சக்தி கொண்டு உணவின் சுவையை அறி யக் கூடியவர்கள் உள்ளார்கள். இது தவிர அரசர்களிடம் "ஐயக்காரர்கள்" எனப்படும் பணியாளர்கள் இருந்திருக்கிறார்கள். அரசர் களினால் உட்கொள்ளப்படும் உணவை இவர்கள் முதலில் உட்கொள்வார்கள். அதன் பின்னரே அரசன் உணவு கொள்வான். ஔவையாரின் "ஐயம் இட்டு உண்" எனும் வரியை இங்கு நினைவு கூரலாம்.

சந்தனம், ஆடு, காளைமாடு, வீணை, கண்ணாடி, தேன், நெய், இரும்பு, தாமிர பாத்திரம், சங்கு, கோரோசனை முதலியவை சிறந்தவை. தேவர்கள், அந்தணர்கள், அதிதி கள் (விருந்தினர்) போன்றவர்களை முறைப் படி வரவேற்பதற்கு இவற்றை வீட்டில் வைத் துக்கொள்ள வேண்டும்.

மிகவும் பெருமை மிகுந்ததும், எல்லா வற்றிலும் மேம்பட்ட புண்ணியத்தை தருவது மான விடயத்தைச் சொல்கிறேன். காமத் தினாலோ, பயத்தினாலோ, கருமித் தனத் தினாலோ, உயிருக்காகவோ ஒருபோதும் தர் மத்தை விடக்கூடாது. தர்மம் நிலையானது. சுக துக்கங்கள் நிலையற்றவை. உயிர் நிலையானது. உடம்பு நிலையற்றது. உடம் பின்மேல் பற்றைத் தள்ளிவிட்டு, நிலையான உயிரின் நிலைத்திருந்த மகிழ்வுக்காகச் செயற்படுங்கள்- செல்வ வசதிகள் எல்லாம் நிறைந்த பூமி முழுவதையும் அரசாண்டு இறுதியில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு யம னிடம் போய்ச் சேர்ந்த வலிமை மிகுந்த அரசர்களைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

மனிதர்கள், கஷ்டப்பட்டு வளர்த்த தங் கள் பிள்ளையைக்கூட, அவன் இறந்துபோய் விட்டால், வீட்டிற்கு வெளியே தூக்கிப்போட்டு விடுகிறார்கள். அவனுக்காகத் துடிதுடித்து அழுகிறார்கள். சிதையின் நடுவில் மரக் கட்டையை (நெஞ்சாங்கட்டை) போடுகிறார் கள். இறந்து போனவனுடைய செல்வத்தை மற்றொருவன் அனுபவிக்கிறான். பறவை களும், நெருப்பும், மனிதனுடைய உடம்பை உண்ணுகின்றன. இந்த மனிதன் பாவ புண்ணி யத்தில் புரண்டு, இரண்டுடனும் மேல் உல கம் போகிறான். பூவும், பழங்களும் இல்லாத மரங்களை பறவைகள் விட்டுவிடுவதுபோல, உறவினர்களும், நண்பர்களும், பிள்ளைகளும், இறந்த உடலைச் சிதையில் வைத்துவிட்டுத் திரும்பி வந்து விடுகிறார்கள். நெருப்பில் போடப்பட்ட உடலின், உயிரை அவன் செய்த நல்வினை, தீவினைகள் மட்டுமே தொடர்கின் றன. ஆகையால் மனிதன் முயற்சி செய்து நல்லவற்றைச் செய்ய வேண்டும்.

அரசே! மூன்று உலகங்களிலும் எங் கும் அஞ்ஞான மயமான பேரிருள் சூழ்ந்து இருக்கிறது. அந்த இருள் இந்திரியங்களைப் பெரிதும் மயக்கத்தில் ஆழ்த்துகிறது. நீங்கள் இதை உணர வேண்டும். சரியாக உணர்ந் தால், இந்த உலகில் பெரும் புகழை அடை வீர்கள். பூவுலகிலும், மேலுலகிலும் உங் களுக்குப் பயம் இருக்காது.

ஜீவாத்மா ஒரு நதி. புண்ணியம்தான் அதிலுள்ள நீர். இந்த நதி பரம்பொருளிடம் இருந்து உண்டானது. சந்தோஷத்தைக் கரையாகக் கொண்டது. இந்த நதியில் இரக் கம் என்ற அலை வீசுகிறது. புண்ணியம்

*பொன்னிலும் பார்க்கப் பொழுது மிகவும் பெரியது.*

செய்தவன் இதில் குளித்துத் தூய்மை உடையவனாகிறான். ஆத்மா என்றும் அழி வில்லாத தூய்மையானது.

காமம், குரோதம் முதலான முதலை கள் உள்ளது. ஐம்புலன்களாகிய தணணீரை உடையது; பிறப்பு, இறப்பு என்னும் ஆழ மான மடுக்கைகளை உடையது- சம்சாரம் என்ற நதி (குடும்ப வாழ்வு). இந்த நதியைத் தைரியம் என்னும் ஓடத்தைக் கொண்டு தாண்ட வேண்டும்.

அறிவு, தர்மம், வித்தை கல்வி, வயது- முதலியவைகளில் மூத்தவரின் உற வைப்பேணி உபசாரம் செய்து, அவரை மகிழ் வித்து, செய்யக்கூடிய செய்யக்கூடாத காரி யங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் மனிதன், ஒருபோதும் மயக்கத்தை அடைய மாட்டான்.

காம வேகத்தையும் பசியையும் மன உறுதியால் அடக்க வேண்டும். கை, கால் களைக் கண்ணால் காக்க வேண்டும். கண், காதுகளை மனதால் கட்டுப்படுத்த வேண்டும். நல்ல செயல்களால் மனதையும் வாக்கை யும் காக்க வேண்டும்.

தினமும் நீராடுபவன், எப்போதும் பூணூலை அணிந்திருப்பவன், தினந்தோறும் தவறாமல் வேதத்தை ஓதி வருபவன், தீயவர் கள் இடும் அன்னத்தை உண்ணாதவன், எப்போதும் உண்மையே சொல்பவன், குரு வுக்குத் தொண்டு செய்பவன்- இப்படிப்பட்ட வன் இம்மையிலும் மறுமையிலும் சிறப்பாக வாழ்வான்.

வேதங்களைப் படித்தவன், தினந் தோறும் தீமூட்டி யாகம் முதலியவைகளைச் செய்து நாட்டு மக்களை நல்லபடி காப்பவன், பசுக்களைக் காப்பவன், மக்கள் நன்மைக் காக யுத்தத்தில் மரணமடைந்தவன், இப்படி யான சத்திரியர்கள் தூய்மையான மனத் தோடு சொர்க்கத்தை அடைகிறார்கள்.

வைசியர்கள், வேத சாத்திரங்களைப் படித்த அந்தணர்களுக்கும், அரசர்களுக்கும், தன்னை அண்டி வந்தவர்களுக்கும் உரிய காலத்தில் வேண்டிய பணத்தைத் தந்து உதவி செய்ய வேண்டும். செலவு செய்து யாகத்தை நடத்தி வைத்து, கார்ஹபத்யம், ஆஹவன்யம், தஷிணம் என்றும் புனிதமான மூன்று அக்கினிகளின் புகை உலகெங்கும் பரவச் செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் வைசியர்கள் இறந்த பிறகு சுவர்க்கத்தில் பேரின்பத்தை அனுபவிப்பார்கள்.

வேளாளர்கள், அந்தணர், அரசர், வைசியர் முதலானவர்களுக்கு முறைப்படி நியாயமான தொண்டுகளைச் செய்து, அம் மூவரையும் மகிழ்ச்சியுறச் செய்தும் வாழ் பவர்கள், பாவங்களிலிருந்து விடுபட்டு இறந்த பின் சொர்க்கத்தில் சுகம் காண்பர்.

நான்குவிதமானவர்களின் தருமத்தை யும் சொன்னேன். ஏன் சொன்னேன் என்ற காரணத்தையும் கேளுங்கள். பாண்டுவின் மகனான தர்மன், சத்திரிய தர்மத்தில் இருந் தும் விலகி இருக்கிறான். நீங்கள் அவனை மறுபடியும் ராஜதர்மத்தில் ஈடுபடுத்த வேண் டும். தர்மனை அரசனாக்க வேண்டும் என்று சொல்லி முடித்தார்.

அப்போது திருதராஷ்டிரன், "விதுரா! தினந்தோறும் நீ எனக்குச் சொல்வது எல் லாம் உண்மைதான். நீ என்ன சொல்கிறாயோ அது எனக்கும் உடன்பாடானதுதான். பாண்ட வர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று தான் நானும் நினைக்கிறேன். இருந்தாலும், துரியோதனனை நினைத்தவுடன் மறுபடியும் புத்தி தடுமாறிப் போகிறது. விதியை வெல்ல யாராலும் முடியாது. விதியை யாரும் ஒன் றும் செய்ய முடியாது. விதியின் முன்னால் மனித முயற்சி எல்லாம் வீண் என்றே நினைக்கிறேன்" என்று சொன்னான். விதுரர், திருதராஷ்டிரனுக்குச் செய்த உபதேசத்தினால்

*கடமையைச் செய்வதே பெரும் புகழுக்கு வழி.*

எந்தப் பயனும் விளையவில்லை. விதி, தன் வழி எல்லாவற்றையும் நடத்திச் சென்றது. தர்மம் எது என்று அறிந்தவன் கூட, அதன் வழிநடக்க முடியவில்லை. பாவம் செய்தவன், தன் பாவங்களுக்கான தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும்.

விதுரர் சொன்ன நீதி, பரந்தாமர் கூறிய தத்துவங்கள் எதையும் திருதராஷ்டிரனுடைய மனம் ஏற்கவில்லை. துரியோதனன் பிறந்தபோது, அசரீரி கூறியது "மூத்த உன் மகனால் குலநாசம் ஏற்படும்" இதையெல்லாம் நினைவு கொண்டாலும் துரியோதனின் முடிவுப்படியே திருதராஷ்டிரன் நடந்தான்.

குருஷேத்திரத்தில் தர்ம யுத்தம் ஆரம்பமாகியது. போரில் தன் பிள்ளைகளையும், பேரர்களையும், உறவினர்களையும், பெரிய அளவில் இழந்த திருதராஷ்டிரன், "சிறகுகளை இழந்த கருடன்போல நான் இருந்து என்ன பயன்? உறவினர்களையும் பிள்ளைகளையும் இழந்து விட்டேனே. கண்ணன், பீஷ்மர், துரோணர் முதலிய உத்தமர்கள் சொல்லியும் நான் கேட்கவில்லையே, என்னை விட அதிக துக்கமுள்ள மனிதன் வேறு எவன் இருக்கிறான்?" என்று பலவாறு புலம்பிப் பெரும் துக்கத்தில் ஆழ்ந்தபடி படுத்திருந்தான்.

அப்போ விதுரர், மன்னா! எழுந்திருங்கள். ஏன் படுத்திருக்கிறீர்கள்? தைரியத்தால் மனதை நிலை நிறுத்திக் கொள்ளுங்கள். இதுதான் எல்லா உயிரினங்களுக்கும் முக்கியமான வழி, வளர்ச்சிகள் குறைந்து போகும், உயர்வுகள் விழுந்து போகும். சேர்வதெல்லாம் பிரிந்துபோகும். இதுதான் முடிவு. உயிர்கூட மரணத்தை முடிவாக்கி உடலை விட்டுப் பிரிந்து விடுகிறது. யுத்தத்தில் ஈடுபடாதவனும் இறக்கிறான், யுத்தம் செய்பவனும் இறக்கிறான், மன்னா! யாரும் மரணத்தை தாண்டியதில்லை. அப்படி இருக்கும்போது நீங்கள் ஏன் புலம்புகிறீர்கள்?

(விதுரநீதி என்பது பாரத யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் விதுரரால், திருதராஷ்டிர மன்னனுக்கு கூறப்பட்ட பகுதியைக் குறிப்பதாகும். ஆனால் யுத்தம் நடந்து கொண்டிருந்த வேளையில் இவையும் விதுர நீதியில் அடங்கும் எனக் கருதுவதனால் அப்பகுதியையும் விதுரநீதிக் கருத்தாகத் தொடர்கிறேன்.)

(தொடரும்...

**வேலவன் புகழ் உரைத்து மகிழ்ந்து வாழ்வோம்**

ஆற்று நீரில் அமிழ்ந்து நீயும்மன அழுக்கற்று
தொண்டைமானாற்று நீரே உன்மனச்சுமை குறைவிலக்கும்
சோற்றை உண்டு பசிஆற சந்நிதி கோவிலுமிருக்கு
சுகம் கொடுக்க மனச்சுமை குறைக்க வெள்ளி வேலுமிருக்கு
க்காக்க வென்று கையில் ஏந்தும் வேலவன் கைவேல்
சந்நிதி கோவில் உள்ளிருந்து யாவரையும் கணித்திடும் வேல்
வாக்கில் ஒன்றும் மனத்தில் ஒன்றும் என்று உரைத்திடாதீர் - நல்ல
வார்த்தை பேசி வேலன் புகழ் பாடி மகிழ்ந்து வாழ்வீர்

-சின்னப்பு தனபாலசிங்கம்-

# அருணந்தி சிவாசாரியார்

– திரு க. சிவசங்கரநாதன் அவர்கள் –

சோழதேசத்து நடுநாட்டிலுள்ள திருத்துறையூரிலே முப்பொழுதும் திருமேனி தீண்டும் ஆதி சைவ மரபிலே சைவ சித்தாந்தந் தழைத்தோங்குமாறு ஒருவர் திருவவதாரஞ் செய்தருளினார். அவர் சமய விசேட நிருவாண தீட்சைகளும் ஆசாரிய அபிஷேகமும் பெற்று வேத சிவாகமம் முதலிய ஞான நூல்களை ஓதியுணர்ந்து சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயருடையவராய் விளங்கினார். அவர் தமது ஆணைவழி நின்று அச்சுத களப்பாளர் பெற்ற மெய்கண்ட தேவரின் மகிமைகளைக் கேள்வியுற்று அவரைத் தரிசிக்க விரும்பி திருவெண்ணெய் நல்லூரை அடைந்தார். அப்பொழுது மெய்கண்ட தேவர் ஆணவத்தின் இயல்புகளைப் பற்றி தம் மாணவர்களுக்கு உபதேசஞ் செய்து கொண்டிருந்தார். அங்கு வந்த சகலாகம பண்டிதர் தம் வரவுகண்டும் தம்முடன் மெய்கண்ட தேவர் ஒன்றும் பேசாதிருந்தமையால் மனச் செருக்கோடு அவர் முன்நின்று ஆணவத்தின் வடிவம் எவ்வாறிருக்கும் என்று வினவினார். மெய்கண்ட தேவர் அதற்கு விடையாக அவரையே சுட்டிக் காட்டியதன்மூலம் "இப்படியிருக்கும்" என்று குறிப்பால் உணர்த்தியருளினார். அதனால் செருக்கு அகன்ற சகலாகம பண்டிதர் மெய்கண்ட தேவரின் மகிமையை உணர்ந்து வணங்கி தம்மைச் சீடராக ஏற்று ஞானோபதேசஞ் செய்தருளும்படி பிரார்த்தித்தார்.

சகலாகம பண்டிதரின் பக்குவ நிலையைக்கண்ட மெய்கண்ட தேவர் அவருக்குச் சிவஞானபோதத்தை உபதேசித்து அருணந்தி சிவம் என்னும் தீட்சா நாமஞ்சாத்தி நீர் இச் சிவஞானபோத நூற்பொருளை விரித்து பிற்காலத்தாருக்கு இனிது விளங்குமாறு ஒரு நூல் செய்வீராக என்று பணித்தருளினார்.

மெய்கண்ட தேவரின் ஆணையைச் சிரமேற்கொண்ட அருணந்தி சிவாசாரியர் சிவஞானபோதம் சித்திப்பதற்கு வழிசெய்யும் சிறந்த வழி நூலான சிவஞான சித்தியாரையும், இருபா இருப..து என்னும் மற்றொரு சைவசித்தாந்த நூலையும் அருளிச் செய்தார்.

பின்னர் சிவஞானபோதத்தையும் தாம் அருளிச் செய்த சித்தாந்த நூல்களையும் மறைஞான சம்பந்தர் முதலான தம் சீடர்களுக்கு உபதேசித்தார். மெய்கண்ட தேவர் மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார், அருணந்தி சிவாசாரியர் ஆகியோர் சந்தான குரவர் எனப்படுவர். அருணந்தி சிவாச்சாரியர் புரட்டாதி மாதத்துப் பூர நட்சத்திரத்திலே சிவபெருமானது திருவடி நிழல் எய்தினார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் போன்றவர்களின் குருபூசைகளை செய்வதுபோல் சைவத் தமிழ் மக்கள் ஏனைய நாயன்மார்களையும், சைவம் வளர்த்த ஆறுமுக நாவலர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, சர்வதேசம் போற்றிய அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்களையும் சைவத்தமிழ் மக்கள் வாழும் இடமெல்லாம் நினைவு கூர்ந்து எமது வருங்கால சந்ததியினர் சைவத் தமிழ் உணர்வோடு வாழ வழிகாட்டவேண்டியது தற்போதைய காலத்தின் தேவையாகும்.

*சத்தியம் ஒன்று. அதனை ஆராதனை செய்யும் வழிகள் பல.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| வை. அபிராமன் | பிரான்ஸ் | 10000. 00 |
| லேகா பஞ்சலிங்கம் | கனடா | 5000. 00 |
| இ. சந்திரவதனா | கோப்பாய் | 1000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுன்னாகம் | 1000. 00 |
| வினோதன் கார்த்திகா | நெல்லியடி | 5000. 00 |
| செ. பாஸ்கரன் | அமெரிக்கா (மலையக மாணவர்களுக்காக) | 10000. 00 |
| S. பரமசாமி | சாவகச்சேரி | 5000. 00 |
| ஓர் அன்பர் | கனடா | 2500. 00 |
| பாலச்சந்திரன் அகிலன் | கனடா | 10000. 00 |
| சொக்கலிங்கம் சிவபாக்கியம் | இணுவில் மேற்கு | 11350. 00 |
| பொ. வியாகேஸ் (பீக்கன் கல்வி நிறுவனம்) | உடுப்பிட்டி | 2000. 00 |
| க. கணேசராசா | நீர்வேலி | 500. 00 |
| க. கிஷாந், க. நீரஜா | நீர்வேலி | 5000. 00 |
| திரு சுப்பிரமணியம் குடும்பம் | சாவகச்சேரி | 10000. 00 |
| கி. அச்சயன் குடும்பம் | கரவெட்டி | 1000. 00 |
| ம. புவிராஜ் | தெல்லிப்பழை | 5000. 00 |
| செ. விஜயகுமார் | பத்தமேனி | 5000. 00 |
| K. கௌதமன் | சுவிஸ் | 500. 00 |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 4மூடை அரிசி |
| தி. தினுஷன், தி. திஜானி | புத்தூர் | 2000. 00 |
| N. குலசேகரம் குடும்பத்தினர் (வருணன்) | அச்சுவேலி | 6000. 00 |
| செந்தூரன் அபிராமி | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| டினோஷ் கஜந்தினி | கனடா (தொண்டைமானாறு) | 5000. 00 |
| T.R. கனகலிங்கம் குடும்பம் | வெள்ளவத்தை | 10000. 00 |
| ஜெ. விஜிதா | ஊரிக்காடு | 5000. 00 |
| ந. ரத்தினேஸ்வரி | கொக்குவில் | 30000. 00 |
| இ. ரவீந்திரகுமார் | கொக்குவில் | 1000. 00 |
| க. பூலோகரட்ணம் J.P | கொக்குவில் | 3000. 00 |
| ஜெ. அரவிந் | கோப்பாய் | 1000. 00 |
| சு. அஸ்வினி | இணுவில் | 1000. 00 |
| திருமதி முரளி | உடுவில் | 2000. 00 |
| திருமதி சிவகுருநாதன் | உடுவில் | 1000. 00 |
| மு. கோகுலநாதன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |

| | | |
|---|---|---|
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 2000. 00 |
| சு. யுகர்னிகா | ஆனைக்கோட்டை | 500. 00 |
| வேணுகானன் விஜிதா | நல்லூர் | 2000. 00 |
| ச. பொன்ராசா | பருத்தித்துறை | 3000. 00 |
| பா. கேதீஸ் | உரும்பராய் | 5000. 00 |
| தி. கோபாலகிருஷ்ணன் | புத்தூர் | 500. 00 |
| சி. சரவணபவான் (முகுந்தன்) | வவுனியா | 1000. 00 |
| சி. கணபதிப்பிள்ளை ஆசிரியர் | கொழும்பு | 5000. 00 |
| சி. சுபேந்திரா | கனடா | 6000. 00 |
| ந. ரங்கநாயகி | மல்லாகம் | 2000. 00 |
| வே. ஸ்ரீதரகுமார் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| க. யோகராஜா | புலோலி | 10000. 00 |
| மு. சண்முகதாசன் | பிரான்ஸ் | 5000. 00 |
| ஜி. கிரிஸ்ஷன் | பிரான்ஸ் | 1000. 00 |
| ஜி. ஜெனக்ஷன் | பிரான்ஸ் | 1000. 00 |
| திரு தவலிங்கம் குடும்பம் | மானிப்பாய் | 1000. 00 |
| திருமதி ராஜலிங்கம், சேனாதிராஜா குடும்பம் | கோப்பாய் | 2000. 00 |
| N. சண்முகநாதன் | இணுவில் | 5000. 00 |
| சோபா அம்பி | அமெரிக்கா | 5000. 00 |
| சு. இலங்கநாயகம் | கைதடி | 1000. 00 |
| ரகுனா மகேந்திரகுமார் | நீர்வேலி | 10000. 00 |
| விஜிந்தன் ரஜிதா | சுன்னாகம் | 5000. 00 |
| வசந்தகுமாரி உதயா | பிரான்ஸ் | 1000. 00 |
| S. ராஜேஸ்வரி | அச்சுவேலி | 2000. 00 |
| சி. சசிகரன் | சண்டிலிப்பாய் மேற்கு | 5000. 00 |
| சி. சுதாகரன் | சண்டிலிப்பாய் மேற்கு | 2000. 00 |
| சு. சிவஞானசுந்தரம் | புளியங்கூடல் | 2மூடை அரிசி |
| ஆ. சுந்தரலிங்கம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| த. நடேசலிங்கம் | கொழும்பு | 1000. 00 |
| ம. பிரானேஸ் | நெல்லியடி | 1000. 00 |
| து. பாலாமணி | கொழும்பு | 1000. 00 |
| க. பிரபாகரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 500. 00 |
| திரு சின்னத்துரை குடும்பம், திரு சிவகுமார் குடும்பம் | குப்பிளான் | 1000. 00 |
| புவனேந்திரன் செல்வராணி | அமெரிக்கா | 5000. 00 |
| திருமதி வைரவப்பிள்ளை மகேஸ்வரி | லண்டன் | 20000. 00 |
| ந. சங்கரசிவா | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| க. கௌதமன் | சுவிஸ் | 5000. 00 |

(தொடரும்...

# இறைவனை நம்புங்கள் இனியது செய்வான்

– திரு பொன். பூலோகசிங்கம் அவர்கள் –

பிறப்பு என்று ஒன்று நிர்ணயிக்கப்படும்போது இறப்பு என்பதும் நிர்ணயிக்கப்படுகின்றது. இது மனித குலத்திற்கு மட்டுமன்றி சகல ஜீவராசிகளுக்கும் பொருந்தும்.

பட்டுச் சிறகடித்துப் பறக்கும் பட்டாம்பூச்சி கூட இந்த மண்ணில் எட்டு நாட்கள் மட்டுமே வாழ்கின்றது. அதன் வாழ்நாளைத் தீர்மானிப்பவன் யார்? மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு மட்டுமே. மூன்று வயதில் தேவாரம் பாடி முதல் மூன்று திருமுறைகளையும் தனக்குரித்தாக்கிய தேவாரப் பதிகங்களின் முன்னோடியாகத் திகழும் திருஞானசம்பந்தருக்கு வாழ்நாள் இருபத்தினாலு (24) வயது வரைதான் என வரையறுத்தான் இறைவன். இதிகாசமும் புராணமும் இப்படி பலருடைய வாழ்நாள் பற்றிய விடயங்களை எடுத்தியம்புகின்றன.

## சமகாலத்தில் கவிஞர்களும் பாடலாசிரியர்களும்.

பாட்டுக்கோட்டை எனப் புகழப்பட்டு புகழுடன் வாழ்த்தப்பட்டவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். அவர் இயற்றிய இசைப் பாடல்களில் சமதர்மக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கும். மிகச்சிறந்த வெகுஜன ஊடகமாக மிளிரும் திரைப்படத்துறையை தன் வசப்படுத்தி திரைப்படப் பாடல்களை இயற்றி அதனூடாக ஏழை மக்களது வாழ்வியலை எடுத்துச் சொன்னவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். சமதர்மக்கவிஞன் என்றாலும் சிவனிடம் அவர் அன்பு பாராட்டினார், அன்று வெளிவந்த "சௌபாக்கியவதி" என்ற திரைப்படத்தில் ரி.எம். சௌந்தரராஜன் குரலில் அவர் இயற்றிய "தில்லை அம்பல நடராஜா செழுமை நாதனே பரமேசா" என்ற திரைப்பாடல் பக்திச் சுவை ததும்ப பாரெங்கும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திற்கு பெரும் புகழ் குவித்தது. இனிய தமிழுக்கு இலகு தமிழுக்கு இசை வடிவம் கொடுத்த அந்த மாபெரும் கவிஞர் இந்த மண்ணில் வாழ்ந்தது இருபத்தொன்பது (29) வயது வரைதான்.

இதேபோல தன் பாட்டுத்திறத்தாலே பாரினைப் பாலித்திட்ட பாரதியாரை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பாட்டுக்கொரு புலவன் பாரதியடா என்று மனந் திறந்து பாராட்டினார். பண்டிதர்களதும் படித்தவர்களதும் மாடி மனைகளிலும் சிறைப் பறவையாக வாழ்ந்த செய்யுள் இலக்கியத்தை பாமர மக்களின் மண் குடிசைகளில் இலகு தமிழாக்கி தென்னங்கீற்றிலும் தென்றற் காற்றிலும் கலக்க விட்ட அந்த மகாகவி இந்த மண்ணில் முப்பத்தொன்பது (39) வயது வரைதான் வாழ்ந்தார். ஒரு வைத்தியராகவும் புரட்சிகர சிந்தனையாளராகவும் விளங்கிய சேகுவேராவும் முப்பத்தொன்பது (39) வயது வரைதான் வாழ்ந்தார். வீரத்துறவி எனப் புகழப்பட்ட சுவாமி விவேகானந்தரும் இம்மண்ணில் முப்பத்தொன்பது வயதுவரை வாழ்ந்து தன் சொற்பொழிவால் உலகையே உலுக்கி மறைந்தார். இந்த மூவரதும் ஆயுட்காலத்தை முப்பத்தொன்பது வரை வலியுறுத்தி மட்டுப்படுத்தியவன் ஆண்டவனேயாகும் அற்ப ஆயுளைக் கொடுத்தாலும் அவர்களுக்கு ஆண்டவன் ஆளுமையை அற்புதமாகக் கொடுத்தான்.

*நல்லவனின் புன்முறுவல் உள்ளத்திலிருந்து வருகிறது.*

## இதயம் நிறைந்த இன்னொரு பாடலாசிரியர்.

இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் முதல் தசாப்த காலத்தில் தமிழ் திரைப்படத் துறைக்குள் நுழைந்தவர் பாடலாசிரியரும் கவிஞருமான நா. முத்துக்குமார் அவர்கள். கடந்த பத்துவருட காலத்தில் ஆயிரம் படங்களுக்கு 1500 பாடல்கள் இயற்றி புகழ் பெற்றவர். அவர் நாற்பத்தியொரு (41) வயதுவரைதான் வாழ்ந்தார். கடந்த வருடம் ஆவணி மாதம் 14ஆம் திகதி (14.08.2016) மஞ்சள் காமாலை நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்தினார். அவரது மறைவு கருத்துச் செறிவுள்ள திரை இசை உலகிற்கு பேரிழப்பாகக் கருதப்படுகின்றது.

## பேராசிரியர் கைலாசபதி

தமிழ் இலக்கியத்திற்கு புதிய பரிமாணங்களை எடுத்து விளங்கியவர் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் இலக்கியத்தை மட்டுமல்ல திருமுறைகளையும் மார்க்சியத்தளத்தில் வைத்து ஆராய்ந்து பக்தி இலக்கிய கால மக்களது வாழ்வியலை அழகாக எடுத்துரைத்துள்ளார். ஈழம் புகழும் புலமையாளராக விளங்கிய பேராசிரியர் கைலாசபதி இம்மண்ணில் நாற்பத்தொன்பது (49) வயதுவரைதான் வாழ்ந்தார்.

## எழுத்தாளர்களின் எண்ணக்கருக்கள்.

தமிழ் நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளரும் கல்கண்டு சஞ்சிகையின் ஆசிரியருமான காலஞ்சென்ற தமிழ்வாணன் அவர்கள் "நூறு ஆண்டுகள் வாழ்வது எப்படி" என்று தலைப்பிட்டு ஒரு நூலை எழுதினார். அந்த நூலைத் தந்த தமிழ்வாணன் ஐம்பது ஆண்டுகள் (50) மட்டும் வாழ்ந்தார். இன்னொரு ஈழத்து எழுத்தாளர் செ. கதிர்காமநாதன் தான் எழுதிய நூல் ஒன்றுக்கு "நான் சாகமாட்டேன்" என்று தலைப்பிட்டார். நூலின் தலைப்பு அமங்கலத்தையே குறித்தது. அந்த நூல் வெளிவந்து ஒரு சில நாட்களில் அவர் இறந்து போனார். இரண்டு எழுத்தாளரது தலைவிதியையும் இறைவனே தீர்மானித்தான். அவனியில் அவனின்றி அணுவும் அசையாது என்பது ஆன்றோர் வாக்கு. இதைத்தான், "மனிதன் முன்மொழிகின்றான் இறைவன் முடித்து வைக்கிறான்" என்கிறார்கள். இதைத்தான் புகழ் பெற்ற கவிஞரும் திரைப்பாடலாசிரியரும் தமிழக ஆஸ்தான கவிஞராகவும் மிளிர்ந்து மடிந்தவருமாகிய கவியரசு கண்ணதாசன் பின்வரும் இரண்டு வரிகளில் சொன்னார்.

"மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதன் என்று"

கருவறை தொடங்கி கல்லறைவரை கடவுள் கண்காணிக்கின்றான். எல்லாவற்றையும் தீர்மானிக்கும் நடுநாயகமாக நடராசன் நிற்கின்றான். இந்தப்பிரபஞ்சம் அவனைச் சுற்றியே சுழல்கின்றது. அவன் அருட்கடாட்சம் கிடைத்தால் அவனியில் அனைத்தும் எம்மை நாடிவரும். இறைவனை நம்புவோம்.

*சிந்தனையில்லாத மனிதன் பிணத்திற்குச் சமமாவான்.*

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

திருமுறைகளைப் பாடிப் பிரார்த்தனை செய்வதற்கு இந்த இடம் இந்த நேரம் என்று தேவையில்லை. அப்பர் பெருமான் பாடியது போன்று தமிழோடு இசைபாடல் மறந்தறியா மனங்கொண்டோர் எவ்வேளையிலும் பாடிப் பரவசமடையலாம். ஆனால் எல்லோரும் அப் படியல்லவே. மனம் தறிகெட்டோடும் தன்மை கொண்டதாகையால் சூழலையும் மனதையும் பிரார்த்தனைக்கேற்றதாக்குவது நல்லதாகும்.

கோவிலிலோ பிரார்த்தனை மண்ட பத்திலோ இருக்கும்போது தெய்வீகம் பொருந் திய சூழ்நிலை இயல்பாக அமைந்துவிடும். இல்லாதவிடத்து வீட்டின் பூஜை அறை யையோ அமைதியான ஓரிடத்தையோ இதற் காகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். அவ் இடத்தில் அமர்ந்து மனதை ஒருநிலைப் படுத்தி இறைவனை பக்தியுடன் நினைந்து பாடத்தொடங்க வேண்டும். "திருச்சிற்றம் பலம்" என்று கூறி பாட ஆரம்பிப்பது மரபு. அப்படிக் கூறும்போது சிற்றம்பலத்தில் நின் றாடும் எம்பெருமான் அகக்கண்முன் தோன்று வார். தன் நடனத்தினாலேயே அகிலத்தை இயங்க வைப்பவனுடன் மனம் ஐக்கியப்பட்டு ஒரு நிலைப்படும். அதன்பின் தேவாரம் பாட வேண்டும்.

பன்னிரு திருமுறைகள் என்று ஒரு சேரக் கூறப்பட்டாலும் ஆளுடையபிள்ளையும் அப்பரும் சுந்தரரும் பாடியருளிய முதல் ஏழு திருமுறைகளிலும் உள்ளடங்கிய பாடல்கள் தேவாரங்கள் எனப் போற்றப்படு கின்றன. "தேவ ஆரம்" என்றால் "இறை வனுக்கான மாலை" எனப் பொருள்படுகிறது. பொன்னாலும் மணியாலும் ஈசனுக்கு ஆரம் செய்து சாத்துவதுபோல் சொல்லால் ஆக்கப் பட்ட ஆரங்கள் இவை. முதலாம் திருமுறை சம்பந்தப்பெருமான் பாடியருளிய பதிகங் களைக் கொண்டதென முன்னைய கட்டுரை யில் பார்த்தோம். பத்துத் தேவாரங்கள் கொண்டது பதிகம். சில பதிகங்களில் ஓரிரு தேவாரங்கள் கூடவோ குறையவோ இருப் பதும் உண்டு. முதலாந் திருமுறையில் 1469 தேவாரங்கள் அடங்கியுள்ளன. அவை 136 பதிகங்களாக உள்ளன.

திருஞானசம்பந்தரின் வரலாறு அனை வரும் அறிந்ததே. மூன்றுவயதுப் பாலகனாக அவர் இருந்தவேளை தன் தந்தையார் சிவ பாதவிருதயர் நீராடச் சென்றபோது இவரும் உடன் சென்றார். இவரைத் தீர்த்தக்கரையில் விட்டுவிட்டு தந்தையார் நீருள் மூழ்கி நீராடத் தொடங்கவே தந்தையைக் காணாத பால கன் "அம்மையே அப்பா" என அழுதார். இவரது அழுகையைக் கேட்ட சிவபெரு மானும் உமையம்மையும் இடபாரூடர்களாக அவர்முன் தோன்றினர். அம்மை அளித்த ஞானப்பாலை உண்ட ஆளுடைய பிள்ளை அழுகையைவிட்டு பாலுண்ட வாயுடன் விளையாடிக் கொண்டிருந்தார். நீராடியபின் மீண்டுவந்த தந்தை "யார் தந்த பாலை அருந்தினாய்?" என்று கோபிக்க அம்மையின் ஞானப்பாலருந்தி ஞானம் பெற்றிருந்த சம்பந்தப்பெருமான் பின்வருமாறு பாடினார்.

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

இத் தேவாரத்தின் பண் நட்டபாடை. "காதிலே தோடு அணிந்து இடப வாகனத்திலே ஏறியவராய், தூய வெண்மையான சந்திரனை முடியிலே சூடி, சுடலையின் நீறை மேனியிலே பூசி, எனது மனதைக் களவாடிய கள்வன். இதழ்கள் கொண்ட தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் முன்பு பணிந்து வழிபட அருள் செய்ததான பெருமையை உடைய பிரமாபுரத்தில் குடியிருக்கும் பெருமான் இவனல்லவா" என்ற பொருள் கொண்டது இத் தேவாரம்.

எமது பிரார்த்தனையைச் செவிமடுத்து எம்மை நாடிவரும் ஈசனை நினைந்துருக ஏற்ற பாடல் இது என்பது தெளிவாகிறதல்லவா? பெருமானின் அடியையோ முடியையோ காணாமல் முதலிலே தனது அழுகையைச் செவிமடுத்த அவனது செவியைக் காணும் சம்பந்தப் பெருமான் அதில் தோடணிந்திருப்பதாகக் கூறுகிறார்.

வலப்பாகம் சிவபிரானின் உருவும் இடப்பாகம் உமையம்மையின் தோற்றமும் கொண்ட அர்த்தநாரீஸ்வர வடிவில் இறைவனை வழிபடும் வழக்கம் கொண்டவர்கள் நாங்கள். பெண்ணுக்குச் சமபாகம் கொடுத்ததாக நாம் மேலேழுந்தவாரியாகக் காரணம் சொன்னாலும் ஆழ்ந்த தத்துவப்பொருள் இவ்வுருவுள் அடங்கியுள்ளது. இதனை விளக்க முற்பட்டால் ஒரு நூலாக விரியும். சிவப்பரம் பொருளுடன் இவ்வுலக இயக்கத்திற்கேதுவான ஆதிசக்தி கலந்திருப்பதை இவ்வடிவம் குறிக்கிறது.

தனக்கு ஞானப்பாலூட்ட வந்த பிரம்மாபுரத்தானில் அம்மையையும் ஆளுடைய பிள்ளை கண்டார். அதனாலேதான் அவர் கண்ட காதிலே தோடு தென்பட்டது. அது மட்டுமல்ல அவர் அழத்தொடங்கிய கணத்திலேயே அப்பெம்மான் காட்சியருளியது எவ்வாறு? என்று ஆச்சரியத்துடன் பார்த்தால் அவர் விரைந்து வர இயன்றதற்குக் காரணம் இடப வாகனத்தில் ஏறிவந்ததுதான் என்பது விளங்கியது. எனவே, தனக்குப் பாலூட்டியவரை தன் தந்தைக்கு அடையாளம் காட்ட முற்பட்டவேளை இவையிரண்டையும் முதலிலே கூறி நின்றார்.

நாம் வழிபடும்போதும் எம் குரல் கேட்டதும் விடையேறி வந்து சம்பந்தப்பிள்ளைக்குப் பாலூட்டிப் பசி தீர்த்ததுடன் ஞானமும் நல்கியதுபோல் எம் தேவையறிந்து எம்பெருமான் அருள்புரிவான் என்ற முழுமையான நம்பிக்கையுடன் இதனை ஓதிப் பணியலாம். பிரம்மாபுரத்திலுறையும் ஈசனை பிரமா வழிபட்டு நிற்க படைத்தல் தொழிலை அவருக்கு இறைவன் நல்கினார் என்பது ஐதீகம்.

திருஞானசம்பந்தப் பெருமான் திருமருகலிலே தங்கியிருப்பதை அறிந்தார் சிறுத்தொண்ட நாயனார். திருச்செங்காட்டங்குடியைச் சேர்ந்த இவர் அங்கிருந்து சம்பந்தமூர்த்தி நாயனாரைத் தரிசிக்கவென்று திருமருகலுக்குச் சென்றார். அங்கு அவரைச் சந்தித்து தமது பதிக்கு வந்து திருச்செங்காட்டங்குடியில் எழுந்தருளியுள்ள ஈசனைத் தரிசிக்குமாறு சிறுத்தொண்டர் வேண்டி நின்றார்.

ஆளுடைய பிள்ளை சிவபிரானின் திருவுளக் குறிப்பை அறிந்து அதன்படி செயற்பட விரும்பி, திருமருகலானின் திருக்கோவிலினுள்ளே சென்று தனக்கு வழிகாட்டும் வண்ணம் இறைஞ்சி நிற்க, திருச்செங்காட்டங்குடி கணபதீஸ்வரத்தின் அருட்காட்சி

*நீ இழந்தது முக்கியமல்ல, எஞ்சியிருப்பதுதான் முக்கியம்.*

அங்கு அவருக்குக் கிட்டியது. தனக்கு அத்தரிசனம் கிடைக்கப்பெற்றுவிட்டதால் தான் திருச்செங்காட்டங்குடிக்கு வரவில்லையென்றும் வேறு தலங்களுக்குச் செல்லப்போவதாகவும் சம்பந்தப்பிள்ளை சிறுத்தொண்டரிடம் தெரிவித்தார். கணபதீஸ்வரரின் காட்சி கிட்டியதும் அவர் பாடிய பதிகமே

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வ மல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

என்னும் தேவாரத்துடன் ஆரம்பிப்பதாகும். இதன் பண் நட்டபாடை.

"வேதத்தையும் அதன் அங்கங்களாகிய நிருத்தம், சிட்சை, கற்பம், சந்தஸ், வியாகரணம், ஜோதிஷம் ஆகியவற்றையும் ஓதுகின்ற நாவையுடைய மறையவர் தினமும் திருவடிகளைப் போற்ற, வானமண்டலத்து நிலவொளி தவழும் மாடங்களையுடைய வீதி களுள்ள திருமருகலில் உறையும் அழகனே, செங்கயல் மீன்கள் கொண்ட நீர்வளம் நிறைந்ததான புகழ்பெற்ற செங்காட்டங்குடியிலே தீயைக் கையில் ஏந்தி இரவிலே நடம் ஆடுவதற்கு இடமாக கணபதீச்சரத்தை ஏன் விரும்பினாய்?" என்று இத்தேவாரத்தில் அவர் கேட்கின்றார்.

சிவபிரானின் திருக்கோலத்தைப் பாடல்மூலம் கண்முன் கொண்டுவருவதைவிட அவன் வீற்றிருக்கும் திருவூரையும் எமக்குப் புலனாகும் வகையில் பாடப்பட்ட தேவாரங்களும் பல உள. அத்தகைய ஒன்றே இதுவாகும். திருமருகலின் அழகையும் திருச்செங்காட்டங் குடியின் வளத்தையும் கூறி இறைவன் கோவில் கொண்ட ஊரும், சீரும் சிறப்பும் நிறைந்த தாகிவிடும் என்பதை நமக்கு உணர்த்துகின்றார் சம்பந்தப் பெருமான். ஐயன் குடிகொண்ட ஊர்மட்டுமல்ல இல்லமும் உள்ளமுங்கூட சீரும் திருவும் பொலிந்து விளங்குமென்பதும் இதன் உட்கிடையாகும்.

---

## ஞானச்சுடரே வாழ்க! வளர்க!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடாகிய ஞானச்சுடர் மாதாந்தம் பலரது பல்வகையான ஆக்கங்களை பிரசுரிக்கின்ற மலர் மட்டுமல்லாது ஒரு இந்து இந்துவாக வாழ வழிகாட்டும் சிறந்த நூலாக விளங்குகின்றது. இலங்கையில் மட்டுமல்லாது உலக நாடுகள் அனைத்திலும் வாழும் இந்துக்களின் இல்லங்களில் தவழும் புனித மலராயும் திகழ்வது பாராட்டுக்குரியது. ஆச்சிரம சுவாமிகளினது சேவை பசிப்பிணி நீக்குவது மட்டுமல்லாது இலங்கையின் பாதிக்கப்பட்ட பல இடங்களிலும் உள்ள அத்தியாவசிய தேவைகளை இனங்கண்டு சேவையாற்றுவது சந்நிதி வேலனின் பெருங்கருணையே ஆகும். அடியேனும் நீண்டநாள் வாசகன் என்ற வகையில் இந்த "ஞானச்சுடர்" ஆன்மீக சஞ்சிகையானது இருபதாவது வருடத்தில் வீறுநடை போட்டு (232) இருநூற்று முப்பத்திரண்டு இதழ்களாக விரிந்து மணம் பரப்பி அடியார்கள் மனங்களில் ஞானச்சுடரை ஏற்றி ஒளிர்வது பாராட்டுதலுக்கும் ஆன்மீக மகிழ்விற்கும் உரியதே.

தி. ரவீந்திரநாதன்
[அதிபர்]
கலைமணிவீதி, கட்டைப்பிராய்
யாழ்ப்பாணம்.

*தக்க சமயத்தில் உதவும் கைகளே புனிதமானவை.*

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஓர் அனுபவம்

– திரு சிவ. உமாகரன் அவர்கள் –

தொண்டைமானாற்றங்கரையிலே வேலவன் குடிகொண்டு தன்னிடம் வருகின்ற அடியவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கு இன்ப இனிய வாழ்வைக் கொடுக்கும் இடமாக செல்வச்சந்நிதி ஆலயம் காணப்படுகின்றது. அந்த வகையிலே சந்நிதியான் ஆலய வாசலிலிருந்து கிழக்குப் பக்கமாக வீதிக்குச் செல்லும்போது சந்நிதியான் ஆச்சிரமத்தை ஒருமுறை பார்த்துத்தான் செல்ல வேண்டும். உண்மையில் நான் எனது அனுபவத்தினூடாக ஆச்சிரமத்தையும் அவற்றின் பணிகளையும் குறிப்பிடுவதற்கு இந்த இதழில் வாய்ப்புக்கிடைத்தமை பற்றி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். வாசலிலே அரசமர நிழலோடு உள்ள பூவரசு விருட்சத்தைக் கொண்ட குளிர்மையான இடம் சந்நிதியான் ஆச்சிரமம்.

1997ஆம் ஆண்டிலிருந்து எனக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தைப் பற்றி ஓரளவுக்கு அறிந்திருக்கின்றேன். நேரிலும் பார்த்திருக்கின்றேன். அந்தக் காலத்தில் தென்னம் ஓலையால் வேயப்பட்டு மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு சிறிய கொட்டில்தான் இப்போது மிகப் பிரமாண்டமாக காட்சியளிப்பது எனக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. அதாவது முருகனின் பூசை அறைக்கு முன்னால் ஒரு மேசை போட்டு அதிலேதான் மோகனதாஸ் சுவாமிகள் அமர்ந்திருப்பார். நான் நினைக்கின்றேன் யுத்த காலத்தில்கூட முருகனை விட்டு வெளியே சென்றிருக்க முருகன் அவருக்கு அனுமதி கொடுத்திருக்க மாட்டார். பின்னர் படிப்படியாக வளர்ந்துவந்த ஆச்சிரமம் 1998ஆம் ஆண்டு மாதாந்த சஞ்சிகையாக ஞானச்சுடர் எனும் நூலை வெளியிட்டது. அதாவது அந்த மலரானது முன்பக்கத்தில் வேலுடன் முருகன் நிற்பது போன்ற முன் அட்டை கொண்டு அடியவர்களின் ஆக்கங்கள் படைப்புகள் தாங்கி வருவது எல்லோர்க்கும் அறிவுப் பசியை நீக்குகின்றது.

மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில் ஆச்சிரமப் பணிகள் அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகின்ற அன்னதானமானது இப்போது தினமும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்த விடயமாகும். சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் கீழ் நடைபெறுகின்ற நிகழ்வுகள் அனைத்தும் கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தளிக்கின்றன.

அதாவது ஆச்சிரமத்தைப் பற்றி கட்டுரை வரைய வேண்டும், ஆச்சிரமத்தின் பணிகளை எடுத்துக்காட்ட வேண்டும் என்ற விருப்பம் நிறைய உள்ளது. அன்னப்பணியோடு, தர்மப் பணியோடும் நின்றுவிடாது. இலவச மருத்துவ முகாம், மற்றும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கு உதவுதல், வயோதிபர்களுக்கு உதவுதல் இன்னும் நிறைய இருக்கின்றது. ஒருமுறை சுவாமிகள் பேசும்போது சொன்னார் "இங்கு கணக்கு வழக்கு என்ற ஒன்று இல்லை" இங்கு பிரதி பெறுபவர்களது பெயர் மட்டும்தான் கொப்பியில் இருக்கின்றது" என்று குறிப்பிட்டார். அப்போது தான் எல்லாம் முருகனின் செயற்பாடு என்பதை உணர்ந்து கொண்டேன். இப்படியாக ஆச்சிரமத்தினுடைய பணிகளை நான் சுருக்கமாக நிறைவு செய்கின்றேன். ஆனால் தொடர்ந்து கட்டுரை எழுதுவதற்கு முருகன் கருணை காட்ட வேண்டும் என வணங்கி நிறைவு செய்கின்றேன்.

*ஒருவருடைய பேச்சிலிருந்து அவரது உள்ளப்பண்பை அறியலாம்.*

(கட்டுரைத்தொடர் - 29


# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## ஈழத்துச் சித்தர்கள்

### யோகர் சுவாமிகள்: பாகம்- I

ஈழமணித் திருநாட்டில் ஞான பண்டிதனாகிய முருகப்பெருமான் வீற்றிருந்து அருளாட்சி புரியும் இடங்களில் மாவிட்டபுரமும் ஒன்றாகும். மாவிட்டபுரம், காங்கேசன்துறை, கீரிமலை



ஆகிய மூன்று கிராமங்களும் கோயிற்கடவை என்ற பெயரால் அழைக்கப்பட்டது. நகுல முனிவரின் பிதிர்ச்சாபம் நீங்கிய இடமாகிய கீரிமலையில் நகுலேஸ்வரம் என்ற பெருமை மிக்க சிவஸ்தலம் உள்ளது. இங்குள்ள புனித தீர்த்தம் கண்டகி தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. சோழ இளவரசியாகிய மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் மாறப்பெற்ற திருவருள் செயலை நினைவு கூர்ந்து அமைக்கப்பெற்ற ஆலயமே மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் ஆகும். இங்கு பிரதிஷ்டை செய்வதற்காக வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானின் திருஉருவச் சிலைகள் பாரத நாட்டில் இருந்து கொண்டுவந்து சேர்க்கப்பட்ட இடம் ஆகையால் காங்கேசன்துறை என்ற பெயர் ஏற்பட்டது.

மாவிட்டபுரத்திலே வாழ்ந்த அம்பலவாணர் சின்னாச்சிப் பிள்ளை செய்த தவத்தின் பயனாக வைகாசி மாத அவிட்ட நட்சத்திரத்தில் (29.05.1872) யோகர் சுவாமிகள் தோன்றினார். சதாசிவன் என்ற ஆதிநாமமே இவரது இயற் பெயரும் ஆயிற்று. இவர் சிறுவயதிலேயே அன்னையை இழந்து விட்டார். தந்தையார் மலையகத்தில் உள்ள மஸ்கெலியாவில் வியாபாரம் செய்து வந்தமையால் அவரது அரவணைப்பும் இவருக்கு கிடைக்கவில்லை. அம்பலவாணரின் சகோதரர் சின்னையா என்பவர் கொழும்புத்துறையைச் சேர்ந்த கத்தோலிக்க சமயப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து தமது பெயரை யோசேப்பு என மாற்றிக் கொண்டார். யோகநாதனின் கல்வி விஷயத்தை சிறிய தந்தையாராகிய சின்னையா அவர்களே கவனித்து வந்தார். ஆங்கிலக் கல்வியை யோகநாதன் கற்க வேண்டும் என்று விரும்பிய சிறிய தந்தையார் இவரைப் புனித சம்பத்தரசியார் கல்லூரியில் கற்பதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்தார். கல்லூரிப் பதிவேட்டில் "ஜோன்" என்ற பெயர் யோகநாதனுக்கு எழுதப்பட்டது. யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் இவருடைய தந்தை வழி மாமியாராகிய முத்துப்பிள்ளை வாழ்ந்து வந்தார். சிறிய வயதில் யோகநாதனுக்கு சைவ சமயத்தில் ஈடுபாட்டை ஏற்படுத்திய பெருமை இவருடைய மாமியாரையே சாரும். பாடசாலையில் கிறிஸ்தவ

*ஆசை உள்ள இடத்தில் அகச்சாந்தி இல்லை.*

சமயத்தையும் மாமியார் வீட்டில் சைவ சமயத்தையும் படித்து வந்தார்.

கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்ட யோகநாதனைத் தந்தையார் மஸ்கெலியாவிற்கு அழைத்துச் சென்றார். யோகநாதன் வியாபாரத் தொழிலைக் கைக்கொள்ள வேண்டும் என்பது தந்தையாரின் விருப்பமாக இருந்தது. ஆனால் யோகருக்கோ இலாப நட்டக் கணக்குப் பார்க்கும் வியாபாரத்தில் ஈடுபாடு ஏற்படவில்லை. திருவருளானது அவருக்குரிய உத்தியோகத்தைக் கிளிநொச்சியில் ஏற்பாடு செய்திருந்தது. இவர் கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தில் பண்டகசாலைப் பொறுப்பாளராக இணைந்து கொண்டார். ஓய்வு நேரத்தில் பன்னிரு திருமுறைகள், நான்மறை, புராணங்கள் ஆகிய நூல்கள் பலவற்றையும் கற்றார். கிளிநொச்சி அழகிய ஆரணியச் சூழலில் அமைந்த அமைதியான ஊர். பெரியவர் பலர் சமாதி கொள்ளும் தியானபூமி "மயிலாடக் குயில் கூவும்" பொழில்களின் மத்தியில் அமர்ந்து தியானம் பயின்றார். அவர்தம் அகச்சோதி மலரத் தொடங்கியது. யோகருடைய உள்ளத்திலே தோன்றிய அகச்சோதி புறத்திலும் பிரகாசித்தது.

அர்த்தசாமப் பொழுதிலே பண்டு திருவடி மறவாப் பான்மையரான யோகநாதன் "அம்மே அப்பா" என்று புலம்பலானார். அவ்வேளையில் அவரோடு உறங்கிய உறவினர் திடுக்கிட்டெழுந்து விசாரித்தால் நான் என் வேலையைப் பார்க்கிறேன். நீங்கள் நித்திரை செய்யுங்கள் என்று கூறுவார். இவரைப் பணி கொள்ளும் பதவியில் இருந்த பிறெளனி என்னும் ஆங்கிலேயர் இவரிடம் காணப்பட்ட தெய்வீகத்தை உணர்ந்து "நீர் ஒரு கடவுள் மனிதர்" என்று கண்ணியப்படுத்தினார்.

யோகநாதனுக்கு வயது முப்பத்திரண்டாக இருக்கும்பொழுது தந்தையார் இறந்துவிட்டார். எட்டு வயதில் தாயை இழந்தவர் வாலிப வயதில் தந்தையை இழந்தார். ஞான குரு ஒருவர் தனக்கு கிடைக்க வேண்டுமெனத் தேடித் திரிந்த இவர் நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளைச் சந்தித்தார். செல்லப்பா சுவாமிகளைப் பலரும் பைத்தியக்காரன் என்றே அழைத்தனர். உலகியல் மாயையில் மூழ்கியிருந்த பலருக்கு இவர் விசர்ச் செல்லப்பாவாகவே காணப்பட்டார்.

பைத்தியக்காரன் எனப் பலரும் கருதிய செல்லப்பா சுவாமிகளைச் சிலர் பேறிவாளரெனப் போற்றினர். அவர்களில் சிலர் கொழும்புத்துறைக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். விடுமுறையொன்றில் வீடு வந்திருந்த யோகர் அவர்கள் சிலருடன் சேர்ந்து செல்லப்பரைத் தரிசிக்க வந்தார். யோகநாதனைக் கண்ட மாத்திரத்தில் செல்லப்ப தேசிகர் "ஆரடா நீ" என்று அவரைப் பார்த்து அதட்டினார். "என்று நீ அன்று நான் உன் அடிமை" என்ற உள்ளுணர்வினாலோ என்னவோ யோகர் கூசாது நின்றார். பின்னர் வாத்சல்யமான சிரிப்புடன் "நல்லதப்பா வா உன்னைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று அன்போடு வரவேற்றார் தேசிகர். யோகர் செல்லப்பரின் அருள் வலையில் அகப்பட்டுக் கொண்டார். கிளிநொச்சியிலிருந்து ஊருக்கு வரும்பொழுது நல்லூர்த் தேரடிக்கு வந்து செல்லப்பரைத் தரிசிப்பதை யோகர் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சிவபெருமானே செல்லப்ப மூர்த்தமாய் நல்லூர்த் தேர்முட்டிப் படியிலிருந்து அளித்த அருளாடலை எல்லாம் யோகர் சுவாமிகள் நன்கு அனுபவித்துள்ளார். சற்குருவாய் அமைந்த செல்லப்ப தேசிகர் ஆரடா நீ? தேரடா உள்? தீரடா பற்று? பாரடா வெளியில்? என்று வாசக தீக்கை அளித்து யோகர் சுவாமிகளை ஆட்கொண்டார். செல்லப்பா சுவாமிகளின் அருட்பார்வை இவரைக்

*காரியத்தில் உறுதியாக இருப்பதுதான் வெற்றியின் ரகசியம்.*

காந்தமெனக் கவர்ந்தது. குருநாதனைத் தரிசித்த அனுபவத்தை அவரே பின்வருமாறு கூறுகின்றார்.

"கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புத் தொண்டர்
வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடா நீ என்றான் அவன்"

"தீரடா பற்று" என்ற குருவாக்கின் ஆற்றலை யோகர் உணர்ந்து கொண்டார். உத்தியோகம் உறவுமுறை எல்லாவற்றையும் உதறி எறிந்து விட்டுத் தேரடியே தஞ்சமென வந்து சேர்ந்தார். ஊரவர்கள் பெரிய விசரருடன் இன்னொரு இளம் விசரனும் இணைந்து கொண்டான் என நினைத்தார்கள். மெய்ப்பொருளே குருவாகவும், சீடனாகவும் இரு வேடந்தாங்கி நல்லூரிலே ஞான நாடகம் புரிந்தனர் என்பதை யார் அறிய வல்லார்?

ஆரடா நீ என்று அதட்டிய தனது குருநாதன் தேரடா உள்? என்றும் தீரடா பற்று என்றும் கூறியதன் உட்பொருளை உணர்ந்து கொண்ட யோகர் தனது நற்சிந்தனைப் பாடலில் இவற்றைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

1) "தன்னையறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப் போலாதரிக்கு மாறுமுகன்- சந்நிதியில்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான் சிரித்து"

2) "வண்டு பண் செய்யும் வளம் பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் கொண்டு வரும்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடா பற்றென்றான் சிரித்து"

அனுபூதிச் செல்வராய்ப் பரிமளித்த சுவாமிகளை செல்லப்ப தேசிகர் "எங்கேயும் வேரை விராயைப் பார் என ஏவினார். சுவாமிகள் சென்று கொழும்புத்துறை ஊரின் சந்தியொன்றில் நின்ற இலுப்பை மரவேரில் இருந்தார். தேரடியில் தேசிகர் விசராய் வீற்றிருந்தது போலவே இவரும் இலுப்பை வேரில் இருந்தார். இலுப்பை மரத்தின் கீழேதான் இவருடைய அருந்தவம் நடைபெற்றது. இந்த இலுப்பை மரத்திற்கு அருகில் அரியாலை நன்னியர் என்பவர் ஒரு கடை கட்டி வியாபாரம் செய்து வந்தார். நன்னியருக்கு சுவாமிமாரைக் கண்டால் பிடிக்காது. இவர் ஒருநாள் செல்லப்பா சுவாமிகளை நிந்தித்ததோடு கடைக்குள் அவரைக் கட்டியும் வைத்தார். அயலவர்கள் அடுத்த நாளே நன்னியரைக் கடையை விட்டுத் துரத்திவிட்டார்கள். இந்தக் கடை வெறுமனே கிடந்தபடியால் யோகர் சுவாமிகள் தமது குருநாதனைக் கட்டி வைத்த அதே கடைக்குள் நித்திரை செய்வாராம். விடியுமுன் எழுந்து நல்லூர்ப் பக்கமாகச் சென்று விடுவாராம்.

கொழும்புத்துறை வளவில் இருந்த கடையைத் திருநாவுக்கரசு என்பவர் திருத்தி அமைத்துக் கொடுத்து சுவாமிகளை அங்கு தங்குமாறு வேண்டினார். இவர்களுடைய அன்பிற்குக் கட்டுப்பட்ட சுவாமிகள் பூதவுடலை விட்டு உயிர்பிரியும் வரை அக்குடிசையிலே

வாழ்ந்து வந்தார். சுவாமிகளை நோக்கி நாள் தோறும் கூட்டம் கூடத் தொடங்கியது. செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் பெருங்கூட்டம் கூடும். திருமுறைகள் பாராயணம் நடைபெறும். ஆன்மீகத் தாகம் கொண்டவர்களும் வருவார்கள். தங்கள் துன்ப துயரங்களைச் சுவாமிகளிடம் கூறித் தீர்வுகாண விரும்பும் அடியவர்களும் வருவார்கள். சுவாமிகளைச் சோதித்துப் பார்க்கவும் சிலர் வருவார்கள்.

சுவாமிகள் தம்மை நாடி வந்தவர்களுடைய உள்ளப் பாங்கை அறிந்து அவர்களுக்கேற்ற வகையில் புத்திமதிகள் கூறுவார்கள். சிலரை ஏசியும் துரத்துவார்கள். அதைப் பொருட்படுத்தாமல் மேலும் தம்மை நாடி வந்தவர்களை அன்புடன் அணைத்து அருளுரை வழங்குவார்கள். எல்லோரும் ஒரு குலம்; எல்லோரும் ஒரு இனம் என்பது சுவாமிகள் தம்மை நாடி வருபவர்களுக்கு அடிக்கடி கூறும் உபதேசமாகும். "எனக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்; எல்லாரும் சமம்" என்று கூறுவார்கள். கர்மவினையால் எங்களுக்கு இப்பிறவி வந்தது; நாம் ஒன்றும் அறியோம்; நாம் ஏன் இங்கு பிறந்தோம்? இப்பிறவியால் ஒரு பொல்லாப்பும் இல்லை, நாங்கள் இப்பிறப்பில் ஆத்ம லாபத்தை நன்றாய்த் தேடிக் கொள்ளலாம் என்று உபதேசம் செய்வார்கள்.

சுவாமிகள் தன்னை ஒரு சிவதொண்டன் என்றே கூறிக்கொள்வார்கள். சுவாமிகள் முன்பாக ஒரு சில நிமிடங்கள் இருந்தாலே மனதில் அமைதி ஏற்படுவதை அடியார்கள் அனைவரும் உணர்ந்துகொண்டார்கள். சுவாமிகளைச் சூழ எந்தநேரமும் ஒரு ஆத்மீக அலை வீசிக்கொண்டே இருக்கும். அந்த ஆத்மீக அலைக்குள் இருந்து ஆனந்தம் பெறத் தம்மைத் தகுதியாக்கிக் கொண்டவர்கள் நாட்கணக்காக உணவையும், நேரத்தையும், தாகத்தையும் மறந்து தியானத்தில் ஈடுபட்டிருப்பர். அப்படிப்பட்ட மனோ பக்குவம் அற்றவர்களால் ஐந்து நிமிஷ நேரந்தானும் அங்கு இருக்க முடிவதில்லை. அத்தகையோரின் பரபரப்பை உணர்ந்த சுவாமிகள் "வந்து வெகுநேரமாகிவிட்டது. ஓடிப்போய் உங்கள் கடமைகளைக் கவனியுங்கள் என்று கூறி அவர்களைப் போகச் செய்து விடுவார்கள். மனிதன் ஓடிக்கொண்டிருக்கிறான். எப்போது இவனது ஓட்டம் ஓயுமோ என்று கூறுவார்கள்.

செல்லப்பா சுவாமிகள் கந்தைத் துணி அணிந்து பித்தனைப்போலத் திரிந்தார். ஆனால் யோகர் சுவாமிகள் தூய வெள்ளை வேட்டி உடுத்து தோளில் உத்தரியம் இட்டு, கமுக்கட்டில் குடையிருக்கத் தலை மயிரை நன்றாகச் சீவி முடித்துப் பாடறிந்தொழுகும் பண்பாளராய் யாழ்ப்பாணத்துச் சந்தி தெருக்கள், சந்தை, கடைகள் எல்லாம் திரிந்தார். பவப்பிணிபோக்கும் மருத்துவரான யோகர் சுவாமிகள் கஸ்தூரியாரின் மருந்து மணம் கமழும் இல்லத்திலும், அன்பர்கள் கூடும் சுண்ணாகம் செல்லாச்சி அம்மையார் இல்லத்திலும் சேர் பொன். இராமநாதன் நிறுவிய கல்விச் சாலைகளாகிய திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி, (இன்றைய பல்கலைக்கழகம்) மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆகிய இடங்களுக்கும் சென்று சிறுபொழுது தங்கிச் செல்வார். கொழும்பு, நாவலப்பிட்டி, தியத்தலாவை, அப்புத்தளை ஆகிய பகுதிகளில் தொழில் புரியும் தமது அன்பர்களைத் தேடிச் செல்வார். சுவாமிகளுடன் நாடெங்கும் உண்மை நாட்டங்கொண்ட பலர் இணைந்து கொண்டனர்.

சுவாமிகளுடைய உபதேசங்களை எல்லோருக்கும் பரப்பவேண்டும் என்று அடியார் கூட்டம் விரும்பியது. சுவாமிகளிடம் மாத வெளியீடு ஒன்று வெளியிடுவது பற்றி அடியார்கள் விண்ணப்பித்தார்கள். சுவாமிகளும்

அதற்கிசைந்து நாம் எல்லோரும் சிவதொண்டர்கள்; நாம் செய்வது சிவதொண்டு. ஆகவே எமது வெளியீடும் சிவதொண்டன் ஆக இருக்கட்டும் என்றார்கள். 1935ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதலாவது இதழாகிய சிவதொண்டன் வெளிவந்தது. சிவதொண்டனுக்கு நிரந்தரமான நிலையம் ஒன்று காங்கேசந்துறை வீதியில் 04.11.1953இல் உருவானது. அந்த நிலையத்தின் மேல்மாடியில் இருக்கும் தியான மண்டபத்தில் சுவாமிகளின் ஆத்மீக அலையை இன்றும் அனுபவிக்கலாம்.

யோகர் சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளையே தமது தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லாமாகக் கொண்டு அவருக்கு மீளா அடிமையானார். குரு தனது சீடரைப் பலவித சோதனைகளுக்கு உள்ளாக்கிப் பதப்படுத்தினார். "விடுவாய் விடுவாய் வினை யாவையுமே" என்ற கந்தரநுபூதி வாக்கிற்கு அமைய யோகர் சுவாமிகளின் கன்ம வினைகள் அனைத்தும் பொசுங்கியது. ஞானவொளி வீச ஆரம்பித்ததும் சிவானந்தம் மேலிட்டது. சிவயோகியாயும், சிவஞானியாயும், சீவன் முத்தராயும் விளங்கிய சிவயோக சுவாமிகள் நடமாடும் கோயிலாக இருந்து நமது மக்களிடம் ஞான ஒளியைப் பரப்பினார்.

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்பது சிவதொண்டனின் மகுட வாசகமாகப் பொறிக்கப்பட்டது. மாதந்தோறும் சிவதொண்டன் பத்திரிகை தவறாமல் வெளியிடப்பட்டது. சிவதொண்டன் இதழில் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களும் தொடர்ந்து வெளிவருகின்றன. ஆண்டு மலர்களிலே சுவாமிகள் அருளிய வாழ்த்துப் பாக்களும் சிவதொண்டனிலே இடம்பெற்றன. சிவதொண்டன் நிலையம் மெய்யடியார்களுக்கு ஆன்ம ஞானத்தை வழங்கும் தவச் சாலையாக ஞானப் பண்ணையாக இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. தன்னையறியத் தவம் இயற்றுவோர் அனைவரும் மாதந்தோறும் வரும் முதல்வாரத்தில் சிவதொண்டன் நிலையத்தில் கூடி அந்தர்யாக நிகழ்வினை நடாத்துவார்கள். தன்னிற் படிந்த குப்பைகளைக் கொளுத்தி எரித்து அகத்திலே சிவத்தைப் பிரகாசிக்கச் செய்யும் நிகழ்வாகவே இந்த அந்தர்யாக நிகழ்வு இடம்பெறுகிறது.

சுவாமிகள் தமது அடியார்கள் இருக்கும் இடமெல்லாம் தேடிச் செல்லுவார். யாருக்கும் அறிவித்தல் கொடாமல் இருந்தாற் போல் ஒரு அடியவருடைய வீட்டில் தோன்றுவார். இவருடைய வருகையை அறிந்த அடியவர்கள் பலரும் இங்கு வந்து கூடுவர். அவர்களுக்கெல்லாம் பல நல்லுபதேசங்களைக் கூறுவார். சில சமயம் கண்மூடிச் சிவயோகத்திலே ஆழ்ந்து விடுவார். கூட இருக்கும் அன்பர்களும் தியானத்தில் மூழ்கி ஆனந்தம் பெறுவர்.

இவர் அருளிய நற்சிந்தனைப் பாடல்கள் ஆன்மீகப் பசிக்குத் தீனிபோடும் அற்புதமான பாடல்கள். அருளையே தாரகமாகக் கொண்டு பாடப்பெற்ற தோத்திரப் பாடல்கள் நற்சிந்தனையிலே காணப்படுகின்றன. ஈழம் வாழ் சைவப் பெருமக்களின் தேசக் கோயிலாகத் திகழும் நல்லூர் முருகன்மீது பாடிய பாடல்கள் ஒரு பூங்கொத்துப்போன்று இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன.

தனது வாழ்வின் இறுதிக் காலத்தில் இரண்டு வருடங்கள் சுவாமிகள் கொழும்புத் துறை ஆச்சிரமத்தைவிட்டு எங்கும் சென்றதில்லை. சுவாமிகளின் பூதவுடலை எந்த நேரத்திலும் உதறித் தள்ளலாம் என்று அடியார்கள் எதிர் பார்த்தனர். 24.03.1964 செவ்வாய்க்கிழமை அதிகாலை ஆயிலிய நட்சத்திரத்தில் சுவாமிகள் மகா சமாதி அடைந்தார்.

(தொடரும்...

# பவித்திரம் பெண்களுக்கு வலது கையிலா? இடது கையிலா? எது சரி?

– திருமதி மனோன்மணி குலசிங்கம் அவர்கள் –

எமது சைவ சமயம் மிகத் தொன்மை வாய்ந்தது. அதனோடு கூடிய சைவ மரபுகளும் சித்தாந்தங்களும் கூடத் தொன்மை வாய்ந்தவைதான். அதுமட்டுமல்ல அவை அழியாத, மாறாத தன்மை கொண்ட விதிமுறைகளையும் தன்னுள் அடக்கியதாகும். காலத்துக்குக் காலம் ஏற்படும் புறக்காரணிகளால் நாகரிகங்களும் ஆடைகளும் பழக்க வழக்கங்களும் மாறி வருவதுபோல் சமய விதிமுறைகள் மாறுவது என்பது அத் தொன்மைக்குப் பங்கம் விளைவிப்பதாகும். அவை எம் இரத்தத்தில் உடம்பில் உயிரில் கலந்து பின்னிப் பிணைந்து விட்ட மரபுகளாகும். அவற்றை எம் விருப்பத்திற்கேற்ற விதமாக மாற்ற நினைப்பது எவ்விதத்தில் பொருத்தமானது.

பவித்திரம் என்பது மிகப் புனிதமானது. அதனாலேயே அதற்கு அப்பெயர் வந்திருக்க வேண்டும். சைவமக்கள் மேற்கொள்ளும் எல்லாச் சமயக் கிரியைகளுக்கும் சுப அசுப கைங்கரியங்களுக்கும் பவித்திரம் அணிவது கட்டாயம் என்பது ஆகம விதிகள் அறிந்த பெரியோர்கள் கூற்றாகும்.

பவித்திரம் எனப்படுவது மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்படுவதாகும். கிரியைகள் செய்யும்போது மனம் வாக்குக் காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றும் காத்தலே இதனை அணிவதன் நோக்கம் என்று காமிகாமகத்தில் கூறப்படுகிறது. தேவகாரியங்கள், பித்ருகாரியங்கள், தகனம் மாசிகம் முதலிய வெவ்வேறு விதமான காரியங்களுக்கு வெவ்வேறு வகையான தர்ப்பையிலான பவித்திரத்தைச் சிவாச்சாரியார் வழங்குவார். அதனை அணிந்த பின்பு கீழேயோ வேறெங்குமோ கழற்றி வைக்காமல் அதன் பவித்திரத்தை (புனிதத்தைப்) பேண வேண்டும்.

இப்பவித்திரத்தை மோதிர விரலில் அணிய வேண்டும் என்பது விதியாகக் கொள்ளப்படுகிறது. ஆண்களுக்கு வலது கையிலும் பெண்களுக்கு இடது கையிலும் மோதிர விரல் அமைந்துள்ளது. இதயத்திற்கும் இவ்விரல்களுக்கும் பிணைப்பு இருப்பதாக விஞ்ஞான ஆய்வுகளும் நிரூபிக்கின்றன.

எம்மை ஆளும் ஈசன் அர்த்தநாரீஸ்வர வடிவத்தில் தனது இடப்பாகத்திலேயே உமாதேவியாரை அமர்த்தியுள்ளார். இன்னும் ஆண் தெய்வங்களின் இடப்புறத்திலே பெண் தெய்வங்கள் வீற்றிருப்பதையும் நாம் காணக் கூடியதாக இருக்கிறது. ஆலயக் கிரியைகளின் போது அம்மனுக்கு இடது கையிலேயே காப்புக் கட்டப்படுகிறது.

திருமண வைபவங்களிலும் திருமணம் செய்த பின்னர் ஆணின் இடப்பாகத்திலேயே பெண் அமர்வது சம்பிரதாயமாக உள்ளது. மணப்பெண்ணின் இடது கையிலேயே மணமகன் மோதிரம் அணிவிப்பதும் மணமகனின் வலது கையைத் தனது இடது கையினால் பற்றியே மணமகள் வலம் வருவதும்கூட எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். திருமண வைபவங்களில் மணமகனையும் மணமகளையும் சிவன் பார்வதியாகவே உருவகித்து சம்பிரதாயச்

சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. கைரேகை சாஸ்திரம் பார்ப்பவர்களும் நாடி ஜோசியம் சொல்பவர்களும்கூட பெண்களுக்கு இடது கையையே பயன்படுத்துகிறார்கள். எல்லா வற்றிற்கும் மேலாக "கைகால் கூப்பித் தொழுமின்" என்ற வாக்கிற்கேற்ப எம்பெரு மானை வழிபட வேண்டுமானால் வலது கையையும் இடது கையையும் சேர்த்தே கூப்பித்தொழ முடியும். இது சிவமும் சக்தியும் சேர்ந்தது போலாகும். இறுதியில் இடது கையையும் சேர்த்துத் தட்டியே வழிபாட்டையும் நிறைவு செய்கிறோம்.

இந்நிலையில் பழைமையைப் பேணு பவர்களும் புதுமையில் நிறைந்தவர்களு மாகப் பல்வேறு விதமாக ஆலயங்களுக்கு வரும் அடியவர்கள் ஏதோ ஒரு விதத்தில் உள்ளத்தால் இறைவனை இறைஞ்சும் விதத்தில் ஒத்த தன்மையில்த்தான் இருக் கின்றார்கள். ஆனால் அங்கே சிவாச்சாரியார் களால் வழங்கப்படும் புனித பவித்திரத்தை அணியும்போது பெண்கள் எவ்விரலில் அணி வது என்ற தடுமாற்றத்திற்கு உள்ளாவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் அதனை ஏன் அணிகிறோம்? அதன் முக்கியத் துவம் என்ன என்பதை உணராமல் ஏதோ ஒரு கையில் அணிந்து தம் வேண்டுதல் களைச் செய்வதையும் காண்கிறோம். இதற்கு ஒரு முக்கிய காரணம் என்னவெனில் ஆலயத்திற்கு ஆலயம் வெவ்வேறான வழி காட்டுதல்கள் இடம்பெறுவதேயாகும். "எப்படியும் வாழலாம்" என்பது பகுத் தறிவுள்ள மனிதனுக்கு உரிய பண்பு அல்ல. "இப்படித்தான் வாழ வேண்டும்" என்பதே மனித குலத்திற்கு உரிய ஒரு உன்னதமான நெறியாகும். அதுவும் சைவசமயிகளாகிய நாம் ஆதிச் சைவநெறி முறைகளை அறிந்து முறையாகப் பின்பற்றி வாழ்வதிலேதான் எமது சமயத்துவம் நிலைபெறும்.

எனவே சைவப் பெரியோர்களும் நிறு வனங்களும் இது விடயமான சரியான ஒரு தீர்வை சைவப்பெருமக்களுக்கு உரிய காரணங் களோடு விளக்குவது சாலப் பொருத்தமான தாக இருக்கும். அறியாமை, விளக்கமின்மை காரணமாக எமது பாமரமக்கள் எது சரி என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள். சைவ சமயி கள் நாம் அனைவரும் சமயத்தால் எப்படி ஒன்றுபட்டு உள்ளோமோ அதேபோல் சமய விதிமுறைகளாலும் ஒன்றுபட உதவி செய்ய வேண்டும். ஏனைய சமயங்களைப்போல் எமக் கென்றும் ஓர் உன்னத சமயம் உண்டு. அதில் நாம் அனைவரும் ஒத்த ஆகமவிதிகளைப் பின்பற்றி தெரிந்தோ தெரியாமலோ இதுவரை விட்ட பிழைகளைத் தவிர்த்து ஒரே சமயத்தவர் களாக வாழத் தற்போது வாழ்ந்து கொண் டிருக்கும் எம் சமயப் பெரியோர்கள் வழி காட்டி நம் சமயத்தையும் சமுதாயத்தையும் மேன்மையுறச் செய்ய வேண்டும்.

---

**புகழ் ஆசை**

துறவி ஒருவரை அரசன் ஒருவன் சந்தித்தான். துறவியிடம் "என்னிடம் நூறு பொற்காசுகள் உள்ளன. இதில் முப்பது காசுகள் தருகிறேன். தாங்கள் என்னைப் புகழ வேண்டும்!" என்றான். அதற்குத் துறவி, "நீ உன்னுடைய காசுகளை நியாயமாகப் பங்கிடாதபோது நான் எப்படி உன்னைப் புகழ்வது?" என்றான், "சரி ஐம்பது காசுகள் தருகிறேன்" என்றான் மன்னன். "நாம் இருவரும் சமமாகி விடுவோமே! அதனால் நான் உன்னைப் புகழமாட்டேன்" என்றார் துறவி. "இந்தாருங்கள் நூறு காசுகள். இதற்குப் பிறகாவது என்னைப் புகழ்வீர்களா?" என்றான் மன்னன். துறவி சிரித்துக்கொண்டே, எல்லாப் பொற்காசுகளும் என்னிடம் இருந்தால், நான் உன்னைப் புகழ வேண்டிய அவசியமே இல்லையே!" என்றார். புகழ் என்பது தானாக வரவேண்டும் என்பதைப் புரிந்து கொண்டான் மன்னன்.

-பக்தி-

*எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது.*

# மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

– திருமதி இந்திரா திருநீலகண்டன் அவர்கள் –

தேடுகின்ற ஆனந்தச்சிற்சபையின் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே! வாதவூர் நாயகனே!
மாசகன்ற நீ திருவாய் மலர்ந்த தமிழ் மாமறையை நாம் சுவைக்க
இந்துத் தமிழனாக இப்பூவுலகில் தடம் பதிக்கச் செய்த எம் பெற்றோருக்கு
முதற்கண் எம் நன்றிகள்.

**கல்லையும் மென்கனியாக்கும் திருவாசகம்**

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!

நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்தீஞ்சுவை கலந்தால் கிடைக்கும் சுவையைத்தான் திருவாசகங்கள் உள்ளே சென்று ஊன்கலந்து உயிர் கலந்து தெவிட்டாது தித்திக்கின்றது என்கிறார் வடலூர் வள்ளலார் சுவாமிகள். கல்லையும் உருக்கி மென்கனியாக்கும் தன்மை மணிவாசகரின் திருவாசகத்துக்குரிய தனிச்சிறப்பு. ஏன் கீழ்ப்பறவைச் சாதிகளும் பொல்லா விலங்குகளும் கூட இவற்றைச் செவிமடுத்ததும் மெய்மறந்து போகின்றனவாம்.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே!

என்று மணிவாசகரைப் போற்றிப் புகழ்ந்து பாடுகின்றார் வள்ளலார்.

"திருவாசகத்துக்குருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற உண்மையை மொழி தெரியாது, சமயம் தெரியாது வெள்ளை இனத்திலே பிறந்த ஜீ.யூ. போப் என்பவர்கூட உண்மையாக்கினார் என்றால் திருவாசகத்தின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ! இந்த அடிகளைப் பார்க்கும்போது,

"..... அனைத்தெலும் புள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி"

*தர்மத்தைச் செய்யுங்கள் கர்மத்தைச் செய்யாதீர்கள்.*

"..... காணொணாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே"
"இரும்பு தரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்தென்
என்புருக்கி கரும்பு தரு சுவை எனக்குக் காட்டினை...."

இதுபோன்ற பாடல்களால் அவர் ஈர்க்கப்பட்டார் போலும். எனவே திருவாசகத்தின் பெருமையைச் சொல்லில் விளக்கமுடியாது. ஓதித்தான், உண்மைதான் என்பதை உணர முடியும்.

தேனமுதத் தமிழ் மொழியாம் செம்மொழியில் மணிவாசகரால் எமக்குக் கிடைக் கப்பெற்ற ஒவ்வொரு வாசகமும் மாணிக்கக் கற்கள் போன்றவை. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குபவை. இதை ஓத ஓத மேலும் திருவாசகத்தில் கூடிய நாட்டம் அதி கரிக்கும். இதனை ஓதுபவர்களையும், ஓதக் கேட்பவர்களையும் கூட மெய்மறக்கச் செய்து அதற்குள் மூழ்க வைக்கும் தன்மை நிறையப் பெற்றது இத்திருவாசகம். இத்தகைய பெருமை பொருந்திய திருவாசகத்தை இறைவன் வாதவூரர்மூலம் எமக்களித்தது, "உலக வாழ்க்கையை மெய்யென்று எண்ணி அதற்குள் மூழ்கிக் கிடக்கும் மக்களை அதைவிட்டு வெளியே வந்து எது உண்மை என்று உணர்ந்து உய்வு பெறுவதற்கே" என்பதாம்.

மன்னன் ஆணைப்படி குதிரை கொள்ளச் சென்ற மணிவாசகர் கோகழி என்கின்ற திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் ஞான குருவாக வீற்றிருந்த முழுமுதற் பரம் பொருளின் அருள் பார்வை பட்டதும் தன்னை மறந்து தன்நாமம் கெட்டு மன்னன் இட்ட வேலையை மறந்து, ஆனந்தக் கூத்தாடி

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே!

என்று தன்னையே முழுமையாக ஒப்படைத்து சரணாகதி அடைந்தார். (அந்நிலையில்) திருமாலும் பிரமனும் காணா மலர் பாதம் தன் தலைமேல் நட்டமையால் தன்னை இழந்த நிலையிலே மணிவாசகங்கள் வெளிவரத் தொடங்கின. தன்னை ஆட்கொண்ட கூத்தன்மேல் கசிந்து கசிந்து, உருகி உருகி, உருக உருக ஒவ்வொரு தடவையும் சொல்லோவியமாக சொல்லழகும், பொருளழகும் ஒன்றையொன்று விஞ்சிநிற்க எழுந்த இவ்வாசகங்கள் சிகரத்தின் உச்சியின்மேல் மிளிர்ந்து நிற்கின்றது. மணிவாசகர் தன்னை இறைவன் ஆட்கொண்ட வண்ணத்தை எத்தனையோ பாடல்களில் வெளிப்படுத்துகின்றார். ஒரு பாடலைப் பார்க்கின்,

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேன் உனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே!

*கொடுப்பதைவிட கொடுக்கும் முறையே முக்கியமானது.*

இதனை "வாதவூரர் பாட சிற்றம்பலவன் எழுதியதென" அந்தச் சிற்றம்பலவனே கைச்சாத்திட்டுத் தில்லைக் கோயில் படியில் வைத்து மறைந்தருளினார். எனவே இது சைவப் பெருமக்களுக்குக் கிடைத்த பெருநிதி.

இவ்வாசகங்கள் அறுநூற்று ஐம்பத்தெட்டுப் பாடல்களை அடக்கி ஐம்பத்தொரு பதிகங்களாக அமைந்துள்ளன. இவற்றுள் இருபது பதிகங்களை இறைவனால் தான் ஆட் கொள்ளப்பட்ட திருத்தலமாகிய திருப்பெருந்துறையிலும், தில்லைக் கூத்தன் திருமுன் இருபத்தைந்து பதிகங்களையும், திரு அண்ணாமலையான்மேல் இரண்டு பதிகங்களையும், திரு உத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம், திருத்தோணிபுரம், திருவாரூர் இவற்றில் ஒவ்வொன்றுமாகப் பாடியருளினார். இவ்வரிய வாசகங்களைத் தமிழனாகப் பிறந்த ஒருவனால்த் தான் முழுமையாக (பொருளும் விளங்கி) ரசிக்க முடியும். தமிழ் தெரியாத ஒரு தமிழனால் இதன் இனிமையை நைந்து நைந்து உருகும் தன்மையை ரசிக்கவோ உணரவோ முடியாது. எனவேதான் இது சைவனாகப் பிறந்த தமிழனுக்குக் கிடைத்த பேரருட் பிரசாதம். தமிழ் வராது என்று சொல்லும் தமிழனுக்கு எட்டாக்கனி.

எனவே நாம் சிறந்த ஒரு சைவ சமயியாய் பிறந்ததில் பெருமை கொள்ள வேண்டும். "மானிடப் பிறவி எடுத்ததே இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பதற்கிணங்க சிறிது கால பூவுலக வாழ்க்கையை முறைப்படி வாழ்ந்து உலகக் கடமை யுடன் இறைவனையும் போற்றித் துதித்து அவனருட்கடாட்சம் பெற, இத்திருவாசகம் ஒரு சிறந்த அருட்பாதை என்றே கூறலாம்.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

எனவே நாம் இந்நிதியைப் பெறவேண்டுமாயின் முழுமையாக ஓதிவரல் வேண்டும். அத்துடன் இசைஞானமுள்ளவர்கள் பாடும்போது அதைக் கேட்கும் சந்தர்ப்பத்தையும் ஏற் படுத்திக்கொள்ளல் நல்லது. "யாருற வெனக்கிங்கு ஆரயலுள்ளார் ஆனந்தமாக்குமென் சோதி", "தந்ததுன் தன்னை கொண்டது என் தன்னை சங்கரா ஆர் கொலோ சதுரர்", "யாதுநீ போவதோர் வகையெனக்கருளாய் வந்துநின் இணையடிதந்தே" போன்ற பாடல்களைச் செவிவழி கேட்க, கேட்க மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும் ஆர்வமும் ஏற்படும். உதாரண மாக, திரு. கணேசலிங்கம், திரு. ஆரூரன், திருமதி. ஹம்சானந்தி போன்றோரின் இனிய குரலில் இசைக்கப்படும் வாசகங்கள் எவரையும் ஈர்க்கும் தன்மை பொருந்தியவை.

இம்மணிவாசகங்களால் அடியேனும் கவரப்பட்டேன். அதனால் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், ஆத்ம திருப்தியையும் தங்களுடன் பகிர்ந்துகொள்ள விழைகின்றேன். பதினாறு வயதினிலே திருவாசகத்தில் நாட்டம்கொள்ளத் தொடங்கினேன். O/L இல் சமய பாடத்தில், பாடத்திட்டத்திற்குரிய திருவாசகப் பதிகங்களைப் படிக்கும்போது திருவாசகப்

பாடல்களில் கூடிய நாட்டம் ஏற்பட்டது. அதிலிருந்து வானொலியில் ஒலிக்கும்போதும் விரும்பிக் கேட்பேன். அந்த நாட்களில் உலகத் தலைவர்கள் இயற்கையெய்தினால், திருவாசகங்களை சோக கீதமாக ஒலிபரப்புவார்கள். திரு. மாணிக்கவேல், திரு. திலகநாயகம் போல், திரு. நாகராஜா போன்றோரின் குரலில் ஒலிக்கும் வாசகங்கள் திரும்பத் திரும்பக் கேட்டாலும் தெவிட்டாது. அவற்றை பதிவுபண்ணி வைத்தும் போட்டுக் கேட்பேன். எங்கு திருவாசகம் பாடக் கேட்டாலும் இன்னும் பாடமாட்டார்களா என்று தோன்றும். இவ்வாறாகத் திருவாசகத்தில் ஈடுபாடு வரத்தொடங்கியது.

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே.

என்று வாழ்க்கைச் சக்கரமும் சுழன்று குடும்பம், பிள்ளைகள் என்று வந்து பிள்ளைகள் ஓரளவு ஆளானபின் திருவாசகத்தில் கூடிய நாட்டம் செலுத்தக்கூடியதாகவிருந்தது.

பரந்துபல் ஆய்மலர் இட்டுமுட் டாதடி
யேஇறைஞ்சி
இரந்தவெல் லாம்எமக் கேபெற லாம்என்னும்
அன்பருள்ளங்
கரத்துநில் லாக்கள்வ னேநின்தன் வார்கழற்
கன்பெனக்கு
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை ஏத்த
முழுவதுமே

என்று "இறைவனே நீ என் உடலிடங்கொண்டாய் நானிதற்கிலன் ஓர்கைம்மாறே" என்று அவரின் மணிவாசகங்களை அனுபவிக்க வைத்த மாதொரு பாகனுக்கு என்ன செய்ய லாம் என்று அவனிடமே விண்ணப்பிக்க

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

என்ற அவன் அருள் நோக்கின்படி திருவாசக முத்துக்களில் சிலவற்றை எடுத்து மாலையாக்கி ஒரு சிறு நூலாக வெளியிட்டால் அதைப் படிப்பவர்களும் பயனடைவார்களே என்று எண்ணம் உதித்தது. அதன்படி சில முத்துக்களை எடுத்து மாலையாக்கி "திருவாசகத் தேன் துளிகள்" என்ற பெயரில் ஆயிரத்து தொழாயிரத்து தொண்ணூற்றொன்பதாம் ஆண்டு பொன்னம்பலவாணேசர் முன்னிலையில் வெளியிட்டோம். அதன்பின் இரண்டாயிரத்து இரண்டில் மணிவாசகர் தன்னை நாயாகப் பாவித்து பாடிய ஐம்பத்து இரண்டு பாடல்களை உள்ளடக்கி

*நேர்மையானவர்களிடம் அதிகம் பணிவு இருக்கும்.*

நூறு பாடல்களாக அதே பெயரில் வெளியிட்டோம். இன்னும் மோகம் தீரவில்லை. மணிவாசகங்களைத் தந்த மணிவாசகரின் மேல் பதிந்த ஈர்ப்பால் திரும்பவும் நூறு பாடல் களைப் பொறுக்கி எடுத்து இராமலிங்க வள்ளலார், அவரைப் போற்றிப் பாடிய பாடல்களையும் சேர்த்து அவரின் அழகிய படத்துடன் தாயுமானவர் (திருச்சி) கோயிலில் இருக்கும் வில்வத் தொண்டர் சாருமாமுனிவரின் முன்னுரையுடன் இரண்டாயிரத்து ஆறில் அச்சிட்டு வெளியிட்டோம். ஈற்றில் திருவாசகங்கள் முழுவதையும் (658) தொகுத்து திருவாசகப் புத்தகமாக வசந்தா அம்மாவின் ஆசியுடன் வெளியிட்டு நிறைவு கண்டோம். இதைக் கண்ட லண்டனிலுள்ள ஓர் அன்பர் சுவாமி சித்பவானந்தரின் திருவாசகத்தைப் பதித்துத் தரும்படி (சொல் பிரிக்காதது) கேட்டிருந்தார். அதையும் செய்து கொடுத்து திருவாசகம் என்ற இனிய பதிப்பில் பூரண திருப்தியும் அளவிலா மகிழ்ச்சியும் அடைந்தோம். கொஞ்சம் தமிழில் ஆர்வம் இருந்தபடியால் என் மூலமே சகலதையும் தொகுத்தோ, முழுப்பதிப்பாகவோ, பிழை திருத்தமும் செய்யவைத்து தன் திருவாசகத்தையும் வேறு சில தொகுப்புக்களையும் (தேவாரம், பிள்ளையார் கதை, திருப்புகழ் போன்ற) வெளியிட்டு அனேகருக்குப் பயன்படச் செய்த கைலாயவாசனின் திருவிளையாடலை எண்ணி எண்ணி வியக்கின்றோம். எமது சமயத்துக்குத் தன்னாலான உதவிகளைச் செய்துவரும் எனது கணவரும் (அச்சகத் தொழில் செய்தபடியால்) எனது வேண்டுகோளை மகிழ்வுடன் ஏற்று நிறைவேற்றி வைத்ததை யும் நான் போற்ற வேண்டும்.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

அத்துடன் நில்லாது ஆனந்தக் கூத்தனின் அருட்கடாட்சத்தில் இதுவும் ஒன்று. முதலாவது பதிப்பில் ஒரு புத்தகத்தைப் பெற்றுக்கொண்ட ஓர் அன்பர் (இடைக்காடு திரு சுவாமிநாதன் இரண்டாயிரம் ஆண்டில் திருக்கைலாய தரிசனம் செய்தவர்) புத்தகம் அச்சிட்ட பதிப்பகத்தைப் பார்த்து "லஷ்மி அச்சகம்" எங்கே என்று தேடி வந்து எங்களுடன் அறிமுக மானார். அப்புத்தகத்தை அதே பெயரில் "இடைக்காடு இந்துநெறிக் கழகம்" சார்பில் பதிப்பித்து வெளியிட்டார். அவருடன் இரண்டாயிரம் ஆண்டு திரு. துரைராஜா குடும்பத்தினர் நடாத்தும் சபாரத்தினம் சுவாமிகளின் குருபூஜை விழாவிற்குச் சென்றிருந்தோம். அங்கு பலர் அவரவர் குரலுக்கேற்ப திருவாசகத்தை ஓதிக்கொண்டிருந்தார்கள். திருவாசகத்தை விரும்பிக் கேட்கும் எனக்குச் சொல்லவா வேண்டும். விழா முடிந்து வீடு திரும்பும்போது அவரிடம் கேட்டேன், "இப்படி நாங்களும் வீட்டில் வைக்கலாமா?" என்று, உடனே அவர் "ஓம்" "ஓம்" என்று "திருவாசகத்தை முற்றும் ஓதி திருவமுது கொடுக்கலாம்" என்றார். அன்றுதான் எனக்குத் தெரிந்தது, "திருவாசகம் முற்றும் ஓதுதல்" என்று ஒன்று உள்ளது என்று. திருவாசகத்தை ஆர்வமுடன் செவிமடுப்பது பற்றி சபாரட்ணம் சுவாமிகளும் எங்கள் மேல் அருள் நோக்கம் செய்தார் போலும், அந்த வருடமே சுவாமிகளின் அருளால் வீட்டில் முற்றோதல் வைத்துத் திருவமுதும் கொடுத்து மகிழ்ச்சியடைந்தோம். அன்று தொடங்கிய முற்றோதல் பதினாறு வருடங்களாகத் தொடர்ந்து நடாத்துவதற்கு வழிகாட்டிய சுவாமிநாதன் ஐயாவுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளோம். அத்துடன் அந்த நிகழ்ச்சியில் வாய் திறக்காமல்

மற்றவர்கள் பாடுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களையும் கூட வாய் திறந்து பாட வைத்த பெருமையையும் சுவாமிநாதன் ஐயாவையே சாரும். அவரால் வாய்திறந்து ஓரளவாவது பாடிக்கொண்டிருக்கின்ற அனைவரும் (அடியேனும்) அவரையும் அவரது மனைவி திருமதி அருளம்மாவையும் மறக்க முடியாது. அதைவிட அவர்கள் எமது சமயத்துக்குச் செய்த தொண்டுகளும் அளப்பரியது.

அத்துடன் இன்னொன்றையும் கூற விழைகின்றேன். திருவாசகத்தில் எமக்கிருக்கும் ஆர்வத்தைக் கண்டு மகிழ்ந்தோ என்னவோ, மணிவாசகரும் ஆனி மாதத்தில் வரும் மக நட்சத்திரத்தில் தன் குருபூஜையை சரஸ்வதி ஹோலில் எங்கள் உபயமாகச் செய்யும்படி (2002 என்று நினைக்கிறேன்) திருவுளம் கொண்டு, ஆறுமுகம் ஐயாமூலம் (ஈழத்துத் திருநெறிமன்றச் செயலாளராக இருந்தவர்) அருள்புரிந்ததை எண்ணி வியக்கின்றேன். இவ்வாறாகப் பாதி மாதொடு கூடிய பரம்பரன் தன் திருவாசகத்தேனை அருந்தச் செய்து "மென்மலர்க் கழல் காட்டி எம்மையும் ஆண்டு தன்அடியார் அடிக் கூட்டிய அதிசயமும் அறியேனே! அத்துடன் திருவாசகத்தின் மேலுள்ள நாட்டத்தை நல்வழியில் நடைமுறைப்படுத்த "மறந்தேயும் தன்கழல்கள் நான் மறவாவண்ணம்" தன் கருணை மழையைப் பொழிந்து வழி நடாத்திக்கொண்டிருக்கும் வஜிராப்பிள்ளையார் (பம்பலப்பிட்டி) பூங்கழல்கள் பணிந்து நிற்கின்றேன்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ!

எனவே தேனினும் இனிய இத்திருவாசகத்தை ஓதிவருதல் சாலச்சிறந்தது என்பது என் அபிப்பிராயம். திருவாசகம் எங்கு ஓதப்படுகின்றதோ அங்கு சென்று செவிமடுக்க அதில் ஆர்வம் ஏற்படும். இறைவன் மேல் கூடிய நாட்டம் செல்லும். நல்ல வாழ்க்கை முறை ஏற்படும். நல்லொழுக்கம் பண்புகள் அதிகரிக்கும். நாம் கோவிலுக்குப் போவது அதைத்தா, இதைத்தா, என் கவலையைப் போக்கு என்று கேட்கத்தான் என்று சொல்வார்கள் உண்டு. ஆனால் திருவாசகப் பாடல்களைப் பாடினால் இப்படியான சிந்தனைகள் வராது. இறைவனைத் தேடுவது போலத்தான் இருக்கும். இவன் என்னடா திருவாசகத்தால் சும்மா புலம்பிக்கொண்டிருக்கிறானே என்று (என்னை நோக்கிப் பாடுகின்றானே) அவனே நம்மீது இரங்கி அருள் புரிவான். இறைவனைப் போற்றி வணங்கி நற்பேறடைய "மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே" என்ற திருநாவுக்கரசரின் வேண்டுதற்படி கிடைத்தற்கரிய மனிதப் பிறவியை நாம் நல்வழியில் வாழ்ந்து அவன் அருளைப் பெற்றுய்ய, நீர்க்குமிழி போன்ற வாழ்க்கையை மெய்யென்று எண்ணி அதன்பின்னே ஓடாமல், திரும்பி ஆன்மீகத்தைத் தேடி நற்பேற்றினைப் பெற திருவாசகங்கள் சிறந்த வழியைக் காட்டும் என்றால் மிகையாகாது.

எனவே இதனை சைவப் பெருமக்கள் செவிமடுக்கச் செய்வது, அனேகரை திரு வாசகத்தில் ஈடுபாடுகொள்ள வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. அதற்கான வழிவகைகளை இந்துப் பெருமக்கள் கருத்தில் கொண்டு நடந்தால் எமது சமயம் மேலும் எழுச்சி பெற வாய்ப்புண்டாகும். கோவிலில் பூஜைகள் ஆரம்பமாவதன்முன் அபிஷேகம் முடிந்து அலங்காரம் செய்யும் வேளையில், பூஜைகள் முடிந்தபின், சாமி சுற்றும்போது, அன்னதானம் நடைபெறும்போது,

சமய விழாக்கள் ஆரம்பமாவதற்கு முன் என்று இவ்வாறாகப் பல வழி களில் சங்கீத ஞானமுள்ளோர் பாடியவற்றை ஒலிபரப்புச் செய்தல் நல்லது. திருவாசகத்திற்கு மட்டும்தான் செவிமடுத்த உடனேயே தன்வசப்படுத்தும் தன்மை உள்ளது.

இவ்வாறு செய்யும்போது திருவாசகம் என்றால் என்ன என்று தெரியாதவர்களும்கூட அந்த இசையில் மயங்கி திரும்பத் திரும்பக் கேட்கும் ஆர்வமும் ஏற்படும். இதைவிட கல் லைக் கும்பிடுகிறார்கள் என்று எமது சமயம் பற்றிய விளக்கம் தெரியாது திசைமாறி பெற்ற தாய் தந்தையரை மறந்து வேறு தாய் தந்தையரைத் தேடுபவர் போன்றோரையும் தம்வசப்படுத்தி இழுத்து வேறு மார்க்கம் செல்லாது பாதுகாக்கும் தன்மையும் கிடைக் கப்பெறும்.

"தேனமுதத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியாரின் கூற்று இப்போ நனவாகிக் கொண்டிருக்கிறது. எங்கள் தமிழ் இனம், உடன்பிறப்புக்கள், உற்றார், சுற்றம் என்று கொடூர யுத்தத்தின் பாதிப்பால் தாய் மண்ணை விட்டுத் தொலைதூரம் சென்று அந்நிய தேசத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் பாரதியாரின் கூற்றை உண்மையாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம். எமது இனிய தமிழ் உலகெங்கும் ஒலிக்கின்றது. அத்துடன் எமது கலை, கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை முறைகள் என்பவற்றை மாற்று இனம்கூட விரும்புமளவிற்கு எமது மக்கள் அந்தந்த இடங்களில் எழுச்சிபெறச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே எமது சமயமும் அங்கு குன்றாமல் மேலோங்க வேண்டுமாயின் மேற்சொன்னபடி செவிமடுக்கச் செய்தால் அவர்களுக்குத் தமிழிலும் ஆர்வம் ஏற்படும். ஆன்மீகமும் வளரும். ஒரு காலத்தில் செம்மொழியாம் தமிழ் மொழியும் சைவமும் உயர்ச்சி பெற்று கலை, கலாச்சாரமும் மற்றவர் களால் மதிக்கப்பெற்று உயர்நிலை அடையும் என்பதில் ஐயமில்லை. சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க வேண்டுமென்பது தமிழ், சமயம்மேல் பற்றுள்ளவர்களின் ஆர்வம்போல் எமக்கும் உள்ளது. அதற்குத் திருவாசகமும் ஒரு துணையாக இருக்கும் என்றால் மிகை யாகாது.

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

"சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக!"

---

### பலன் தேடா பக்தி

கௌரவர்களின் சூழ்ச்சியால் வனவாசம் சென்ற காலத்திலும் தருமர் இறைவனை வழக்கம்போல் வழிபட்டார். "எப்படி உங்களால் இந்தச் சூழலிலும் இறைவனை அன்போடு வழிபட முடிகிறது?" என்று கேட்டாள், திரௌபதி. அதற்குத் தருமர், "நான் கடவுளிடம் எதையும் கேட்டு வழிபடுவதில்லை. என்னை அவர் எங்கு வேண்டுமானாலும் வைக்கட்டும். எனக்கு அவர் எவ்வளவு துன்பங்கள் வேண்டுமானாலும் தரட்டும். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நான் அவரிடம் அன்பு செலுத்திக்கொண்டேயிருப்பேன்." என்று பதில் தந்தார். பிரதிபலன் எதிர்பாராத அவரது பக்திக்கு இரங்கியே பகவான் பாண்டவர்களுக்கு ஆதரவாக நின்றார்.

-பக்தி-

*பொறுமையைக் கடைப்பிடிப்பது கல்விக்கழகு.*

# அகிலம் போற்றும் ஆச்சிரமம்

– திரு கோபிதாஸ் அவர்கள் –
(மே/மா/ ஹொரனை எதுராகல தமிழ் வித்தியாலயம் – இங்கிரியா)

தமிழின் தனித்துவம் யாழ் மண்ணின்
தன்னிகரில்லா ஆலயமாம் சந்நிதியாம்
ஆற்றங்கரை வேலனவன்
அடியவர்களின் குறை போக்குபவன்

சந்நிதி வேலனின் பெருமைக்கு
சந்நிதியான் ஆச்சிரமம் துணையன்றோ
சந்நிதியான் ஆச்சிரம சேவைதனை
சகலரும் அறிய கூறவந்தேன்

எண்ணில் அடங்கா சேவைதனை
இயன்ற மட்டும் கூறவந்தேன்
ஆன்மீகத் துறையில் அதிக நாட்டம் கொண்டு
ஆன்மாக்கள் உய்ய வழிகூறும் ஆச்சிரமம்

சைவ மதக்குறிக்கோள்கள் யாதென
சர்வதேசம் எங்கும் எடுத்துரைக்கும் ஆச்சிரமம்
பண்பாட்டினை விதைக்கும் ஆச்சிரமம்
பார்போற்ற திகழும் ஆச்சிரமம்

கல்விப் பணிகள் புரியும் ஆச்சிரமம்
கண்டோர்கள் பலர் புகழும் ஆச்சிரமம்
கலை, இலக்கியம் வளர்க்கும் ஆச்சிரமம்
கல்வியியலாளர்களைக் கொண்ட ஆச்சிரமம்

மாதச் சஞ்சிகை ஞானச்சுடரினை
ஞாலம் போற்ற வெளியிடும் ஆச்சிரமம்
ஏழை மாணவரின் அறிவுப் பசியினை
தீர்த்து வைக்கும் சீர்மிகு ஆச்சிரமம்

தானத்தில் சிறந்த அன்னதானத்தை
அகிலம் போற்ற செய்திடும் ஆச்சிரமம்
ஆன்மீகத் துறையை வளர்த்திடும் ஆச்சிரமம்
ஆன்றோர் பலரை உருவாக்கிய ஆச்சிரமம்

கந்தசஷ்டி விரத காலத்தை
கச்சிதமாகச் செய்யும் ஆச்சிரமம்
அறநெறிப் பாடசாலைகளை அமைத்து
ஆன்மீகப் பணி ஆற்றிடும் ஆச்சிரமம்

பாடசாலை மாணவர்களிற்கிடையில்
பல்வேறு போட்டிகள் நடத்திடும் ஆச்சிரமம்
சைவ மகா சபையுடன் இணைந்து
சைவமதை வளர்த்திடும் ஆச்சிரமம்

இயற்கை அழிவுகளின் கோரத் தாண்டவத்தை
போக்க முயன்றிடும் புண்ணிய ஆச்சிரமம்
அன்பு வழிதனை போதித்திடும் ஆச்சிரமம்
அகிலம் போற்ற உயர்ந்து நிற்கும் ஆச்சிரமம்

சேவை மனப்பாங்கினை தன்னகத்தே கொண்டு
சேவைகள் பல புரிந்திடும் ஆச்சிரமம்
இந்துப் பண்பாட்டின் பெருமைதனை
எடுத்துரைக்கும் ஏற்றமிகு ஆச்சிரமம்

ஆற்றங்கரை வேலவனின் ஆச்சிரமம்
அடியவர்களின் குறை போக்கிடும் ஆச்சிரமம்
யாழ் மண்ணின் புறத்தேயும்
பணிகள் பல புரியும் ஆச்சிரமம்

மலையக மக்களின் துயர் துடைப்பதில்
மனம் பதித்து நிற்கும் மாண்புமிகு ஆச்சிரமம்
மோகனதாஸ் சுவாமிகளின் வழிநின்று
வந்தோரை வாழ வைக்கும் ஆச்சிரமம்

அரிய பணிகள் பல ஆற்றிடும் ஆச்சிரமத்தை
அறிவில் சிறிய அடியேன் யான்
வாழ்த்தி வணங்கி விடபெறுகின்றேன்
வந்தனம் கூறி விடைபெறுகின்றேன்.



பதுளை ஸ்பிரிங்வெளி கோட்டக்கொடை ஆறாம் பிரிவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் உட்பட சந்நிதியான் ஆச்சிரமம் சார்ந்தோர்.



கடன்படுதல் துயரத்தை வளர்ப்பதற்கு வழி.




கும்பாபிஷேக நிகழ்வின்போது இடம்பெற்ற நிகழ்வுகள்.




வாழ்க்கை பரிசோதிப்பதற்காக அல்ல; சாதிப்பதற்காக.



சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வில் கலந்துகொண்ட வாசக அன்பர்கள்.



ஒருவன் வெற்றிக்கு அடிப்படையாக இருப்பது ஒழுக்கம்தான்.



சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வில் கலந்துகொண்ட வாசக அன்பர்களுடன் வாராந்த இன்னிசை நிகழ்வில் தமது பங்களிப்பினை ஆற்றிவரும் கலைஞர்கள்.



செடிக்கு அழகு பூக்கள். பெண்ணிற்கு அழகு அடக்கம்.



பங்குனிமாத ஞானச்சுடருக்கு தமது கருத்தை வழங்கிய அன்பர்களைக் கௌரவித்த நிகழ்வு.



நம்பிக்கையே நம் வாழ்வு. அது என்றும் வெற்றி தரும்.

# பாதாரவிந்தம் அடைதல்

ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமி அவர்கள் ஆனந்தா ஆச்சிரமத்தினை நிறுவி அன்னப்பணி புரிந்த காலந்தொட்டு ஆனந்தா ஆச்சிரமத்தின் பணிகளுக்கும் அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளுக்கும் க.கு. கந்தையாபிள்ளை என்ற வர்த்தக நிறுவனத்தின் முகாமையாளராக விளங்கும் திரு க.கு.க. சிவபாலன் அவர்களின் புதல்வன் சிவபாலன் கோகுலதாசன் மறைந்த செய்தியானது அக்குடும்பத்தோடு இணைந்த அன்பர்களின் மனதிற்கு ஆழ்ந்த துயரினை ஏற்படுத்தியுள்ளது.



இறைவழிபாட்டின்மூலம் தனது வாழ்வை மேம்படுத்தி மறைந்த கோகுலதாசனின் ஆன்மா செல்வச் சந்நிதி வேலவனின் பாதார விந்தங்களை அடைந்து சாந்திபெற சந்நிதி வேலவனை வேண்டி, அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

-பேரவையினர்-



# ஞானச்சுடர் 2017 சித்திரைமலர்

## வைகாசிமாத வாராந்த நிகழ்வுகள்

05.05.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "மனம்தான் மனிதன்"

வழங்குபவர் :– திரு பூ. சோதிநாதன் அவர்கள்

(இளை. விரிவுரையாளர்)

---

12.05.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "வழிபாடு"

வழங்குபவர் :– பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்ய சுவாமிகள்

(சின்மய மிஷன், நல்லூர்)

---

19.05.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :– திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

26.05.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

### ஞானச்சுடர் வைகாசிமாத வெளியீடு

வெளியீட்டுரை :– திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள்

(இளை. கிராம சேவகர், பொலிகண்டி)

மதிப்பீட்டுரை :– திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி)

233ஆவது மலர்

பதிவு இல. *QD/82/NEWS/2017*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

